www.padippakam.com

16-30 ஜூன் 2000 ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்

நீதிபதிகள் புனிதர்களா?





## அமைதிப் படையின் இரண்டாவது அவதாரம்?




படிப்பகம்

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## வெளக்குமாறுக்குப் பட்டுக் குஞ்சம்

பா.ஜ.க.வைச் சேர்ந்த மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சரான முரளி மனோகர் ஜோஷிக்கு, அவரின் "அரசியல் - சமூக"ப் பணிகளைப் பாராட்டி, காசியில் உள்ள "பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம்" முனைவர் பட்டத்தை வழங்கி இருக்கிறது. கலாச்சார தேசியத்தையும், பசுவைப் பாதுகாப்பதற்காகவும், அயோத்தியில் இராமர் கோயில் கட்டவும் ஜோஷி ஆற்றிய பணிகளுக்காக இம்முனைவர் பட்டம் வழங்கப்படுவதாக ஒரு பாராட்டுப் பத்திரத்தையும் அப்பல்கலைக்கழகம் தயாரித்திருந்தது. பாபர் மசூதி இடித்துத் தள்ளப்பட்ட வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள கிரிமினல் பேர்வழிக்கு முனைவர் பட்டம் கொடுக்க முன்வந்த அப்பல் கலைக்கழகத்தின் இந்து மதவெறியை அம்பலப்படுத்தி, அப்பல்கலைக்கழக மாணவர்களும், பேராசிரியர்களும் போராடிய பிறகு, பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம் பாராட்டுப் பத்திரம் கொடுப்பதைக் கைகழுவிவிட்டு, முனைவர் பட்டத்தை மட்டும் வழங்கியது.

## சீன 'கம்யூனிச' அரசின் சீரழிவு

தொழிலாளர் தினத்தையொட்டி, சீன அரசு தனது தொழிலாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் ஒருவாரம் விடுமுறை அளித்தது. சீனாவில் இருப்பது கம்யூனிஸ்ட் அரசாயிற்றே, இந்த ஒரு வார காலமும் சீனாவில் ஏகாதிபத்திய ஒடுக்குமுறை - சுரண்டலை எதிர்த்து அரசியல் ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் நடைபெற்றிருக்கும் என யாராவது நினைத்தால், ஏமாந்து தான் போக வேண்டும். "சீனத் தொழிலாளர்களே, இந்த விடுமுறையில் ஜாலியாக சீனாவைச் சுற்றி வாருங்கள்! சந்தையில் கொட்டிக் கிடக்கும் பொருட்களை வாங்கி அனுபவியுங்கள்" என்று நுகர்வு கலாச்சாரப் பிரச்சாரத்தை முடுக்கி விட்டது, சீன அரசு. மே தின விடுமுறையைப் பயன்படுத்திக் கொண்டு, ஒவ்வொரு தொழிலாளியிடமிருந்தும் எப்படியாவது குறைந்தது 7,520 ரூபாயைப் பிடுங்கி, சீனப் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்தி விடவேண்டும் என்பதில்தான் சீன அரசு குறியாக இருந்தது. சிகாகோ தொழிலாளர்கள், முதலாளிகளின் பாக்கெட்டுகளும், அரசாங்கத்தின் கஜானாவும் நிரம்பி வழிய வேண்டும் என்பதற்காகவா போராடினார்கள்?

## தாழ்த்தப்பட்டோரின் மனிதாபிமானம் மேல்சாதி வெறியர்களின் மிருகத்தனம்

உ.பி. மாநிலத்திலுள்ள இந்தௌதி கிராமத்தைச் சேர்ந்த சர்மிளா சிங், தாகூர் சாதியைச் சேர்ந்தவர்; மனவளர்ச்சி குன்றியவர்; கணவனால் கைவிடப்பட்டவர். தனது சகோதரர்கள் அடித்ததால் வீட்டைவிட்டு வந்து விட்டதாகக் கூறிய இவருக்கு, அக்கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோரான ருக்மணியும், அவரது மருமகள் கிருஷ்ணாவும் உண்ண உணவு கொடுத்து, அன்றிரவு தங்கிக் கொள்ள இடம் கொடுத்து, சர்மிளாவைச் சமாதானப்படுத்தி மறுநாள் காலை சர்மிளாவைப் பத்திரமாக அவரது வீட்டிற்கு அனுப்பி வைத்தனர். இந்த உதவிக்கு நன்றி கூறுவது தான் மனிதப் பண்பு. ஆனால், சர்மிளா சிங்கின் குடும்பம், தங்களது சாதி கௌரவத்தை இழிவுபடுத்தி விட்டதாகக் கூறி, ருக்மணியையும், கிருஷ்ணாவையும் செருப்பால் அடித்தும், நிர்வாணப்படுத்தி கிராமத் தெருக்களில் ஊர்வலமாக நடத்திச் சென்றும் அவமானப்படுத்தினர். அக்கிராமத்தில் அதிகமாக வாழும் தாகூர் சாதியினரும், இச்சாதிவெறி தாக்குதலைத் தடுக்க முன்வராமல், கைகட்டி வேடிக்கை பார்த்தனர். போலீசும் பலமுறை இழுத்தடித்த பின்புதான் வழக்குப் பதிவு செய்து, மேல்சாதி வெறியர்களைக் கைது செய்தது.

## அரசின் பாதுகாப்பில் இந்துமதவெறி கொலைக் குற்றவாளிகள்

1987-ஆம் ஆண்டு உ.பி. மாநிலம் மீரட் நகரில் இந்து மதவெறியர்கள் நடத்திய கலவரத்தின் பொழுது, அம்மாநிலத்தைச் சேர்ந்த பிரதேச ஆயுதப் படை முசுலீம்களை நரவேட்டையாடியதை யாரும் மறந்து விட முடியாது. ஹசீம்புரா பகுதியைச் சேர்ந்த 42 முசுலீம்களை, தனது வேனில் அள்ளிப் போட்டுக் கொண்டுச் சென்ற பிரதேச ஆயுதப் படை போலீசு, அம்முசுலீம்களை ஒருவர் பின் ஒருவராகச் சுட்டுக் கொன்று, பிணங்களைக் கால்வாயில் தூக்கி எறிந்தது. 1987-இல் நடந்த இப்படுகொலை தொடர்பான வழக்கு 1996-இல் தான் பதிவு செய்யப்பட்டது. ஆனாலும் கடந்த நான்காண்டுகளில் கொலைக் குற்றஞ் சாட்டப்பட்ட 19 போலீசுக்காரனில் எவனொருவனும் 'நீதி'மன்ற வாசலைக் கூட எட்டிப் பார்க்கவில்லை. 18 முறை பிணையில் வெளிவர முடியாத கைது வாரண்ட் கொடுத்த பின்னும், அப்போலீசார் வேலை பார்க்கும் இடமும், குடியிருக்கும் வீடும் அரசுக்கும், நீதிமன்றத்துக்கும் தெரிந்திருந்தும் யாரும் கைது செய்யப்படவில்லை. இது இப்படியிருக்க, மும்பய் கலவரத்தை விசாரித்த கிருஷ்ணா கமிசன் கொலைக் குற்றஞ் சுமத்திய 10 போலீசு அதிகாரிகளுக்கு மகாராஷ்டிரா மாநில அரசு பதவி உயர்வு அளித்து கௌரவித்துள்ளது.

## வேம்பிற்கு காப்புரிமை அபாயம் நீங்கவில்லை

வேப்ப மரத்தில் இருந்து தயாரிக்கப்படும் ஒருவித பூச்சிக் கொல்லி மருந்திற்கு வழங்கப்பட்டிருந்த காப்புரிமை ரத்து செய்யப்பட்டிருப்பதை, பா.ஜ.க. அரசு தனது சுதேசி சாதனை போல நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளது. சமீபத்தில் தொலைபேசித் துறையிலும், சுரங்கத் தொழிலும் 100 சதவீத அந்நிய முதலீடு நுழையவும், 18 பொதுத்துறை நிறுவனங்களை விற்கவும் அனுமதித்துள்ள இப்போலி சுதேசிக் கும்பலுக்கு இதை அறிவிப்பதற்கு கூடத் தார்மீக உரிமை கிடையாது என்பதே உண்மை. தற்பொழுது ரத்து செய்யப்பட்டுள்ள காப்புரிமை ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டும்தான் பொருந்தும். அமெரிக்கா, ஜப்பான், கனடா நாடுகளில் வேப்ப மரத்தின் மருத்துவக் குணங்களின் மீது வழங்கப்பட்டுள்ள காப்புரிமைகளுக்குப் பொருந்தாது. அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்களுக்கு மட்டும் வேப்ப மரத்தின் மருத்துவக் குணத்தை அடிப்படையாகக் கொண்டு 73 விதமான காப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

* * *

**தண்டிக்கப்பட வேண்டிய போலீசு கொலைக் குற்றவாளிகளுக்கு மகாராஷ்டிரா மாநில காங்கிரசு கூட்டணி அரசு பதவி உயர்வு அளித்துள்ளதை அம்பலப்படுத்தி, மும்பய் நகரில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகள்.**



www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 15

**இதழ் 13 -15**

16 மே 2000 - 30 ஜூன் 2000

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம் : கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


## "சங்க்யா வாஹினி" :
## அமெரிக்க இராணுவ மேலாதிக்கத்திற்கான ஆயுதம்

**வ**ளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பத் துறையில் நாட்டை முன்னேற்றுவது, அனைத்துலக இணையம் (Internet) அரங்கில் நாட்டின் நிலையை உயர்த்துவது என்ற பெயரில், "சங்க்யா வாஹினி" என்ற திட்டம் ஒன்றை ஆளும் கூட்டணி அரசு செயல்படுத்தக் கிளம்பியுள்ளது. "இணைய வலையத்துடன் தொடர்பு கொண்டு, தற்போதைய வேகத்தைவிட 1000 மடங்கு அதிவிரைவாகத் தகவல் பெறும் வகையில் ஏறத்தாழ ரூ. 1300 கோடி செலவில் உருவாக்கப்படும் இத்திட்டம், அமெரிக்காவின் ஐ.யு.நெட் நிறுவனம் மூலமாக செயல்படுத்தப்படும். இந்திய தொலைத் தொடர்புத் துறையும் உயர்கல்வி பல்கலைக்கழகங்களும் இணைந்து 51% பங்கு மூலதனமும், அமெரிக்க ஐ.யு.நெட் நிறுவனம் 49% பங்கு மூலதனமும் கொண்ட கூட்டுப் பங்கு நிறுவனமாக இது செயல்படும். முதற்கட்டமாக 10,000 கி.மீ. தொலைவுக்கு கண்ணாடி இழை தொழில்நுட்பத்தைக் கொண்டு அதிவேக இணையத் தொடர்புக்கு ஏற்பாடு செய்யும். அடுத்த மூன்றாண்டுகளில் நாடு முழுவதையும் இணைக்கும். ஒரு முழு அகராதி அளவுக்கான தகவல்களை ஓரிரு நொடிகளில் அனுப்பும் இணைப்புச் சங்கிலியாக "சங்க்யா வாஹினி" இயங்கும். இதன்மூலம் தொலைதூர தொலைபேசி அழைப்புகள் மேலும் மலிவாகும். அரசின் தகவல் தொடர்புத் துறை உயர்கல்வி - ஆராய்ச்சி நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள், தனியார் தொழில் நிறுவனங்கள், வங்கிகள், பங்குச் சந்தைகள் ஆகியன இணையத்துடன் தொடர்பு கொண்டு, அதிவேகமாகத் தகவல்களைப் பெற இது முதுகெலும்பாக விளங்கும். இதன் மூலம் நாட்டின் கணினி மென்பொருள் ஏற்றுமதி வர்த்தகம் அடுத்த பத்தாண்டுகளில் 10,000 கோடி டாலருக்கு மேல் உயரும். தொலைத் தகவல் வர்த்தகம், தொலைத் தகவல் மருத்துவம், தொலைத் தகவல் விவசாயம் என விரைவுத் தகவல் தொழில் நுட்பத்தால் நாட்டின் உற்பத்தித் திறன் பெருகும். தகவல் தொழில் நுட்பப் புரட்சி யுகத்தில் இந்தியாவில் அறிவுத்திறன் ஆறு பெருக்கெடுக்கும்" என்று இத்திட்டத்தைப் பற்றி ஆட்சியாளர்கள் பிரமிப்பூட்டுகிறார்கள்.

ஆனால், இத்திட்டத்தின் உண்மையான நோக்கம் வேறானது. காஷ்மீர் - கன்னியாகுமரி அதிவேக நெடுஞ்சாலை தரகுப் பெருமுதலாளிகள் - ஏகாதிபத்தியங்களின் வர்த்தக நோக்கங்களுக்காக உருவாக்கப்படுவதைப் போல; ஈரான் - இந்தியா எரிவாயுக் குழாய் பாதை தரகுப் பெரு முதலாளி அம்பானிக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் சேவை செய்ய உருவாக்கப்படுவதைப் போல; இந்தியத் தரகுப் பெருமுதலாளிகள், பங்குச் சந்தை சூதாட்ட அதிபர்களின் அதிவேகக் கொள்ளை இலாபத் தேவைக்காகவும், உலகமயமாக்கலின் பலன்களை அவர்கள் அறுவடை செய்து ஆதாயமடைவதற்காகவும், எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தியாவைத் தனது இரும்புப் பிடியில் வைத்து அமெரிக்க மேல்நிலை வல்லரசு ஆதிக்கம் செலுத்துவதற்காகவும்தான் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் இத்திட்டம் முன்வைக்கப்பட்டபோது அமெரிக்க வல்லரசு கடுமையாக எதிர்த்தது. ஆனால், போக்ரான் அணுகுண்டு சோதனை பற்றிய தகவல் உரிய காலத்தில் கிடைக்கவில்லை என்றதும் உடனடியாகவே வேறு திட்டங்களுக்குத் தடைவிதித்த அமெரிக்கா, இத்திட்டத்தை அமலாக்க அனுமதித்து, ஆர்வம் காட்டத் துவங்கியது. சங்க்யா வாஹினி திட்டத்தின் மூலம் இராணுவ இரகசியங்களை, அது மேலும் விரைவாகவும் ஆழமாகவும் அறிந்து கொள்ள எல்லாக் கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன. இன்னும் சொல்லப் போனால், இத்திட்டத்திற்கான முக்கியமான மூளையாகச் சித்தரிக்கப்படும் அமெரிக்காவில் வாழும் இந்தியரான ராஜ்ரெட்டி, கடைந்தெடுத்த அமெரிக்கக் கைக்கூலியாவார். கார்னீஜ் பல்கலைக் கழகப் பேராசிரியராகப் பணியாற்றிய இவர், அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனின் தொழில்நுட்ப ஆலோசகராகவும் உள்ளார். மற்றொருவரான அருணாசலம், இந்தியப் பாதுகாப்பு அமைச்சக ஆலோசகராகச் செயல்பட்டு, பின்னர் கார்னீஜ் பல்கலைக் கழகப் பேராசிரியராக இயங்கி, இப்போது சங்க்யா வாஹினி திட்டத்தில் முக்கியப் புள்ளியாக உள்ளார். இத்துரோகிகள் மூலம் எஞ்சிய இந்தியப் பாதுகாப்பு இரகசியங்களும் அமெரிக்காவின் காலடியில் வைக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, கணினி மென்பொருள் தொழில் நுட்பத்தில் கணிசமான அளவு முன்னேறியுள்ள இந்தியாவின் தொழில் நுட்பவாதிகளை மலிவான உழைப்பில் கூலிக்கு அமர்த்திக் கொண்டு, அமெரிக்க வல்லரசு ஆதாயமடையவும் ஆதிக்கம் செய்யவும் இத்திட்டத்தின் மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ராபர்ட் கிளைவும் டூப்ளேயும் செய்ததைப் போல, துப்பாக்கிகளும் பீரங்கிகளும் கொண்டு படையெடுக்காமல், எட்டப்பன் - மீர் ஜாபர்களின் வாரிசுகளான ஓட்டுக்கட்சி துரோகிகளின் துணையோடு ஏகாதிபத்திய வல்லரசுகளின் மறுகாலனியாதிக்கமும் மேலாதிக்கமும் மிக வேகமாக நிலைநாட்டப்பட்டு வருகிறது. 1947-இல் நடந்ததைப் போல, அறவழிப் போராட்டங்கள் - பேரங்கள் மூலம் 'சுதந்திரம்' பெற்று இம்முறையும் ஏமாற முடியாது. துரோகிகளைத் தூக்கியெறிந்து, மறுகாலனிய மேலாதிக்கத் தளையறுத்து நாட்டையும் மக்களையும் விடுதலை செய்ய புரட்சிப் போரில் இறங்குவதைத் தவிர இனி வேறு வழியும் கிடையாது.

படிப்பகம்

# ஈழம் மலருமா? இழுபறி நீடிக்குமா?

**யாழ்** தீபகற்பத்தில் நிலைகொண்டிருந்த இலங்கை இராணுவம் வீழ்ச்சியின் விளிம்பில் நிற்கிறது. இலங்கை அரசு அதிகாரபூர்வமாக அமல்படுத்தியிருக்கும் பத்திரிகைத் தணிக்கை முறையோ, இந்தியச் செய்தி ஊடகம் விதித்துக் கொண்டுள்ள சுயதணிக்கை முறையோ, இந்திய - இலங்கை உளவுத்துறையினர் பரப்பிவரும் பொய்ச் செய்திகளோ இலங்கை இராணுவத்தின் வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்திவிட முடியாது.

இப்போது யாழ் தீபகற்பத்தின் மீதான இராணுவக் கட்டுப்பாடு கைமாறுவது முதலாவதோ, முடிவானதோ அல்ல. ஏற்கனவே நான்குமுறை இதுபோன்று நடந்துள்ளது என்கிற உண்மை பலருக்கும் நினைவிருக்காது.

★ சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறையில் இருந்து விடுதலை பெறுவதற்காக ஏறக்குறைய 30 ஆண்டுகாலமாக சமரசவாதிகள் மேற்கொண்ட ஜனநாயக - சட்டபூர்வ முயற்சிகள், போராட்டங்கள், ஒப்பந்தங்களும், தோல்வி அடைந்தபோது, ஆயுதந் தாங்கிய விடுதலைப் போராட்டத்தில் ஈழத்தமிழ் இளைஞர்கள் குதித்தனர். ஏறத்தாழ ஏழெட்டுக் குழுக்கள் தோன்றி, தனிநபர் சாகசச் செயல்களில் ஈடுபட்டனர்.

ஈழ அகதிகள் வருகையைப் பயன்படுத்திக் கொண்டதோடு, பெரிய ஐந்து குழுக்களுக்குள் ஊடுருவிய இந்திய உளவுப் படையான "ரா", அவற்றுக்கு நிதி, ஆயுதம், இராணுவப் பயிற்சியளித்தது. இதைத் தந்திரமாகப் பயன்படுத்திக் கொண்ட விடுதலைப் புலிகள் அமைப்பு சிங்கள இராணுவத்துக்கு எதிராக மட்டுமல்லாது, பிற போராளி அமைப்புகளுக்கும் எதிராக வெற்றிகரமான செயல் தந்திரங்களை மேற்கொண்டு யாழ் தீபகற்பம் முழுவதையும் தனது இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. அப்போது பலாலி விமானத் தளம், காங்கேசன்துறை துறைமுகம், ஆனையிறவு தரைவழி மட்டுமே இராணுவத்திடம் இருந்தது.

★ தெற்கு ஆசிய பிராந்திய மேலாதிக்க நோக்கம் கொண்டிருந்த இந்திரா - இராஜீவ் கும்பலுக்கு சிங்கள - தமிழின முரண்பாடு முற்றிப் போராக வெடித்தது ஒரு வாய்ப்பாக அமைந்தது. ஈழ விடுதலைப் போராளிக் குழுக்களுக்குள் ஊடுருவி, பிளவுபடுத்தி, அவற்றைத் தனது கைப்பாவையாக்கிக் கொண்டு விட்டது. இலங்கைப் பிரச்சினையில் தன்னை ஒரு பஞ்சாயத்துக்காரனாகத் தானே நியமித்துக் கொண்டு, ஈழத்தில் ஒரு பொம்மை அரசை நிறுவி, தனது பிராந்திய விரிவாக்க நலன்களை ஈடேற்றிக் கொள்ள முனைந்தது.

1987-இல் இந்தோ - சிறிலங்கா ஒப்பந்தம் போட்ட கையோடு, நவீன ஆயுதங்களோடு அமைதிப்படை என்ற பெயரில் ஒரு இலட்சம் இராணுவத்தினரை இந்திய இராஜீவ் அரசு ஈழத்தில் இறக்கியது. அது விடுதலைப் புலிப் படையின் 19 முன்னணி தளபதிகளைக் கைது செய்து, சிங்கள இராணுவத்திடம் ஒப்படைக்க முயன்று, அவர்கள் தற்கொலை செய்து கொண்டதைத் தொடர்ந்து புலிகளுக்கும் - இந்திய இராணுவத்துக்கும் போர் மூண்டது. பெரும் எண்ணிக்கையில் படையினரைக் காவு கொடுத்து, யாழ் தீபகற்பத்தின் மீதான இராணுவக்கட்டுப்பாட்டை இந்தியா கைப்பற்றியது.

★ காடுகளுக்குள் புலிகளை விரட்டியதோடு அவர்களைப் பலவீனப்படுத்தி விட முடியும்; இராணுவத் துப்பாக்கி முனையில் நடத்தப்பட்ட தேர்தல்கள் மூலம் நிறுவப்பட்ட தனது கைப்பாவை முதல்வரைக் கொண்டு ஈழமக்களின் ஆதரவைப் பெற்றுவிடமுடியும் என்று இந்திய இராஜீவ் அரசும் படையும் கனவு கண்டன. ஆனால், அந்தக் கனவு பலிக்காமலேயே போய்விட்டது. சிங்கள இராணுவத்தைப் போலவே ஈழத் தமிழர்களைப் படுகொலை செய்வதிலும், பாலியல் வன்முறையிலும் கொள்ளையிலும் இந்திய அமைதிப்படை ஈடுபட்டு ஈழத் தமிழர்களிடமிருந்து முற்றாகத் தனிமைப்பட்டது. அதேசமயம், விடுதலைப் புலிகளின் கொரில்லாத் தாக்குதல்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் பேரிழப்புகளைச் சந்தித்தது.

ஒரு குறுகிய காலத்தில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அமலாக்கிவிட்டு வெளியேறிவிடுவதாகச் சொன்ன இந்திய இராணுவம் ஈழத்துப் புதை சேற்றில் சிக்கிக் கொண்டது. இந்தக் காலத்துக்குள் இந்திய இராஜீவ் அரசின் பிராந்திய ஆதிக்க நலன்களைப் புரிந்து கொண்ட சிங்கள மக்களிடையேயும் எதிர்ப்பு வலுத்தது. இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதில் புலிகளுக்கும் பிரேமதாசா அரசுக்கும் இடையில் இரகசியக்கூட்டு ஏற்பட்டு, புலிகள் இலங்கை அரசிடமிருந்து நவீன ஆயுதங்களும் நிதியும் பெற்றனர். இதனால் ஈழத்தில் பல இராணுவ தோல்விகளைக்கண்ட இந்திய இராணுவம் தலைகுனிவோடு வெளியேறியது. யாழ் தீபகற்பத்தின் இராணுவக் கட்டுப்பாடு மீண்டும் புலிகளின் கைகளுக்கு மாறியது. யாழ் தீபகற்பத்தில் போலீசு, நீதிமன்றம் உட்பட சிவில் நிர்வாகத்தை விடுதலைப் புலிகள் நிறுவினர்.

★ தொடர்ந்த யுத்தத்தினால் இலங்கை அரசுக்கு ஏற்பட்ட அரசியல், பொருளாதார நெருக்கடி, பிரேமதாசா அரசு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.)க்கு எதிராகத் தொடுத்த பயங்கரவாதத் தாக்குதலில் 70,000 இளைஞர்களைக் கொன்றொழித்தது, பிரேமதாசா, லலித்அதுலத் முதலி, ரஞ்சன் விஜயரத்னே, காமினி திசநாயகே, குமாரதுங்கே, கெம்பகடுவே போன்ற அரசியல், இராணுவத் தலைவர்கள் அடுத்தடுத்து அழித்தொழிக்கப்பட்டது, தலைநகர் கொழும்புவின் மீதான பேரழிவுக் குண்டுத் தாக்குதல்கள் ஆகியவை காரணமாக சிங்கள மக்களிடையே ஈழப் பிரச்சினைக்கு அரசியல் - சமாதானத் தீர்வு காண்பதற்கு ஆதரவு பெருகியது. இதைப் பயன்படுத்திக் கொண்டு சந்திரிகா - சிரீமாவோ குடும்பம் ஆட்சியைக் கைப்பற்றியது.

ஈழப் பிரச்சினைக்கு அரசியல் - சமாதானத் தீர்வு காண்பதாகப் புறப்பட்டு, இரண்டு சந்திப்புகளுக்கு ஏற்பாடு செய்தது சந்திரிகா அரசு. ஈழத்தில் இருந்து இராணுவத்தை முற்றாக விலக்கிக் கொள்ள வேண்டும், பொருளாதாரத் தடையை நீக்கி விட வேண்டும் என்ற புலிகளின் கோரிக்கையை ஏற்க மறுத்தது. அதே சமயம் புலிகளின் விருப்பத்துக்கு மாறாக, ஈழத்துரோக அமைப்புகளையும் பேச்சு வார்த்தைக்குள் நுழைத்து, புலிகளின் வலிமையைக் குறைக்கும் நடவடிக்கையில் இறங்கியது, சந்திரிகா அரசு.

இறுதியில் பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டு புலிகளின் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து யாழ் தீபகற்பத்தைக்கைப்பற்றுவதற்கான போரில் இறங்கியது, சந்திரிகா அரசு. இந்திய இராணுவம் ஈழப்போரில் தலையிட்டதில் இருந்து இலங்கை இராணுவம் தன் பலத்தை அதிகரித்துக் கொள்வதற்கான அவகாசம் கிடைத்தது. ஆனால், புலிகளோ தொடர்ந்து போரிட்டுக்கொண்டிருந்தனர். இந்திய இராணுவம் வெளியேறிய கையோடு புலிப்படையிலும் மாத்தையா போன்ற சிலருக்கும் பிரபாகரனுக்கும் இடையிலான முரண்பாடு முற்றி உட்பிரச்சினைகள் தோன்றின. இந்த நிலையில் இலங்கை இராணுவம் "சூரிய ஒளிக்கதிர் நடவடிக்கை" என்ற பெயரில் மூன்று கட்டத் தாக்குதல் போரில் ஈடுபட்டு

www.padippakam.com

வெற்றிபெற்றனர். புலிகள் செயல் தந்திர ரீதியில் யாழ் தீபகற்பத்தில் இருந்து வன்னி காட்டு பிரதேசத்திற்குப் பின்வாங்கினர். இதனால், யாழ் தீபகற்பத்தின் மீதான இராணுவக் கட்டுப்பாடு நான்காவது முறையாக கைமாறியது.

★☆★

இராணுவ ரீதியில் புலிகளைப் பலவீனப்படுத்திப் பேச்சுவார்த்தைக்குச் சம்மதிக்க வைப்பதுதான் தனது நோக்கமென்று கூறி வந்த சந்திரிகா அரசு, யாழ் தீபகற்பத்தைக் கைப்பற்றியதும் அடியோடு மாறுபட்டு பேசியது. இராணுவ ரீதியில் புலிகளை ஒழித்து விட முடியும் என்றும், புதிய அரசியல் சட்டத் திருத்தம் மூலம் ஈழப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியும் என்றும் சாதித்தது. 1987 ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொண்ட அளவு கூட அதிகாரப்பகிர்வு தராத ஒரு வரைவுத் திட்டத்தை இலங்கை அரசியல் கட்சிகள் முன்பு சந்திரிகா அரசு முன் வைத்தது. அதனைக் கூட சிங்கள இனவெறியர்களும், முதன்மை எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் ஏற்க மறுத்து விட்டன.

அதே சமயம் செயல்தந்திர ரீதியில் பின்வாங்கிய புலிகள், தமது இராணுவ பலத்தைத் திரட்டிக் கொள்வதில் முழு மூச்சாக ஈடுபட்டனர். கொழும்பு நகரில் பல மனித வெடிகுண்டுத் தாக்குதல்களை நடத்தி நிலைகுலையச் செய்தனர். பூநகரி போன்ற சிங்கள இராணுவ முகாம்கள் மீது நன்கு திட்டமிட்ட தாக்குதல்களை நடத்தி எதிரிக்குப் பேரிழப்பை ஏற்படுத்தியதோடு, நவீன ஆயுதங்களையும் ஏராளமாகக் கைப்பற்றினர். இப்படிப்பட்ட தாக்குதல்களால் சிங்கள இராணுவத்தினர் கிலிபிடித்துப் போய், சிப்பாய்கள் முகாம்களை விட்டு ஓடிப்போவது அதிகரித்தது. கடந்த சில ஆண்டுகளில் குறைந்தது 20,000 சிங்கள சிப்பாய்களும் அதிகாரிகளும் ஆயுதங்களைப் போட்டு விட்டுத் தலைமறைவாகிப் போனார்கள்.

இவ்வாறு, சிங்கள இராணுவத்தைப் பய பீதி பிடித்தாட்டிக் கொண்டிருந்தபோது தான், ஈழ விடுதலைப் புலிகள் "ஓயாத அலைகள்" என்னும் தாக்குதல் போரை துவக்கினர். 1996 ஜூலையில் நடத்திய "ஓயாத அலைகள் - 1" தாக்குதல் சண்டையில் முல்லைத் தீவு இராணுவ முகாமை அழித்து அந்நகரைப் புலிகள் கைப்பற்றினர். 1998 செப்டம்பரில் நடத்திய "ஓயாத அலைகள் - 2" தாக்குதல் நடவடிக்கையில் கிளிநொச்சி இராணுவ வளாகத்தைப் புலிகள் நிர்மூலமாக்கினர். 2000 இராணுவ வீரர்களைப் பலிகொடுத்த இலங்கை இராணுவம் மீண்டும் அப்பகுதிகளை மீட்கவே முடியவில்லை. இத்தாக்குதல் மூலம், தெற்கே வவுனியாவையும் வடக்கே யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் "நெடுஞ்சாலை ஏ-9" வழியே தரை வழியைக் கைப்பற்றி, தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளும் இலங்கை இராணுவத்தின் கனவு பொய்த்துப் போனது.

1999 நவம்பரில், வன்னி பிராந்தியத்தின் வடகிழக்குத் திசையில் "ஓயாத அலைகள் - 3" தாக்குதல் நடவடிக்கையைப் புலிகள் துவங்கினர். ஒடுசூட்டனில் இருந்து ஓமந்தை, வெளிஓயா பகுதிகளில் இருந்த இராணுவ முகாம்களைத் தாக்கிக் கைப்பற்றினர். வடமேற்குப் பக்கம் திரும்பி மாறு, மன்னார், மணியங்குளம் என அடுத்தடுத்து முன்னேறினர். ஈழ வரலாற்றிலேயே இது வரை கண்டிராத அளவு ஒரு சிறுபடையை வைத்துக் கொண்டு வன்னிப் பிராந்தியம் முழுவதையும் கைப்பற்றினர்.

1996 டிசம்பரில் புலிகளின் கவனம் யாழ் தீபகற்பத்தை நோக்கித் திரும்பியது. தீபகற்பத்தின் தெற்கு, தென்கிழக்கு, கிழக்குக் கரைகளில் இறங்கி முகாம்களை நிறுவி உறுதிப்படுத்தினர். தொடர்ந்து ஆனையிறவு பகுதியை முற்றுகையிட்டனர். 1995 வரை யாழ் தீபகற்பத்தை முற்றாகக் கைப்பற்றி அதிகாரம் செலுத்திய போதிலும் கூட, ஆனையிறவைக் கைப்பற்றுவதில் புலிகளால் வெற்றி பெற முடியவில்லை. போர்த்தந்திர ரீதியில் முக்கியமான ஆனையிறவின் சிறப்பு என்னவென்றால், யாழ் தீபகற்பத்தை ஈழத்தின் பிரதான நிலப்பகுதியுடன் இணைக்கும் ஒரே தரைவழி மார்க்கம் அதுதான். 200 ஆண்டுகளுக்கு முன்பு டச்சு காலனியவாதிகள் ஒரு கோட்டையை அங்கு நிறுவினர். சிங்களவர் அரசு ஏற்பட்ட பிறகு, ஈழத்தமிழர்களின் போக்குவரத்தைக் கண்காணிக்கும் அடிமைச் சின்னமாக அது மாற்றப்பட்டது. 1995-இல் யாழ் தீபகற்பத்தைப் புலிகளிடமிருந்து கைப்பற்றிய பிறகு 15000 பேர் கொண்ட இராணுவ முகாமாக மாற்றப்பட்டது. சாதாரணப் படைப்பிரிவு விலக்கிக் கொள்ளப்பட்டு, அமெரிக்காவிலும் பாகிஸ்தானிலும் பயிற்சியளிக்கப்பட்ட சிறப்பு இராணுவப் படைப்பிரிவு ஆனையிறவைக் காக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. ஆனாலும், நான்கு புறமும் புலிகள் சூழ்ந்து கொண்டு தாக்கியதில் நிலைகுலைந்துபோன இலங்கை இராணுவம், 2000-க்கும் மேற்பட்ட சிப்பாய்களையும் அதிகாரிகளையும் பலிகொடுத்துவிட்டு, ஏராளமான நவீன ஆயுதங்களையும் கைவிட்டு கிலாலி இராணுவ முகாமுக்கு ஓட்டம் பிடித்தது.



இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட இந்திய - சிறிலங்கா ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் ராஜீவ் மற்றும் ஜெயவர்த்தனே

ஆனையிறவு தோல்வியானது இலங்கை இராணுவத்தை பீதியடையச் செய்துவிட்டது. தோல்வி பயம் அவர்களைத் தொற்றிக் கொண்டு விட்டது. இந்த நிலையில் ஆனையிறவு வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்ட புலிப்படை வடக்கு, வடமேற்காக நகர்ந்து, வட, தென்மராச்சி, கிலாலி, சாகவச்சேரி, பருத்தித்துறை, அரியாலை, கொழும்புத்துறை ஆகிய பகுதிகளைக் கைப்பற்றியது. இப்போது தெற்கே யாழ் நகரம், வடக்கே பலாலி விமான நிலையம் இரண்டையும் இணைக்கும் சாலைக்கு வடமேற்கில் உள்ள தீபகற்பப் பகுதி மட்டுமே இலங்கை இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது. புலிகள் தெற்கில் உள்ள யாழ்நகரில் மையப் பகுதியைத் தாக்கி முதலில் கைப்பற்றுவார்களா? வடக்கே நகர்ந்து பலாலி மற்றும் காங்கேசன் துறையைக் கைப்பற்றுவார்களா? என்பதுதான் கேள்வி. இந்தப் பிராந்தியத்துக்குள் 40,000 சிங்கள இராணுவத்தினர் சிக்கியுள்ளனர். பலாலி விமான நிலையத்திலிருந்தோ, காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்தோ வெளியேறுவதுதான் சிங்கள இராணுவத்துக்குள்ள வழிகள். ஆனால், விமானம் மூலம் அவ்வளவு பேரும் தப்பி ஓடவும் முடியாது. அதேசமயம், துறைமுகம், விமானநிலையம் இரண்டின் மீதும் ஏவுகணைத் தாக்குதல் கொடுக்கும் தூரத்திற்குப் புலிகள் வந்துவிட்டார்கள்.

கடந்த இருபது ஆண்டுகளில் முன்னெப்போதையும் விட மிக அதிகமான பலம் வாய்ந்த கிரமமான இராணுவமாக ஈழவிடுதலைப் புலிகள் வளர்ந்து விட்டனர். "ஓயாத அலைகள்" என்ற மூன்று கட்டத் தாக்குதல் போர்களில் பல இராணுவ முகாம்களை அழித்து, புதுப்புது பிரதேசங்களைக் கைப்பற்றியபோதும், தனது படையாட் பலத்தைப் பெருக்கிக் கொண்டதை விட, கருங்கிவிடும் அளவுக்கு இழப்புகள் ஏதுமில்லை. அதோடு தோல்வி - பயபீதியில் சிதறியோடிய எதிரிப்படை கைவிட்டுச் சென்ற ஏவுகணைகள், டாங்குகள், கவச வண்டிகள், 152 மி.மீ பீரங்கிகள் ஆகிய கனரக ஆயுதத் தளவாடங்களோடு, அவற்றுக்குத் தேவையான வெடிபொருட்கள், வெடிகுண்டுகளை ஏராளமாகக் கைப்பற்றினர். இந்த வெற்றிகள் புலிகளிடையே அதீத நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது.


படிப்பகம்

www.padippakam.com

அதேசமயம், சிங்கள - பௌத்த மத வெறி - பேரினவாத அரசு இராணுவ ரீதியில் மட்டுமல்ல, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியிலும் தீராத, கடும் நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டிருக்கிறது. சிப்பாய்கள் மட்டுமல்ல, இரண்டு மேஜர் ஜெனரல்கள், ஒரு பிரிகேடியர் உட்பட இலங்கை இராணுவத்தின் ஒன்பது உயரதிகாரிகளே போர்க்களத்தில் இருந்து ஓடிப்போனதற்கான இராணுவ வழக்குமன்ற விசாரணைக்கும் தண்டனைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர். யாழ்குடாவில் சிக்கிக் கொண்டுள்ள இராணுவத்தினிடம் போரிடத் தளவாடங்களும், வெடி பொருட்களும் போதிய அளவு கிடையாது. விமானப்படைப் பின்புலமோ, யாழ்குடா கடற்பகுதியைக் கட்டுப்படுத்தும் அளவு கடற்படையும் கிடையாது. தமது சக்திகளை ஒன்றுதிரட்டி எதிர்த்தாக்குதல் தொடுக்கும் நிலையில் இலங்கை இராணுவம் இல்லை. அதன் தலைமையிடம் குழப்பமும் பீதியும் மட்டுமே எஞ்சியிருக்கிறது.

யாழ்குடா நாட்டில் தமிழ் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் இலங்கை இராணுவம் பதுங்கு குழிகளை அமைத்துக் கொண்டிருப்பதால், குடிமக்கள் சாவுகளைத் தவிர்ப்பதற்கு வேண்டி புலிகள் இறுதித் தாக்குதல் தொடுப்பது தள்ளிப் போடலாம், தவிர்க்கப்படலாம் என்பது ஒன்றுதான் எதிரிக்குள்ள ஒரே நம்பிக்கை. ஆனால், ஊடுருவி உள்ளிருந்து தாக்குவதோடு, எதற்கும் தயாராயிருக்கும் புலிப் படையினர் இராணுவ வெற்றிக்காக சிவிலியன்களைப் பலியிடத் தயங்கமாட்டார்கள். அப்படி இறுதித் தாக்குதல் நடக்குமானால், சிங்கள இராணுவத்தினர் தரை, கடல், விமான மார்க்கமாகத் தாமே தப்பிப் போக வழியின்றி சிக்கிக் கொண்டு விட்டனர்.

இந்நிலையில், "யாழ்குடா நாட்டில் சிக்கியுள்ள சிங்கள இராணுவத்தினர் ஆயுதங்களைக் கைவிட்டுச் சரண்டைந்தால், அவர்கள் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்தப்படுவர்; சரணடைந்த 24 மணிநேரத்தில் பன்னாட்டு செஞ்சிலுவை சங்கத்திடம் அனைவரும் ஒப்படைக்கப்படுவர்" என்றும் புலிகள் அறிவித்தனர். இதை சிங்கள இராணுவம் நிராகரித்தது. அதன் பிறகு சிங்கள இராணுவம் தப்பிப் போவதற்காக 24 மணி நேரம் போர் நிறுத்தத்தையும் புலிகள் கடைப்பிடித்தனர். சரணடைவதோ, தப்பிப் போவதோ பெரும் இழிவாகப் போகும் என்று கருதும் இராணுவத் தலைமை, கடைசி சிப்பாய் இருக்கும்வரை போர் நடக்கும் என்று சவடாலடித்தது. வெளிநாடுகளில் இருந்து ஆயுதத் தளவாட வருகை, இஸ்ரேல் உதவியுடன் விமானத் தாக்குதல் ஆகியவற்றால் புதுத்தெம்பு அடைந்து விட்ட இலங்கை இராணுவம், புலிகளுக்கு எதிராக வெற்றிகரமான எதிர்த் தாக்குதல் நடத்துவதாக அறிவித்து வருகிறது. ஆனால், இலங்கையில் இராணுவச் செய்தியும், இந்தியாவில் உளவுப்படைச் செய்தியுமே பரப்பப்படுகிறது.

தென்னிலங்கையிலோ, தொடரும் ஈழப்போர் காரணமாக, கொழும்பு நகர் மீதான மனித வெடிகுண்டுத் தாக்குதல் காரணமாக அந்நிய முதலீடும் சுற்றுலாத் தொழில் வருமானமும் ஏறக்குறைய நின்று போனது. ஆயுதக் கொள்முதல் உட்பட பொருளாதார நெருக்கடியில் அரசு சிக்கிக் கொண்டு, தண்ணீர், மின்சாரம் உட்பட அவசியப் பொருட்களின் விலையைக் கடுமையாக ஏற்றிவிட்டது.

ஈழப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப் போவதாக வாக்குறுதி கொடுத்து முதல் தடவை சந்திரிகா ஆட்சியைப் பிடித்தார். ஆனால், சிங்கள இனவெறி காரணமாக ஈழத்தமிழர்களுக்கு ஏற்புடைய திட்டம் எதுவும் முன் வைக்கத் தவறினார். பின்னர் இராணுவத் தீர்வு கான விழைந்து முழு அளவிலான போர் துவங்கி யாழ் குடா நாட்டைக் கைப்பற்றினார். அதைத் தொடர்ந்து சிங்கள இனவெறியர் - அரசி



**பத்திரிகை தணிக்கையால், வதந்திகளே செய்திகளாகத் தரப்படுவதாகக் கூறும் சிறீலங்கா பத்திரிகை.**

யல்கள் அனைவரும் ஏற்கக் கூடிய அதிகாரப் பகிர்வு திட்டம் எதையும் நிறைவேற்றவோ, ஈழத் துரோகிகளைக் கொண்டு சுயாட்சிப் பொம்மை அரசை நிறுவவோ முடியாமற்போனார். யாழ்குடா மீதான இராணுவ வெற்றியை வைத்து அரசியல் அறுவடை செய்து கொள்ள அவசரத் தேர்தலை அறிவித்தார். இச்சமயத்தில் புலிகள் தொடங்கிய "ஓயாத அலைகள்" தாக்குதலால் அடுத்தடுத்த தோல்விகளைக் கண்டார். அதிபர் தேர்தலிலும் தோல்வி முகத்தில் இருந்த சந்திரிகா மீதான தற்கொலை குண்டுதாரியின் தாக்குதல் காரணமாக அனுதாப வாக்குகளைப் பெற்று மீண்டும் வெற்றி பெற்றார்.

ஆனால், அடுத்தடுத்த இராணுவத் தோல்விகளாலும் இலங்கை இராணுவத்தின் மூன்றிலொரு பங்கினர் யாழ்குடா முற்றுகையில் சிக்கியிருப்பதாலும் சந்திரிகா அரசுக்கான அரசியல் நெருக்கடி மேலும் முற்றியது. யாழ்குடா போரில் இலங்கை இராணுவம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை சிங்கள மக்களிடையே துளியும் கிடையாது. இதனால், யாழ்குடாவில் சிக்கியுள்ள 40,000 இராணுவத்தினர் புலிகளிடம் போர்க் கைதிகளாவதோ, கொல்லப்படுவதோ நிச்சயம் நடக்கும் என்கிற பீதி சிங்கள சமுதாயத்தில் பரவி, சந்திரிகா அரசு மீது அவநம்பிக்கை பெருகி விட்டது. இந்தியாவின் இராணுவ உதவியை நாடிப் புலிகளின் முன்னேற்றத்தைத் தடுக்க வேண்டும்; அல்லது சிக்குண்டுள்ள இராணுவத்தினரை மீட்க வேண்டும் என்று புத்த பிட்சுக்கள் உட்பட, சிங்கள இனவெறியர்களில் ஒரு பிரிவினரே கோருகின்றனர். பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் இதை ஆதரிக்கிறது. ஆனால், இந்தியா இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடக் கூடாது, வெளியிலிருந்து ஆயுத உதவிமட்டுமே செய்ய வேண்டும் என்றும் மற்றொரு பிரிவு சிங்கள இனவெறியர்கள் தடுக்கின்றனர்.

யாழ் குடா நாட்டை இழப்பதும், இராணுவம் வெளியேறுவது, சரணடைவது, போர்க் கைதிகளாக்கப்படுவது எதுவானாலும், இராணுவ ரீதியில் மட்டுமல்லாது, அரசியல் ரீதியிலும் தோல்வியாகி விடும் அபாயத்தில் சந்திரிகா அரசு சிக்கியுள்ளது. உயிரோடோ, பிணமாகவோ எப்படி இலங்கை இராணுவ வீரர்கள் வடக்கில் இருந்து திரும்பினாலும், அது சந்திரிகா அரசை அச்சுறுத்தும் அளவுக்கான இனக்கலவரமாக தென்னிலங்கையில் வெடிக்கும் என்று அங்குள்ள மக்கள் அஞ்சுகின்றனர். வரும் செப்டம்பரில் நடக்கவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்நிலைமை தனக்குப் பாதகமாக இருக்கும் என்று சந்திரிகா அரசு பயப்படுகிறது.

எனவே, அதுவரையிலாவது யாழ்குடா நாடு புலிகளின் பிடியில் வந்துவிடாமல் தாக்குப் பிடிப்பதற்கான இடைக்காலப் பணியில் சந்திரிகா அரசு ஈடுபட்டுள்ளது. அதற்காக இராணுவத்துக்கும் போலீசுக்கும் வரைமுறையற்ற அதிகாரம் வழங்கும் அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளது. கடுமையாக பத்திரிகைத் தணிக்கையை அமலாக்கியதோடு சில பத்திரிகைகளையும் தடை செய்து மூடிவிட்டது. ஆனால், இவை எதுவுமே போர்க்கால முடிவைத் தீர்மானித்துவிட முடியாது.

"ஓயாத அலைகள் - 3" தாக்குதலைத் துவக்கி வைத்து, புலித்தலைவர் பிரபாகரன் தனது நோக்கத்தைத் திட்டவட்டமாகப் பிரகடனப்படுத்தினார்: "வன்னியில் நாம் ஈட்டியிருக்கும் இந்த இராணுவ வெற்றி உலகையே அதிசயிக்கவும் பிரமிக்கவும் செய்துவிட்டது. இது நிகழ்காலப் போர்க் கலையில் ஓர் ஒப்பற்ற வரலாற்றுச் சாதனை. நமது தாக்குதல் வேகம், விரைந்த வியூகங்களை அமைக்கும் திறன், அதிஉயர்ந்த ஒழுங்கும், ஒன்றுபட்ட தலைமையும், பிரமாதமான


படிப்பகம்

www.padippakam.com

தாக்குதல் செயல்தந்திரங்கள், போரிடும் நமது அமைப்புகளின் பிரமிப்பூட்டும் துணிவு ஆகியவை நமது அன்னை பூமியை மீட்கும் திறன் புலிகளுக்கு உண்டு என்பதைக் காட்டுகின்றன. இதற்கு நேர்மாறாக, நன்கு கட்டியெழுப்பப்பட்ட தளங்களையும் முகாம்களையும் கொண்டு, பலதிறப்பட்ட இராணுவப் பிரிவுகளைக் கொண்ட பூதாகரமான சிறீலங்கா இராணுவத்தின் திடீர் வீழ்ச்சியை வன்னியில் கண்டோம்'' என்று முழங்கினார். இது சுத்த இராணுவக் கண்ணோட்டத்தில் விளைந்த, பிழையான அரசியல் பார்வை உடையது என்றாலும், இராணுவ மதிப்பீடுகளில் உண்மை இல்லாமலில்லை என்பதை இன்றைய போர்க்கள யதார்த்தம் காட்டுகிறது.

இந்நெருக்கடியைச் சமாளிப்பதற்காக சந்திரிகா அரசு இரட்டை நாடகமாடுகிறது. ஒருபுறம் இந்தியா, நார்வே, அமெரிக்கா உட்பட மூன்றாம் தரப்பின் முன்னிலையில் சமாதானப் பேச்சு வார்த்தை நடத்தத் தயார் என்று கூறுகிறது. மறுபுறம் உலகின் பல நாடுகளில் இருந்து நவீன ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதோடு, அவற்றிடமிருந்து இராணுவப் பயிற்சி, இராணுவ ஆலோசனைகளையும் பெறுகிறது. தேவையானால் வெளிநாட்டு இராணுவத்தையும் அழைக்கத் தயாராக உள்ளது.

இந்தியச் செய்தி ஊடகம் - உளவுப் படை ஆகியன சந்திரிகா அரசின் இந்த இரட்டை நாடகத்துக்கு தமது சொந்த விளக்கங்களைத் தருகின்றன. ''சந்திரிகா அரசு சமாதானத்தையே விரும்புகிறது; ஆனால், புலிகள் தாக்குதல் நிலையிலும், இலங்கை இராணுவம் யாழ்குடாவை இழந்து வெளியேறும் நிலையிலும் பேச்சு வார்த்தை நடந்தால், வலுவான நிலையிலுள்ள புலிகள் கூடுதலான விலை கேட்பார்கள் என்பதற்காகத்தான் சந்திரிகா அரசு தயங்குகிறது.

போர்க்களத்தில் புலிகளைத் தோற்கடித்து, யாழ் குடாவில் இருந்து விரட்ட முடியாவிட்டாலும், புலிகளின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தி, யாழ் குடா நாட்டிலேயே இராணுவம் நீடித்திருக்கும் நிலையையாவது அடையவேண்டும்; அப்போதுதான் வரவிருக்கும் பேச்சு வார்த்தையில் மேல் கையெடுத்துப் பேரம் பேசமுடியும் என்று சந்திரிகா அரசு நம்புகிறது. இதற்காகத்தான் போரைநீடிப்பதாகவும், வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்கள் வாங்கப்படுவதாகவும்'' இங்கே பிரச்சாரம் செய்யப்படுகிறது.

ஆனால், சந்திரிகா அரசு உட்பட சிங்கள பாசிசப் பேரினவாதிகள் அனைவரது நிலைப்பாடும் நோக்கமும் ஒன்று தான். ''இலங்கையை முழு அளவிலான போருக்குத் தயார் செய்வது; சிங்கள சமுதாயம் முழுமையையும் இராணுவமயப்படுத்துவது; அதற்காகவே பயிற்சியும் ஆயுதங்களும் வழங்குவது; உலக அளவில் பெருமளவு ஆயுதக் கொள்முதல் செய்வது. விடுதலையை வேண்டி நிற்கும் இயக்கம் எதுவானாலும் அழித்தொழிப்பது; இதற்குத் துணையாக அனைத்துச் சிங்களத் தரப்புகளையும் ஒருங்கிணைப்பது; எதிர்ப்போரை அரசு பயங்கரவாதச் சட்டங்களைக் கொண்டு ஒடுக்குவது; பொருளாதாரத்தையும் இதற்கு இசைவாக ஒழுங்கமைப்பது; தமிழின் அழிப்புப் போரை இன்னும் மூர்க்கமாக நடத்துவது.'' இந்தத் திட்டத்திற்கு யு.என்.பி. கட்சி உட்பட சிங்கள பாசிச சக்திகள் அனைத்தும் இணங்கியுள்ளன. இலங்கையில் மதம், அரசு, சிவில் சமூகம் ஆகிய மூன்று அமைப்புகளுமே இதற்குத் தகவாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

உண்மையில் இப்போது இலங்கை - ஈழப்போரில் மோதிக்கொள்ளும் இரண்டு தரப்பினருக்கு மட்டுமில்லை; பஞ்சாயத்து செய்ய முன் வந்துள்ள நடுநிலை நாடுகளுக்கும் கூடப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதில் நம்பிக்கை, அக்கறை, நோக்கம் எதுவும் கிடையாது.

1995 தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு, சந்திரிகா அரசு புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினாலும், அதை அதிகாரிகள் மட்டத்தோடு நிறுத்திக் கொண்டது; சிங்கள இனவெறியுடன் தடைகளை நீக்க மறுத்தது; பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டு, பிரபாகரனை ஒரு மனநோயாளி என்று ஏசியதோடு, போருக்கான தயாரிப்பிலும் ஈடுபட்டிருந்தது. சமாதானத்துக்கான போர் என்ற பெயரில் ''சூரியக் கதிர்'' இராணுவ நடவடிக்கையில் யாழ்குடா உட்பட வடக்கில் பல பகுதிகளைக் கைப்பற்றிய போது, புலிகள் பேச்சு வார்த்தைக்கு அழைப்பு விட்டபோதும் மறுத்தது. ''ஆயுதங்களைக் கீழேபோட்டு விட்டு, இலங்கையின் அரசியல் சட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று நிறைவேறாத நிபந்தனை போட்டது. புலிகள் ஓயாத அலைகள் நடவடிக்கையைத் துவங்கிய போது, நார்வே நாட்டுப் பஞ்சாயத்துக்கு இலங்கை அரசு ஒப்புக் கொண்ட போது, சிங்கள பாசிச இனவெறியர்கள் நார்வே நாட்டுக் கொடியை எரித்து எதிர்ப்புக் காட்டினர். அதையும் அரசு ஊக்குவித்தது. இப்போது புலிகளிடம் பெருந்தோல்வி காணும் நிலையிலும் மீண்டும் பலத்தைத் திரட்டவே கால அவகாசம் தேடிக் கொள்வதற்கே சமாதானப் பேச்சு வார்த்தை நாடகமாடுகிறது.

ஒருவேளை சமாதானப் பேச்சு வார்த்தைக்கு சந்திரிகா அரசு இணங்கினாலும் ஒப்பந்தம் எதுவும் ஏற்பட்டு தீர்வு காண்பதற்கான வாய்ப்புமில்லை. சிங்களப் பாசிச சக்திகள் ஒருபோதும் அதிகாரப் பகிர்வுக்கு ஒப்புக் கொள்ள மாட்டார்கள். சிங்கள அரசும் இதுவரையிலான எந்த ஒப்பந்தத்தையும் மதித்து அமலாக்கியதில்லை. இழந்த பகுதிகளை மீட்பது மட்டுமே அதன் நோக்கமாக இருக்கும்.

மறுபுறம் ஈழ விடுதலைப் புலிகள், தனி ஈழம் என்ற பிரிவினைக்குக் குறைவான தீர்வு எதையும் ஏற்கப் போவதில்லை. ''ஈழத்தைத் தனி தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும்; சிங்கள இராணுவம் ஈழத்திலிருந்து வெளியேற வேண்டும்'' என்ற புலிகளின் இரு முன்நிபந்தனைகளை இலங்கை அரசு ஒருபோதும் ஏற்காது. யாழ்குடாவில் இராணுவ வெற்றியைச் சுவைத்துக் கொண்டிருக்கும் புலிகள், அதை இழந்து, மாநில சுயாட்சி என்ற அதிகாரப் பகிர்வையும் ஏற்கப் போவதில்லை.

''இரண்டு பெரிய சிங்கள அரசியல் கட்சிகளுமே சாரத்தில் தமிழர் எதிர்ப்பு, சிங்கள - பௌத்த பேரினவாத சித்தாந்தத்தைக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, சந்திரிகா குமாரதுங்கா, நவீன சிங்கள - பௌத்த பேரினவெறியின் பிரதிநிதி; அவரது ஐந்தாண்டு கால ஆட்சி தமிழ் மக்களுக்கு ஒரு சாபக்கேடு. அது ஒரு போதும் போரை நிறுத்தாது, ஈழ ஆக்கிரமிப்பை விலக்கிக் கொள்ளாது.

''தமிழ் ஈழம் எமது அன்னைபூமி. எமது தேசிய அடையாளத்தின் அடித்தளமாக



பேச்சுவார்த்தைக்கு எதிராக சிங்கள இனவெறிக் கட்சியான ஜே.வி.பி. நடத்திய ஆர்ப்பாட்டம்


படிப்பகம்

www.padippakam.com

அமைந்துள்ளது இந்த பூமி. தமிழர்கள் போரிட்டுப் பிரிந்து போய் ஒரு சுதந்தரமான தமிழர் அரசை நிறுவுவதைத் தவிர வேறெந்த மாற்றையும் தமிழர் விரோத சிங்கள அரசியல் அமைப்புத் தரவில்லை'' என்று கடந்த நவம்பர் தியாகிகள் தினத்தில் பிரபாகரன் பிரகடனம் செய்துள்ளார். இந்த எண்ணம் உண்மையாகவும் இருக்குமானால், சமாதானப் பேச்சு வார்த்தைக்கு புலிகள் இணங்குவதாகக் கூறுவதெல்லாம் அரசியல் முன் முயற்சி பெறுவதற்குத்தானே தவிர, அமைதித் தீர்வு காண்பதற்கல்ல என்று நம்பலாம்.

அடுத்து, இலங்கை - ஈழப் பிரச்சினையில் தலையிட்டுப் பஞ்சாயத்துப் பேச முன்வரும் இந்தியா, நார்வே, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கும் உண்மையில் அமைதித் தீர்வு காண முற்படவில்லை. நார்வே நாடு அமெரிக்காவின் பதிலியாக நின்று தான், அதனிடம் ஆணை பெற்றுத்தான் செயல்படுகிறது. இந்தியாவும் அமெரிக்காவும் சிங்கள இராணுவத்துக்கு ஆயுதத் தளவாடங்களும் பயிற்சியுமளிப்பதோடு, புலிகள் அமைப்பைப் பயங்கரவாத அமைப்பாக அறிவித்துத் தடை விதித்துள்ளன. இந்த நாடுகள் எல்லாமே இலங்கையின் இறையாண்மையையும் ஒருமைப்பாட்டையும் பேணவேண்டும், ஈழப் பிரச்சினைக்கு இலங்கையின் அரசியல் சட்டத்துக்குட்பட்டுத்தான் தீர்வு காணவேண்டும், தனி ஈழம் அமைவதை ஏற்கவே முடியாது என்று அறிவித்துள்ளன. சமாதானப் பேச்சு வார்த்தை துவங்கும் முன்பாகவே, ஒரு சார்பாக நிலைப்பாடு எடுத்துள்ள இந்நாடுகள் எப்படி நடுநிலையில் நின்று பஞ்சாயத்துச் செய்ய முடியும்? தான் ஆதரிக்கும் சார்பு நாட்டிற்கு இணக்கமாகத்தானே நடந்து கொள்ளும்! ஆகவே, பஞ்சாயத்துக்குத் தலைமையேற்பவர்களுக்கே அதில் நம்பிக்கை இல்லை என்று தெரிகிறது.

இந்த நிலையில், ''யாழ் குடா நாட்டில் சிங்கள இராணுவத்தை வென்று அதைத் தன் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதன் மூலம் தமிழீழம் விரைவிலேயே மலர்ந்து விடும்; ஈழ விடுதலைப் போரில் இறுதி வெற்றியைப் புலிகள் சாதிக்கும் தருணம் வந்துவிட்டது; புலிகளின் இலட்சியம் ஈடேறப் போகிறது; உலகத் தமிழர்க்கு ஒரு தனிநாடு, தாய்நாடு விரைவில் அமையப் போகிறது'' என்று ஈழ விடுதலைப் புலிகளும் தமிழ்நாட்டில் உள்ள அவர்களது ஆதரவாளர்களும் குதூகலிக்கின்றனர்.

ஆனால், இது அவர்களின் இன்னுமொரு பிரச்சார உத்திதான், உண்மையல்ல. 1984-லேயே பிரபாகரன் கூறியுள்ளார்: ''ஐந்தரைக் கோடித் தமிழர்களைக் கொண்ட இந்தியா தனி ஈழம் அமைவதை அனுமதிக்காது.'' இன்னாள் பிரதமரும் இதையே உறுதி செய்துள்ளார். சிங்களப் பேரினவாத பாசிஸ்டுகள் மட்டுமல்ல, உலக ஏகாதிபத்தியங்களும், இந்தப் பிராந்திய மேலாதிக்கவாதியுமான இந்தியாவும் கூட ஈழ விடுதலைக்கு எதிரானவர்கள்தாம். புலிகள் இதை உணர்ந்திருந்தாலும், வெளிப்படையாக இந்த எதிரிகளை எதிர்க்கத் தயாரில்லை. இந்திய அமைதிப் படைக்கு எதிரான புலிகளின் போரும்கூட அவர்கள் மீது திணிக்கப்பட்டதுதான்.

யாழ்குடா நாட்டைக் கைப்பற்றிய பிறகு புலிகள் தமிழீழத்தைப் பிரகடனம் செய்தால் கூட, இலங்கை - ஈழப் போர் அத்துடன் முடிவுக்கு வராது. சந்திரிகா பிற நாடுகளின் உதவியுடன் மீண்டும் யாழ் குடாவைக் கைப்பற்றவும், கிழக்கு மாகாணத்தை வென்று வடக்குடன் இணைப்பதற்கான புலிகளின் முயற்சியும் நீடிக்கும்.

இராணுவ ரீதியில் ஈழ விடுதலைப் புலிகள் எவ்வளவுதான் சக்தியும் இராணுவ நுட்பமும் திறனும் பெற்றிருந்தாலும்,



அமெரிக்காவின் ஆசியோடு இலங்கை இராணுவத்துக்கு ஆலோசனை கூற, பா.ஜ.க. கூட்டணி அரசால் அனுப்பப்பட்ட இந்திய விமானப்படைத் தளபதி டிப்னிஸ் (இடது ஓரம்) இலங்கை இராணுவத்தின் அணி வகுப்பைப் பார்வையிடுகிறார்.

அவை சுத்த இராணுவவாதம் அடிப்படையிலானவைதான். அரசியல் ரீதியில் ஈழப் புலிகள் பூஜ்யம் என்பதையே இதுவரை நிரூபித்து வந்திருக்கிறார்கள். முதலாவதாக, இலங்கை - ஈழச் சூழலில் நண்பர்களையும் - எதிரிகளையும் பிரித்தறிந்து, சரியான அரசியல் நடைமுறையைப் பின்பற்றத் தவறிவிட்டார்கள். இராணுவ - ஆயுத பலமே எல்லாவற்றையும் ஈடுசெய்து விடும் என்றும், தமது பினாமிகள் மூலம் நடக்கும் பிரச்சாரமும், தனிநபர் சாகச பயங்கரவாதச் செயல்களுமே அரசியல் பலவீனங்களை இட்டு நிரப்பிவிடும் என்று நம்புகின்றனர்.

அரசியல், இராணுவத் துரோகிகளைக் கொன்றொழிப்பது எந்தவொரு விடுதலைப் போரிலும் அவசியம்தான். ஆனால், இவர்களையும் ஊசலாடும் சமரசவாதிகளையும் பிரித்தறிய வேண்டும். ஊசலாடும் சமரசவாதிகளை அரசியல் ரீதியில் அம்பலப்படுத்தித் தனிமைப்படுத்தவோ, நடுநிலைப்படுத்தவோ, வென்றெடுக்கவோ முயல வேண்டுமே தவிர, இப்படிப்பட்டவர்களையும் பகைச் சக்திகளாகக் கருதி அழித்தொழிக்கும் நடைமுறையைப் புலிகள் பின்பற்றினர். துரோகிகள், சமரசவாதிகள் மட்டுமல்ல, ஜனநாயக சக்திகளான சிறு குழுக்கள், தனி நபர்கள் மற்றும் தமது அமைப்பில் பலரைக்கூட, புலிகளின், குறிப்பாக பிரபாகரனின் பாசிச சர்வாதிகார அரசியலுக்கு எதிரானவைகளாக இருந்ததால் அழித்தொழிக்கப்பட்டனர்; அல்லது தடை செய்யப்பட்டனர். இந்நடவடிக்கைகள், ஈழ விடுதலைப் போராட்டத்தில் புலிகளின், குறிப்பாக பிரபாகரனின் ஏகபோகத் தலைமையை நிறுவுவதில் வெற்றி பெற்றிருக்கலாம்; ஆனால், விடுதலைப் போருக்கு மிகவும் இன்றியமையாத ஆயுதமாகிய அரசியல் அணிதிரட்டலில் தோற்றுப் போனார்கள்.

இதே அணுகுமுறையை ஈழத்தில் வாழ்ந்த சிறுபான்மையினரான இசுலாமியரிடமும், சிங்கள மக்களிடமும் மேற்கொண்டனர். கிழக்கு மாகாணத்தில் கணிசமான எண்ணிக்கையில் வாழும் இசுலாமியர்கள் பிரதிநிதிகளோடு சேர்ந்து சிங்கள அரசுக்கு எதிரான ஒப்பந்தம் போடுமளவுக்கு முன்பு உடன்பாடாக இருந்தனர், விடுதலைப் புலிகள். ஆனால், அவர்களுடனான முரண்பாட்டைத் தவறாகக் கையாண்டு, பகை முரண்பாடாக்கி, எதிரியின் பக்கம் தள்ளிவிட்டனர். அதிலிருந்து வடக்கில் வாழ்ந்த தமிழ் பேசும் இசுலாமியர் உட்பட, அம்மதத்தினர் அனைவருமே துரோகிகள் என முத்திரை குத்திப் பலரைப் படுகொலை செய்தனர். ஈழத்திலிருந்து அனைத்து இசுலாமியரையும் வெளியேற்றி அகதிகளாக்கி விரட்டினர்.

முதலில், இந்திய உளவுப் படையான ''ரா''வின் தூண்டுதலால் முதியோர், பெண்கள், சிறு குழந்தைகள் உட்பட சிங்கள மக்களைப் படுகொலை செய்தனர். பின்னர், சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்களுக்குப் பதிலடி கொடுப்பதற்கான வழிமுறையாகத் தொடர்ந்து இதையே கடைப்பிடிக்கின்றனர். இதேபோல் மிகமிக அவசியமான தருணங்களில் நகர்ப்புற கொரில்லாத் தாக்குதல் நடவடிக்கைகள் தவிர்க்க முடியாததாகப் பயன்படுத்த வேண்டும். ஆனால், மனித வெடிகுண்டுகளை ஏவி நகர்ப்புறக் கொரில்லாத் தாக்குதல்களைத் தொடுத்து, சிவிலியன் இலக்குகளைத் தாக்குவதைக் கிரமமான போர்முறையாகப் புலிகள் பின்பற்றுகின்றனர். இக்காரணங்களால், சிங்கள மக்களிடையே ஆதரவாளர்களை உருவாக்கும் வாய்ப்பே இல்லாமற் செய்துவிட்டனர்.

ஈழ விடுதலைக்கு எதிரியான சிங்கள - பௌத்த பேரினவாத பாசிச அரசுடன், அண்டை நாடான இந்தியா முதல் உலக மேலாதிக்க வல்லரசான அமெரிக்கா உட்பட உலகநாடுகள் எத்தகைய உறவு வைத்துக்


படிப்பகம்

www.padippakam.com

கொண்டுள்ளன; அவை ஈழ விடுதலைப் போரைப் பற்றி எத்தகைய அணுகுமுறையைக் கொண்டுள்ளன என்கிற யதார்த்த மதிப்பீடு அடிப்படையில் புலிகள் தமது அரசியல் மூல உபாயத்தை வகுத்துக் கொள்ளவில்லை. இந்த விடயத்தில் புலிகளும் அவர்களுடைய தமிழ்நாட்டு ஆதரவாளர்களும் சமரச அணுகுமுறையையும், பொய்யான தோற்றத்தையும் மேற்கொண்டு, ஈழ விடுதலைக்குச் சாதகமான பன்னாட்டுச் சூழலையும் ஆதரவையும் தேடிவிட முடியும் என்று நம்புகின்றனர்.

இந்தியாவைப் பொருத்தவரை, இலங்கை - ஈழப் பிரச்சினையைத் தன் தெற்கு ஆசிய பிராந்திய ஆதிக்கம் - விரிவாக்க நலன்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதையே அன்றும் இன்றும் நோக்கமாகக் கொண்டிருக்கிறது. மற்றபடி, எந்தவித சுயநலனும் இல்லாமலோ, அகதிகள் பிரச்சினையைத் தீர்க்கும் அக்கறையுடனோ, தனித் தமிழ்நாடு கோரிக்கை வலுப்பெற்றுவிடும் என்ற அச்சத்தினாலோ ஈழப் பிரச்சினையில் இந்தியா தலையிடவில்லை. இவையெல்லாம் இந்தியாவின் உள்நோக்கங்களை மூடி மறைப்பதற்காக இந்திய உளவுப்படையும், செய்தி ஊடகங்களும் பரப்பிவிடும் பொய்யான காரணங்கள்தாம்.

1987 இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் தோல்வி, இந்திய அமைதிப் படையின் பின்னடைவு, பின்வாங்குதல், ராஜீவ் கொலை ஆகியவற்றில் இருந்து பாடங் கற்றுக் கொண்டது இந்திய அரசு. அதனாலும், ஈழ ஆதரவுக் கட்சிகள் மத்தியில் கூட்டணி அரசில் பங்கேற்பதாலும் இராணுவத் தலையீடு செய்வதை இந்திய அரசு விரும்பவில்லை என்பதும் கூட தவறான மதிப்பீடு அடிப்படையிலானதுதான். நேபாளம், பூடான், பாகிஸ்தான், ஆஃப்கான் ஆகியவற்றோடு இலங்கையையும் உள்ளடக்கிய அகண்ட பாரதக் கொள்கையுடையதுதான் ஆளும் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல்.

ம.தி.மு.க.வோ, பா.ம.க.வோ, தி.மு.க.வோ ஈழ ஆதரவுக்காக மத்திய அரசைப் பகைத்துக் கொள்ளத் துணிய மாட்டா என்பதுதான் கடந்தகால அனுபவம். இலங்கையுடன் பேரம் பேசுவதற்கான அரசியல் வலுவைத் தேடிக் கொள்வதற்குப் புலிகள் ஆதரவு கட்சிகளிடம் தனக்குள்ள நெருக்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளுவதுதான் மத்திய அரசின் நோக்கம். எனவேதான் இக்கட்சிகளின் சவடால்களை மீறி இலங்கை அரசுக்கு துணை போகும் நடவடிக்கைகளில் இந்திய அரசு இறங்கியுள்ளது; இராணுவத் தலையீட்டிற்கும் தயார் நிலையில் உள்ளது. இந்தியாவைவிட பாகிஸ்தானுடன் நெருக்கமாக உள்ள இலங்கையைத் தன்பக்கம் இழுப்பதற்கும், பூடான், நேபாளம் போல தெற்கு ஆசிய சங்கத்தில் தனது தொங்குசதை நாடாக வைத்துக் கொள்வதற்கும் எதையும் செய்வதற்கு இந்தியா தயாராக உள்ளது. இதன் ஆரம்பமாகத்தான் தீவிரவாத ஒழிப்புப் பயிற்சி தரவும், விமானத் தாக்குதலுக்கு வியூகம் வகுத்துத் தரவும் ஏற்பாடு செய்தது. விண்கோளில் இருந்து உளவுத் தகவல்களைத் தருகிறது.

இந்தமுறை, இந்தியாவிற்கு உலக மேலாதிக்க வல்லரசான அமெரிக்காவின் முழு ஒத்துழைப்பும் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. புலிகளும் அவர்களுடைய ஆதரவாளர்களும் சித்தரிப்பதைப் போல அமெரிக்கா நேரடித் தலையீடு செய்வதற்கான அளவு ஈழப் பிரச்சினையை முக்கியமான தாகக் கருதவில்லை.

உலகின் கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் கடல் வழியில் முக்கிய இடத்தில் அமைந்துள்ள தென்னிலங்கை, குறிப்பாக, கொழும்பு - திருகோணமலை சிங்கள - பாசிச அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதுதான் தனது நலன்களுக்கு உகந்தது என அமெரிக்க மேல்நிலை வல்லரசு கருதுகிறது. தேசிய இன விடுதலை கோரிக்கையைக் கண்ணை மூடிக்கொண்டு எதிர்ப்பதைவிட, தனது யுத்த தந்திரத் தேவைக்கு ஏற்பவே அமெரிக்க மேல்நிலை வல்லரசு எதிர்க்கிறது அல்லது ஆதரிக்கிறது என்பதை கடந்த பத்தாண்டு நடைமுறை காட்டுகிறது. அந்த வகையில் ஈழ விடுதலையை எதிர்க்கும் நிலை எடுத்துள்ளது.

சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு, ஏகபோக உலக மேலாதிக்கத்தை நிறுவிய பிறகு, இலங்கை ஈழப் பிரச்சினையில் இந்தியாவோ, பாகிஸ்தானோ தலையிடுவது தனது நலனுக்கு எதிரானதாக இருக்கும் என்று அமெரிக்கா கருதவில்லை. அதற்கு மாறாக, தெற்கு ஆசியாவில் தனது நலன்களை காப்பதற்கான துணையாகவே இந்நாடுகளை அமெரிக்கா கருதுகிறது.

இந்நிலையில் யதார்த்தமான அரசியல் நிலைமையை அங்கீகரிக்காது, இலங்கை - ஈழப் பிரச்சினையில் அமெரிக்கா - பாகிஸ்தான் - இஸ்ரேல் அணிக்கும், இந்தியாவுக்கும் இடையே பகை முரண்பாடு இருப்பதைப் போலவும் அதைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும் என்பதைப் போலவும் புலிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் சித்தரிக்கின்றனர்.

இந்தப் பிரச்சினையின் ஆரம்பம் முதல் தொடர்ச்சியாகவும், உறுதியாகவும் சிங்கள - பாசிச அரசையே இந்தியா ஆதரித்துத் துணை நின்று வருகிறது; கொழும்பு அரசிடம் பேரம் பேசுவதற்கும், போராளி இயக்கங்களுக்குள் ஊடுருவவும் மட்டுமே தில்லி அரசு உளவுப் படைகள் மூலம் சதி செய்தது, செய்யப்பட்டது. இந்த உண்மையையும், தற்போது இலங்கை அரசுக்கு பா.ஜ.க. கூட்டணி அரசு துணை போவதையும் மூடி மறைத்து, ஏதோ சிங்கள சூழ்ச்சிக்கு இந்திய அரசு பலியாகி விடுவதைப் போலவும், ஈழம் மலர்ந்தால் அது இந்திய நலன்களுக்குத் துணையாகத்தான் இருக்குமே தவிர, எதிராகப் போகாது என்றும் வாக்குறுதியளித்து ஈழ ஆதரவு நிலையெடுக்கும்படி மாற்றிவிட முடியும் என்றும் புலிகளும் அவர்களுடைய ஆதரவாளர்களும் சாதிக்கிறார்கள்.

அதாவது, இந்திய அரசுக்கென்று சுயமான அரசியல், இராணுவ நிலை எதுவும் கிடையாது; சிங்கள சூழ்ச்சியால்தான் ஈழ எதிர்ப்பு நிலை எடுக்கிறது என்ற தோரணையில் நடந்து கொள்ளுகின்றனர். இதற்காக இவர்கள் இந்திய அரசின் தாடையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சுவது மட்டுமல்ல, இந்தியத் தமிழக மக்களுக்குத் துரோகம் செய்யும் வகையில் இந்திரா, ராஜீவ் முதல் வாஜ்பாய் வரை, இந்திய பார்ப்பன - பனியா ஆளும் வர்க்கத்துக்காக நன்னடத்தைப் பிரச்சாரமும் செய்கின்றனர். இந்தியாவின் நலன்களுக்கு ஈழம் பாதுகாப்பு அரணாக விளங்கும் என்று வாக்குறுதியும் தருகின்றனர்.

இந்தியாவில் உள்ள தமிழனவாதக் குழுக்கள் அனைத்தும் இந்தியாவின் பார்ப்பன - பனியா ஆளும் வர்க்க அரசை தமிழக விடுதலைக்கு எதிரியாக அறிவித்துள்ளனர். தெற்கு ஆசியாவில் இந்த இந்திய அரசின் நலனுக்குத் துணை நிற்போம் என்று இவர்களும் புலிகளும் வாக்குறுதி வழங்குகின்றனர். என்ன நேர்மை! என்ன தியாகம்! இந்தியத் தமிழ் மக்கள் யாருக்கு எதிராகப் போராடி விடுதலை அடைய வேண்டுமோ, அவர்களுக்கு ஈழ விடுதலைப் புலிகள் துணை நிற்பார்கள். "இந்தியத் தமிழர்களின் விடுதலைக்குத் துரோகம் செய்வது புலிகளின் உரிமை. ஆனால், இந்தப் புலிகளுக்கு ஆதரவு தெரிவிப்பது இந்தியத் தமிழர்களின் இரத்தக் கடன்; இனப் பாசமாகும்" என்கிறார்கள்.

இவ்வாறு, ஈழ விடுதலைக்கு சிங்கள - பாசிசப் பேரினவாதிகள் மட்டுமல்ல, இந்தியத் துணை வல்லரசும், அமெரிக்க மேல்நிலை வல்லரசும்கூட எதிராக நிற்பதை யதார்த்தம் துலக்கமாகக் காட்டுகிறது. ஆனால், அமெரிக்க மேல்நிலை வல்லரசை எதிர்த்து எதுவும் செய்யாமல், அதன் ஆணையை ஏற்று ஈழ விடுதலையை எப்போதும் எதிர்க்கும் இந்தியத் துணை வல்லரசை எதிர்க்காமல், அவற்றின் நிழலில் நின்றுகொண்டு, ஈழத்தமிழர்களை அடக்கி ஒடுக்கும் இலங்கை சிங்கள பாசிச அரசை முறியடிக்க முடியாது. ஈழ விடுதலைக்கு உண்மையான ஆதரவு சக்திகள் அனைத்தையும் ஒன்றுதிரட்டாமல், புலிகள் மற்றும் அதன் தளபதி பிரபாகரனின் ஏகபோக, பாசிசத் தலைமையாலும் ஈழ விடுதலையைச் சாதிக்க முடியாது என எதிர்வரும் காலம் இன்னும் ஒருமுறை நிரூபிக்கும்.

● ஆர்.கே.


படிப்பகம்

www.padippakam.com

# நீதிபதிகள் புனிதர்களா?

உச்சநீதி மன்றத்துக்கே தலைவலியை ஏற்படுத்தும் பொதுநல வழக்கு ஒன்றை, அது கடந்த மே மாதம் முதல் வாரத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும்படி நேர்ந்தது.

அரசியல் நிர்ணய சட்டம் 105 (2) ஆவது பிரிவு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கியிருக்கும் உரிமையின் வரம்புகளை விளக்கும்படி கோருகிறது அந்த வழக்கு.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரிமை வரம்புக்கு விளக்கம் கோரும் இந்த வழக்கு எப்படி உச்சநீதி மன்றத்துக்குத் தலைவலியாகும் என்ற கேள்வி எழும்பக் கூடும்.

இந்தத் தலைவலி வழக்கு எங்கிருந்தோ வந்ததல்ல. ஏற்கனவே நடந்துவரும் ஒரு வழக்கில் உச்சநீதி மன்றம் கொடுத்த தீர்ப்பின் காரணமாக வந்தது. அதனால்தான் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரிமை வரம்பு உச்சநீதி மன்றத்துக்குத் தலைவலியாகி விட்டது.

1991-96 ஆகிய ஐந்தாண்டுகளாக மத்தியில் ஆட்சி செலுத்தி வந்தது, நரசிம்ம ராவ் தலைமையிலான காங்கிரசின் சிறுபான்மை அரசுதான். 1995-ஆம் ஆண்டு எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்று திரண்டு நரசிம்ம ராவ் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தன. சிறுபான்மையாக இருந்த நரசிம்ம ராவ் அரசு கவிழ்வது நிச்சயம் என்ற நிலை உருவாகியிருந்தது.

இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், கிரிமினல் குற்ற வழக்குகளில் அம்பலப்பட்டுப் போயிருப்பதுதான் நரசிம்ம ராவ் கும்பல். பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக பஞ்சமாபாதகங்களைச் செய்யவும் தயங்காத அக்கும்பல், எதிர்க்கட்சிகளைப் பிளவுபடுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்குவதைக் கைதேர்ந்த அரசியல் கலையாகக் கற்றுத் தேர்ந்திருந்தது.


நரசிம்ம ராவ் தலைமையில் அன்றைய மத்திய அமைச்சர்கள் சத்தீஷ் சர்மா, பூடாசிங், பஜன்லால் மற்றும் கர்நாடக முதல்வர் வீரப்ப மொய்லி ஆகியோர் திரண்டு சதி செய்து, கோடிக்கணக்கான நிதி திரட்டினர். ஜார்க்கண்ட் முத்தி மோர்ச்சா என்ற எதிர்த்தரப்புக் குழுவின் ஏழு உறுப்பினர்களுக்கு இலஞ்சம் கொடுத்து விலைக்கு வாங்கித் தமது அரசு கவிழ்வதில் இருந்து காப்பாற்றிக் கொண்டனர். ஆனால், பின்னாளில் இலஞ்சப் பணத்தைப் பகிர்ந்து கொள்வதில் ஏற்பட்ட தகராறு காரணமாக, ஏற்கனவே ஒரு பகுதி இலஞ்சம் வாங்கிய ஓர் உறுப்பினர், பாரதீய ஜனதாவுக்குக் கட்சி தாவினார். இதனால் குட்டு வெளிப்பட்டது.

அப்போது தொடுக்கப்பட்ட ஒரு பொதுநல வழக்கின் கோரிக்கைப்படி விசாரணையை மத்தியப் புலனாய்வுக் குழு எடுத்துக் கொண்டது. அசைக்க முடியாத ஆதாரங்கள் இருந்தும், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா எம்.பி.க்கள் விலைக்கு வாங்கப்பட்ட இலஞ்ச வழக்கு ஐந்தாண்டுகளுக்கு மேலாக புது தில்லி சிறப்பு நீதி மன்றத்தில் நடந்து வருகிறது. தமிழ்நாட்டின் தலைசிறந்த கிரிமினல் குற்றவாளி ஜெயலலிதாவைப் போலவே தில்லி உயர்நீதி மன்றம், உச்சநீதி மன்றம் ஆகியவற்றில் பல குறுக்கீடு - தலையீட்டு மனுக்கள் போட்டு வழக்கு இழுத்தடிக்கப்பட்டு வருகிறது.

இப்படிப்பட்ட ஒரு மனுவை விசாரித்த உச்சநீதி மன்றம் சமீபத்தில் ஒரு வினோதமான தீர்ப்பை வழங்கியது. ''இலஞ்சம் கொடுப்பது குற்றமாகும்; இலஞ்சம் வாங்கிக் கொண்ட நபர், தான் ஒப்புக் கொண்டபடி செயல்படாததும் குற்றமாகும். மற்றபடி இலஞ்சம் வாங்கி கொண்ட எம்.பி.க்கள் தாம் ஒப்புக் கொண்டபடி நாடாளுமன்றத்தில் வாக்களித்தது குற்றமாகாது. ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா எம்.பி.க்கள் இலஞ்சம் வாங்கிக் கொண்டு நரசிம்ம ராவ் அரசுக்கு ஆதரவாக வோட்டுப் போட்டது குற்றமாகாது. அரசியல் நிர்ணய சட்டம் 105 (2) பிரிவின்படி நாடாளுமன்றத்துக்குள் அதன் உறுப்பினர்களின் நடத்தையை நீதி மன்றங்கள் விசாரிக்கவோ தண்டிக்கவோ முடியாது'' என்பதுதான் உச்சநீதி மன்றத் தீர்ப்பு.

இதன்மூலம் மூல வழக்கான ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா எம்.பி.க்கள் இலஞ்ச வழக்கின் சாரம் - உள்ளடக்கம் நீர்த்துப் போகும்படி உச்சநீதி மன்றம் செய்துவிட்டது. ''இந்தத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும்படி கோரவில்லை. பிரதமர், அரசுத் தலைவர் எனப் பலரும் இலஞ்ச - ஊழலுக்கு எதிராக நாடாளுமன்றத்திலும் செங்கோட்டையிலும் சண்டப் பிரசண்டமடிக்கும்போது, எம்.பி.க்கள் இலஞ்சம் வாங்கிக் கொண்டு வோட்டுப்போடுவதற்கு உரிமை உண்டா?'' என்று கேட்டு இப்போது

**மும்பய் மாஃபியா கும்பலுடன் இரகசியமாகத் தொடர்பு வைத்துக் கொண்டு, அவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பெழுத பேரம் நடத்தியதால், கைது செய்யப்பட்ட நீதிபதி ஜே.டபிள்யூ.சிங். (நடுவே).**





படிப்பகம்

வந்திருக்கிறது பொதுநல வழக்கு. இது தலைவலியை ஏற்படுத்தக் கூடியது என்று அஞ்சிய உச்சநீதி மன்றத்தின் மூவர் அமர்வுக் குழு, வழக்கு விசாரணையை ஐந்து பேர் கொண்ட அரசியல் நிர்ணய சட்ட அமர்வுக் குழு வுக்குத் தள்ளிவிட்டு ஒதுங்கிக் கொண்டது!

நாடாளுமன்ற உறுப்பினர்களின் நடத்தை - உரிமை வரம்பு ஒருபுறம் இருக்கட்டும். நீதிமன்றங்களின் நடத்தையையே பரிசீலனைக்கு - விவாவதத்துக்கு - ஒரு பொது அலசலுக்கு உள்ளாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் எடுத்துக் காட்டுக்களில் இன்னும் ஒன்றாக இத்தீர்ப்பு அமைந்துவிட்டது.

"சட்டம் ஒரு இருட்டறை", "சட்டம் ஒரு கழுதை" என்றெல்லாம் சொல்வதுண்டு. நீதிமன்றங்களும், நீதிபதிகளுமே கூட இப்படிப் பட்டவர்கள்தான் என்பதை நிரூபிக்கும் இன்னொரு தீர்ப்பு இது. முரண்பாடான, எதிரெதிரான தொடர்ச்சியற்ற, தான் தோன்றித் தனமான பல தீர்ப்புகளைக் கண்ட பிறகு, தீர்ப்பை விமர்சிக்கலாம்; நீதிமன்றத்தையோ, நீதிபதிகளையோ விமர்சிப்பது, அவமரியாதைக் குற்றமாகும் என்று சொல்லிப் பாதுகாப்புக் கவசம் போடுவது சரியாகுமா? நாடாளுமன்றத்துக்குள் எம்.பி.க்களுக்கு வரைமுறையில்லாத உரிமைகள் வழங்கப்பட்டிருப்பது எப்படி கேடானதோ, அதேபோல நீதிமன்றத்துக்குள் நீதிபதிகளுக்கு வரைமுறையில்லாத உரிமைகள் வழங்கப்பட்டிருப்பதும் கேடானது.

எம்.பி.க்கள், நீதிபதிகள் ஆகியோரின் விவாதங்களும் முடிவுகளும், நாட்டையும் மக்களையும் பாதிக்கக்கூடியதாக இருக்கையில், அவர்களுடைய நடத்தைகள் மட்டும் விமர்சனத்துக்கும் விசாரணைக்கும் அப்பாற்பட்டதாக எப்படி இருக்க முடியும்.

இங்கே சில எடுத்துக்காட்டுக்களைப் பார்ப்போம்.

சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் ஜெயா - சசி கும்பலுக்கு எதிராக 46 வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றை முடிவு காணாதவாறு இழுத்தடிக்கும் நோக்கோடு உச்ச, உயர்நீதி மன்றங்களில் நூற்றுக்கணக்கான மனுக்கள் போட்டனர். இறுதியில் பல மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டாலும், விசாரணை என்ற பெயரில் ஜெயா - சசி கும்பலின் கால விரய முயற்சியில் நீதிமன்றங்கள் ஒத்துழைக்கவே செய்தன. முக்கியமாக, தனக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்கு ஆளுநர் அனுமதித்தது செல்லாது என்று ஜெயா தொடுத்த வழக்கை பல ஆண்டுகளாகியும் உச்சநீதி மன்றம் இழுத்தடித்துக் கொண்டே போகிறது.

டான்சி நிலபேரம் மற்றும் நிலக்கரி இறக்குமதி ஊழல் வழக்குகள் சிறப்பு நீதிமன்றத்தில் நடப்பதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குப் போட்டார், ஜெயா. சிறப்பு நீதிமன்ற விசாரணையில் குறுக்கிட்ட "சிங்கப்பூர் புகழ்" நீதிபதி தங்கராசு அந்த இரண்டு வழக்குகளில் இருந்தும் ஜெயாவை விடுவித்து அடாவடித் தீர்ப்பு வழங்கினார். அரசு நிலத்தை முதல்வர் வாங்குவது குற்றமல்ல; அரசுக்கு நட்டம் ஏற்படும் வகையில் வாங்கியதோ, பத்தரப் பதிவில் மோசடி செய்ததோ குற்றமல்ல என்று தீர்ப்பளித்தார். சிறப்புக் கவனம் செலுத்தி, வழக்கைத் தன்னிடமே வைத்துக் கொண்டு, ஒரு கிரிமினலுடன் சிங்கப்பூர் உல்லாசப் பயணம் போய் வந்த பிறகு இந்த அடாவடித் தீர்ப்பு வழங்கப்பட்டது என்ற செய்தி வெளியானது.

தீர்ப்பை எதிர்த்துத் தமிழக அரசு உச்சநீதி மன்றத்துக்குப் போனது. சிங்கப்பூர் புகழ் தங்கராசுவின் தீர்ப்பு செல்லாது என்று உச்சநீதி மன்றம் ரத்து செய்து தீர்ப்பளித்தது. இறுதியில் நீதி நிலை நாட்டப்பட்டது என்று ஜனநாயகவாதிகள் நிம்மதி பெருமூச்சு விட்டார்கள். ஆனால், இந்தத் தீர்ப்பே ஒரு ஊனப் பிறவியாய் வந்ததை யாரும் கண்டு கொள்ளவில்லை. உயர்நீதி மன்றத்தின் சார்பில் தங்கராசுவின் தீர்ப்பு செல்லாது என்று சொன்ன உச்சநீதி மன்றம், அந்த விவகாரத்துக்குள்ளேயே செல்லவில்லை. ஒரு நாலாந்தர கட்டைப் பஞ்சாயத்துக்காரனைப் போலவே நடந்து கொண்டது. டான்சி மற்றும் நிலக்கரி ஊழல் வழக்குகளில் இருந்து ஜெயலலிதாவை விடுவிப்பதற்கு தங்கராசு சொன்ன காரணங்கள் எதையும் பரிசீலிக்கவோ, அவற்றின் மீது கருத்துக் கூறவோ இல்லை. அதற்குப் பதிலாக ஜெயலலிதா தரப்பு வக்கீலைக் கூப்பிட்ட உச்சநீதி மன்ற நீதிபதிகள், "தனி நீதிமன்றத்தில் 80 சதவீத அளவு விசாரனை முடிந்துவிட்ட நிலையில், அதில் உயர்நீதி மன்றம் தலையிட்டு ஒரு தீர்ப்புக் கூறியிருக்க வேண்டாம் என்று நாங்கள் கருதுகிறோம். இது எங்கள் தீர்ப்பு அல்ல; கருத்துத்தான். உங்கள் கட்சிக் காரர் மீண்டும் சிறப்பு நீதிமன்ற விசாரணையைச் சந்திக்க விரும்புகிறாரா"? என்று கேட்டனர்.

வழக்குத் தள்ளி வைக்கப்பட்டது. ஜெயாவின் வழக்கறிஞர் தனது கட்சிக்காரர் சிறப்பு நீதிமன்ற விசாரணைக்கு உட்படத் தயார் என்று அறிவித்தார். அப்படியே செய்யும்படி உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்து விட்டது. எப்படி, தடியும் உடையாமல், பாம்பும் சாகாமல் திறமையாக செயல்பட்டது, உச்சநீதி மன்றம், பார்த்தீர்களா? மெத்தப் படித்த சட்ட நிபுணர்கள் அல்லவா! தனிச் சிறப்பான உரிமைகள், சலுகைகள் பெற்ற உச்ச அதிகாரிகள் அல்லவா! அதனால்தான் பொறுப்புடன் கடமையாற்றியுள்ளார்கள்!

சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி தங்கராசு சிங்கப்பூர் உல்லாசப் பயணம் பற்றிய விடயம் ஒருபுறம் இருக்கட்டும். "அரசு சொத்துக்களை அரசு ஊழியர் வாங்கக் கூடாது என்று எந்தச் சட்டத்தில் இருக்கிறது? அரசு ஊழியர் நடத்தை நெறி என்பது அரசு ஆணைதானே தவிர சட்டமல்ல! சொத்தின் மதிப்பைவிடக் குறைந்த விலைக்கு வாங்கினாலும் தவறில்லை!" என்பது போன்ற தங்கராசுவின் நீதி பரிபாலனத் தர்க்கங்கள் மீது கருத்துக் கூறாமலேயே நழுவிக் கொண்டது உச்சநீதி மன்றம். தங்கராசுவின் இந்த தர்க்க - அதர்க்க - குதர்க்க நீதி வாதங்கள். இன்ன மும் செல்லுமா, செல்லதா? என்கிற கேள்வி அப்படியே நிற்கிறது.

சரி, தனது சகபாடியைக் காப்பாற்றும் வகையில் உச்சநீதி மன்றம் வழங்கிய தீர்ப்பின் தர்க்கப்படியாவது அது நின்றதா? விசாரணை நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கும் வழக்கொன்றில் தலையிட்டு - தடுத்து மேல் முறையீடு தீர்ப்புச் சொல்லு




**போபால் விஷ வாயுக் கசிவு வழக்கில் உச்சநீதி மன்றத் தீர்ப்பால் வஞ்சிக்கப்பட்ட போபால் நகரத்து மக்கள்.**

www.padippakam.com

வது சரியல்ல என்பதுதானே உச்சநீதி மன்றத்தின் தர்க்கம். இப்படி ஒரு தீர்ப்புச் சொல்லிவிட்டு அதேசமயம், தில்லியில் சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்ற விசாரணையில் இருக்கும் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா எம்.பி.க்கள் இலஞ்ச வழக்கில் தலையிட்டு இலஞ்சம் வாங்கிக் கொண்டு நாடாளுமன்றத்தில் வோட்டுப் போடுவது குற்றமல்ல என்ற தோரணையில் உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. இது வேறு தீர்ப்புக்கு முரணானது, தான்தோன்றித்தனமானது என்று உச்சநீதி மன்ற நீதிபதிகளுக்குத் தெரியாதா?


அடிமட்டத்திலுள்ள முன்சீப், மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் முதல் உச்சநீதி மன்றம் வரை எல்லா மட்டங்களிலும் இதே தன்மைதான் உள்ளது. கீழ்நிலை வழக்கு மன்றங்கள் எல்லாம் போலீசு நிலையங்களின் கிளைகளாக, நீட்டிப்பாகத்தான் இயங்குகின்றன. அதனால்தான் "கீழ்கோர்டுகள் தவறான தீர்ப்புகள் சொன்னாலும், உயர் நீதிமன்றங்களும் உச்சநீதி மன்றங்களும் நடுநிலை வழுவாத நீதியரசர்களைக் கொண்டவை" என்று ஜனநாயக வாதிகள் நம்பச் சொல்லுகிறார்கள்.

ஆனால், உயர்நீதி, உச்சநீதி மன்றங்களின் யோக்கியதை என்ன?

★ கர்நாடகாவில் கெஞ்சிகே கிராமத்தில் எட்டு வயதுச் சிறுமியை ஒரு கிரிமினல் குற்றவாளி கற்பழித்து விடுகிறான். அச்சிறுமியின் தாய் உட்பட கிராமத்தின் பெண்கள் பலரிடமும் பாலியல் வன்முறையில் ஈடுபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். கடைசியாகப் பிடிபட்டு 10 ஆண்டு சிறையும், 3000 ரூபாய் அபராதமும் விசாரணை நீதிமன்றத்தில் விதிக்கப்பட்டது. ஆனால் அவன் குடிபோதையில்தான் இக்குற்றம் புரிந்து விட்டான் என்று கரிசனப்பட்டது பெங்களூர் உயர்நீதி மன்றம். அதனால் அவனது தண்டனைக் காலத்தை நான்காண்டாகக் குறைத்தது.

★ இராசஸ்தானில் பாலியல் வன்முறைக்குப் பலியான 15 வயதுப் பெண்ணின் வாக்குமூலம், அவளது தந்தையின் வாக்குமூலம், மருத்துவப் பரிசோதனை முடிவு ஆகியவற்றை ஆதாரமாக வைத்து குற்றவாளிக்கு ஏழாண்டு சிறைத் தண்டனை விதித்தது விசாரணை நீதிமன்றம். ஆனால், வழக்கு மேல் முறையீட்டிற்காக வந்தபோது, "கற்பழிக்கப்பட்டதாகக் கூறப்படும் பெண்ணின் உடம்பில் காயம் ஏதும் ஏற்படவில்லை" என்கிற காரணத்தைக் கூறி, ராஜஸ்தான் உயர் நீதிமன்றம் குற்றவாளியை விடுதலை செய்துவிட்டது.

இதே கர்நாடகா உயர்நீதி மன்றம் முன்பு பஸ் கிடைக்காமல் சந்தை நகர் ஒன்றில் சிக்கிக் கொண்ட பெண்ணின் கற்பழிப்பு வழக்கில், பாலியல் உணர்வு தூண்டப்பட்டு குற்றம் நடந்து விட்டது என்று கூறி குற்றவாளிகளை விடுவித்தது. இதே இராஜஸ்தான் உயர் நீதிமன்றம், முன்பு பன்வாரி தேவி என்ற தாழ்த்தப்பட்ட பெண்ணை நான்கு மேல்சாதி வெறியர்கள் கற்பழித்த வழக்கில், தீண்டத்தகாத பெண்ணை மேல்சாதிக்காரர்கள் தொட்டுக் கற்பழித்திருப்பார்கள் என்பதை நம்ப முடியவில்லை என்று தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பு முப்பது ஆண்டுகளுக்கு முன் நடந்த கீழ் வெண்மணி - 42 பேர் உயிரோடு கொளுத்தப்பட்ட வழக்கில் சென்னை உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பை ஒத்திருக்கிறது. பெரும் செல்வந்தரும், மேல் சாதிக்காரருமான நிலப்பிரபு, தாழ்த்தப்பட்டவரைக் கொளுத்தினார் என்பதை ஏற்க முடியாது என்று கூறி அக்கொலைகாரனை விடுதலை செய்தது. முப்பதாண்டுகளுக்கு முந்திய, அதற்கும் நூறாண்டுகளுக்கு முந்திய "நீதி வழங்கும்" முறைமையே இன்னமும் நீடிக்கிறது என்பதை இத்தீர்ப்புகள் காட்டுகின்றன.



**அரசின் பிற உறுப்புகளைப் போலவே ஆளும் வர்க்கங்களுக்கு ஊழியம் செய்து, அவற்றின் மக்கள் விரோத, நாட்டு விரோதச் செயல்களுக்கு நியாயம் - நீதி கற்பிப்பதற்காகவே பயிற்றுவித்து உருவாக்கப்பட்டதுதான் நீதித்துறை.**

நீதிமன்றங்களுக்கு நடுவர் மன்றங்கள் என்று இன்னொரு சொல் புழக்கத்தில் இருக்கிறது. ஆனால் வாதி - பிரதிவாதிக்கு இடையே நடுவர் மன்றமாக இருந்து செயல்படுவதே இல்லை. ஒரு பக்கம் சாய்வுத் தன்மை உடையதாகவே செயல்படுகின்றன. உழைக்கும் மக்களுக்கும் நாட்டு நலனுக்கும் எதிராகவும், பெரு நிலப்பிரபுக்கள், பெரு முதலாளிகள், மேல்சாதி - மேட்டுக் குடிகள், கிரிமினல் குற்றவாளிகள், இலஞ்ச - ஊழல் புரியும் அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகளுக்குச் சாதகமாகவும் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருவதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுகள் உண்டு.

இலஞ்ச ஊழல் வழக்குகளில் இருந்து நரசிம்ம ராவ், சத்தீஷ் சர்மா, ஹவாலா குற்றவாளிகள் எனப் பலரை விடுவித்துள்ளது, உச்சநீதிமன்றம். ஏறக்குறைய ஐம்பதாண்டுகளாகியும் அயோத்தி - பாபரி மசூதிக்குள் புகுந்து இந்துமத வெறியர்கள் இராமன் - சீதை பொம்மையை வைத்து உரிமை கொண்டாடிய வழக்கில் இன்னமும் தீர்ப்புக் கூறாமல் இழுத்தடிக்கிறது. அந்த பாபரி மசூதியை இடிப்பதற்குக் கூடிய இந்து பாசிச வெறியர்களுக்கு மறைமுக அனுமதியும் பாதுகாப்பும் கொடுத்தது; மசூதியை இடித்த கிரிமினல் குற்றவாளிகள் மீதான வழக்கை கிடப்பில் போட்டுவிட்டது நீதிமன்றங்கள்தாம். இராமன் புராண - இதிகாச கற்பனைப் பாத்திரமல்ல, இந்த நாட்டின் வீர தீர நாயகன், நமது அரசியல் சாசனத்தில் உள்ள புராண - இதிகாச வரை படங்களே அதற்கு ஆதாரம் என்று மதவெறித் தீர்ப்புமளித்தது, உச்சநீதி மன்றம்.

ஆயிரக்கணக்கானோர் சாகவும், இலட்சக்கணக்கானோர் படுகாயமுற்று பாதிக்கப்படவும் காரணமான போபால் விஷவாயு வழக்கில் அந்நிய யூனியன் கார்பைடு முதலாளியைக் காப்பாற்றி கட்டைப் பஞ்சாயத்துத் தீர்ப்பு வழங்கியது. தனியார்மயம் அரசின் உரிமை என்று தீர்ப்புக் கூறியதன் மூலம் தாராளமயம், தனியார்மயம், உலகமயம் என்ற புதிய பொருளாதாரக் கொள்கையை முற்றாக ஆதரிப்பதை உச்சநீதி மன்றம் பிரகடனம் செய்தது.

தீர்ப்புகள் மட்டுமல்ல, நீதிபதிகளின் நடத்தைகளே கூட விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவையாக இருக்க முடியாது. அம்பானி, நுஸ்லிவாடியா - கோயங்கா ஆகிய தரகு முதலாளிகளுக்கிடையிலான வழக்கில் விடுமுறை நாளன்று தனது வீட்டிலேயே வழக்கை விசாரித்து அம்பானிக்குச் சாதகமாக தீர்ப்புச் சொன்ன உச்சநீதி மன்ற நீதிபதி கூட உண்டு. இன்றைய அ.தி.மு.க. உறுப்பினரும், அன்றைய உச்சநீதி மன்ற நீதிபதியுமான ராமசாமி அரசுச் சொத்தில் ஊழல் புரிந்தார் என்று நிருபணமானது. இவரது மாமனாரும் சென்னை உயர்நீதி மன்ற தலைமை நீதிபதியாகவும் இருந்த வீராசாமி இலஞ்ச - ஊழல் புரிந்தார் என்று சுமார் இருபது ஆண்டுகளாக நடந்த வழக்கில் நிருபணமானது. ஒரு வழக்குக்காக முறையீடு செய்ய வந்த பெண்ணைக் கற்பழித்த நீதிபதி, பம்பாய் கிரிமினல் மாஃபியா கும்பலுடன் இரகசிய உறவு கொண்டிருந்து, குட்டு வெளிப்பட்டதும் தலைமறைவான நீதிபதி - இப்படிப் பல எடுத்துக்காட்டுக்கள் உண்டு.

இருந்தபோதும், நீதித்துறை, நீதிபதிகள் மீது மட்டும் நம்பிக்கை வைக்கும்படி திரும்பத் திரும்ப மக்கள் கேட்டுக் கொள்ளப்



படிப்பகம்

www.padippakam.com

படுகிறார்கள். ஜனநாயகத்தின் இறுதிப் புகலிடம் நீதிமன்றம்தான் என்று கைகாட்டுகிறார்கள். இது சரியா? "ஒரு தாயத்தைக் கட்டிக் கொண்டால் காத்துக் கருப்பு அண்டாது" என்று மந்திரவாதிகள் நம்பச் சொல்லுகிறார்களே, அதைப்போல அந்தக் கருப்பு அங்கி அணிந்து கொண்டால் இந்தச் சமுதாயப் பாதிப்புகள் - பண்புகள் எதுவும் நீதிபதிகளையும் நீதிமன்றங்களையும் தாக்காதா?

போலீசுத் துறையின் மீது புகார் வரும் போதெல்லாம் அதிகாரிகள் ஒரு நியாய வாதம் பேசுவதுண்டு. "மக்கள் தொகை பெருகிவிட்டது; குற்றங்களும் பெருகிவிட்டன. போலீசுக்காரர்கள் மனிதர்கள்தானே. சமுதாயப் பாதிப்புகள் காரணமாக போலீசுத் துறையிலும் சில கருப்பு ஆடுகள் வந்து விடுகிறார்கள்" என்பது இவர்கள் வாதம். சில கருப்பு ஆடுகள் தானா? போலீசுத் துறையின் கல்லீரலில் முக்கால் பகுதி கெட்டு விட்டது என்றார் கருணாநிதி.

இதெல்லாம் நீதித்துறைக்கும் நீதிபதிகளுக்கும் பொருந்தாதா? இவர்கள் மட்டும் சமுதாயச் சீரழிவுகளால் பாதிக்கப்படாது தனித்தீவில் வைக்கப்பட்டிருக்கிறார்களா? அப்படி வைக்கப்பட்டிருப்பதைப் போல ஒரு மாயைதான் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதையே தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு சாமானியர்கள் நெருங்க முடியாத அதீத சக்தி வாய்ந்த நபர்களாகக் காட்டிக் கொண்டு மக்களை மிரட்டுகிறார்கள். புனிதர்களாக வேடம் போட்டுக் கொண்டு இரகசிய வாழ்க்கை வசதிகளைத் தேடிக் கொள்கிறார்கள்.

அப்படி உண்மையிலேயே சமுதாயத்திற்கு அப்பாற்பட்டவர்களாக இருந்தாலும் மக்கள் - சமூக வாழ்நிலை எதுவும் அறிய மாட்டார்கள். அவர்களுடைய தீர்ப்புக்களும் ஒரு குறுகிய வட்டத்திற்குள் வாழும் மனிதர்கள், அவர்கள் சார்ந்த வர்க்க - சாதி தன்மை உடையனவாகவே இருக்கும். பிறப்பால் உழைக்கும் வர்க்கம், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சாதிகளில் இருந்து வந்தாலும் கல்வி, வேலை, சம்பளம், வாழ்க்கை வசதிகளால் மேட்டுக்குடியோடு ஐக்கியமாகிவிடும் ஒரு பிரிவினரிடம் நடுநிலையை எதிர்பார்க்க முடியாது. அது மட்டுமல்ல, என்ன தவறு - குற்றம் புரிந்தாலும் உயர் - உச்சநீதி மன்றங்களின் நீதிபதிகள் தப்பித்துக் கொள்ளும் வகையில் சட்ட பூர்வப் பாதுகாப்புக் கவசம் பெற்றிருக்கிறார்கள். குற்றம் புரியும் நீதிபதிகளை இன்னொரு நீதிமன்றம் கூடத் தண்டிக்க முடியாது. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையினர் நடவடிக்கைத் தீர்மானம் போட்ட பிறகு, அரசுத் தலைவர் வேண்டுமானால் நடவடிக்கை எடுக்கலாம்.

நிர்வாக அதிகாரிகள், இராணுவம் - துணை இராணுவம், போலீசு ஆகியவற்றோடு நீதித்துறை - நீதிபதிகளும் அரசு இயந்திரத்தின் ஒரு பகுதிதான். மற்ற துறைகள் இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடு போன்றவற்றால் அழுகி நாறும்போது நீதித்துறை மட்டும் தூய்மையாக, ஆரோக்கியமாக இருக்கிறது என்றால் ஏற்க முடியுமா? நீதித்துறையில் உள்ள சில அதிகாரிகள் (நீதிபதிகள்) வேண்டுமானால் நீதித்துறை சுதந்திரமானது என்கிற பிரமையில் சில தீர்ப்புகள் நடுநிலையில் நின்று வழங்கலாம். ஆனால், இவை பொது விதியல்ல. அரசின் பிற உறுப்புகளைப் போலவே ஆளும் வர்க்கங்களுக்கு ஊழியம் செய்து, அவற்றின் மக்கள் விரோத, நாட்டு விரோத செயல்களுக்கு நியாயம் - நீதி கற்பிப்பதற்காகவே பயிற்றுவித்து உருவாக்கப்பட்டதுதான் நீதித்துறை. அரசின் மற்ற உறுப்புகள் மீது நம்பிக்கையிழந்துவிட்ட மக்களுக்கு, ஆட்சி அதிகார உரிமையைத் தக்க வைத்துக் கொள்வதற்கு இறுதி வாய்ப்பாக ஆட்சியாளர்கள் பயன்படுத்தும் ஆயுதம்தான் நீதித்துறை நடுநிலையானது, புனிதமானது, நம்பிக்கை வைக்கக் கூடியது என்கிற பிரமை. இந்தப் பிரமையை உதறிவிட்டால் அரசு எந்திரத்தின் கோர முகம் முழுவதுமாகத் தெரியும் என்பதற்காக உருவாக்கப்படுவதுதான் அந்தப் பிரமை.

● மாணிக்கவாசகம்

# மீண்டும் தருமபுரி சிவக்கும்!

"நாட்டை மீண்டும் காலனியாக்காதே! மரணக் குழியில் மக்களைத் தள்ளாதே!" என்ற மைய முழக்கத்துடன் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து, மே நாளில் தருமபுரியில் பேரணியும் பொதுக்கூட்டமும் நடத்தின. இது, நாட்டையும் மக்களையும் மேலாதிக்க வல்லரசுகளுக்கு அடிமைப்படுத்தி வரும் ஆளுங்கும்பலை அடையாளம் காட்டி, புரட்சிக்கு மக்களை அணிதிரட்டும் அறைகூவலாக அமைந்தது.

மே நாளையொட்டி தமிழகமெங்கும் சுவரெழுத்து, தட்டிகள், துண்டுப் பிரசுரம், சிறு வெளியீடு - என மறுகாலனி ஆதிக்கத்திற்கு எதிரான அரசியல் பிரச்சாரத்தை இவ்வமைப்புகள் வீச்சாக மக்களிடம் எடுத்துச் சென்றன. விவசாயத்தை நாசமாக்கி, விவசாயிகளின் வாழ்வைப் பறித்து வரும் மறுகாலனியத் தாக்குதல்களை விளக்கி, தருமபுரி மாவட்டம் முழுவதும் கிராமங்கள் தோறும் ஆட்டோ பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.



அரசியல் ஆர்ப்பாட்ட நாளான மே நாளன்று மாலை செங்கொடிகள் விண்ணில் உயர்ந்து பட்டொளி வீச, புரட்சிகர முழக்கங்கள் எங்கும் எதிரொலிக்க, பல்வேறு பகுதிகளிலிருந்து குடும்பம் குடும்பமாகத் திரண்டு வந்த உழைக்கும் மக்கள் பங்கேற்ற ஊர்வலம் தருமபுரியை அதிர வைத்தது. ஊர்வலம் சென்ற வழியெங்கும் திரண்டு நின்று ஆதரித்து வாழ்த்திய தருமபுரி நகர மக்கள், புரட்சிகர அரசியல் முழக்கங்களை ஆர்வத்துடன் கேட்டனர்.

பொதுக்கூட்டத்தில் சிறப்புரையாற்றிய தோழர்கள், நாட்டையும் மக்களையும் அடிமைப்படுத்தி வரும் துரோகிகளை அம்பலப்படுத்தி, ஓட்டுக்கட்சி அரசியலால் இந்நிலைமையை மாற்றியமைக்க முடியாது; நக்சல்பாரிகள் தலைமையிலான புரட்சியே நாட்டையும் மக்களையும் விடுதலை செய்யும் என்பதை ஆணித்தரமாக விளக்கினர். பின்னர் நடைபெற்ற புரட்சிகர கலைநிகழ்ச்சி, பார்வையாளர்களைக் கவர்ந்திழுத்துப் புரட்சிகர உணர்வுக்குப் புதுரத்தம் பாய்ச்சியது.

நக்சல்பாரிகள் வன்முறையாளர்கள், கொலைகாரர்கள் என்று அவதூறு செய்து, அடக்குமுறையும் பயங்கரவாத பீதியும் கட்டவிழ்த்து விடப்பட்ட தருமபுரி மாவட்டத்தில், இந்த அவதூறுப் பிரச்சாரத்தையும் மக்களிடம் நிலவிய அச்சத்தையும் தகர்த்து, நக்சல்பாரிகளே உண்மையான புரட்சியாளர்கள் என்பதை நிரூபித்து, மக்களைப் புரட்சிக்கு அணிதிரள விடுக்கும் அறைகூவலாக மே நாள் பேரணியும் பொதுக்கூட்டமும் திகழ்ந்தன. "செங்கொடிகள் மீண்டும் உயரும்! தருமபுரி சிவக்கும்! நக்சல்பாரிகள் தலைமையில் மறுகாலனியாதிக்கமும் பாசிச அடக்குமுறையும் தகர்த்தெறியப்படும்" எ[illegible] யங்கூறும் வகையில் அமைந்த இந்த மே நாள் பேரணி, [illegible]ம் மக்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.


படிப்பகம்

www.padippakam.com

# உலகமயமாக்கலின் அடுத்த பலி தேயிலை விவசாயிகள்

ஊட்டி என்றாலே உல்லாசமாகப் பொழுதைப் போக்குவதற்கு இயற்கையினால் படைக்கப்பட்ட இடம் என்ற பிம்பத்தை தான் பெரும்பாலோரின் மனதில், திரைப்படங்கள் மட்டுமல்ல, தமிழக அரசும் உருவாக்கி வைத்துள்ளது. மலர்க் கண்காட்சியையும், "பொட்டானிக்கல் கார்டனை"யும், ஏரிகளையும், படகு சவாரிகளையும், "கான்வென்ட்" பள்ளிக்கூடங்களையும் தெரிந்து வைத்திருக்கும் அளவிற்கு, தமிழர்களுக்குக் கூட, ஊட்டியில், ஊட்டி அமைந்துள்ள நீலகிரி மாவட்டத்தில் வாழும் மக்களைப் பற்றித் தெரியாது. திரைப்படங்களும், தமிழக அரசும் மறைத்து விட்ட ஊட்டியின், நீலகிரி மாவட்டத்தின் உண்மை முகத்தை, நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த சிறு தேயிலை விவசாயிகள் சமீபத்தில் நடத்திய போராட்டங்கள் பளிச்சென எடுத்துக் காட்டிவிட்டன.

நீலகிரி மாவட்டத்தின் பொருளாதாரத்தைத் தாங்கி நிற்பது, அதன் தூணாக இருப்பது ஊட்டியிலும், அதைச்சுற்றியுள்ள மலைப் பகுதிகளிலும் நடந்து வரும் திரைப் படப் படப்பிடிப்போ, ஊட்டிக்கு வந்து போகும் சுற்றுலாக் கூட்டமோ அல்ல. உலகப் புகழ் பெற்ற "நீலகிரிஸ்" எனப்படும் தேயிலையைப் பயிரிடும் விவசாயிகள், காபி, காய்கறிகள் பயிரிடும் விவசாயிகள் தான் நீலகிரி மாவட்டத்தின் இயக்கத்திற்கு அச்சாணியாக இருந்து வருகின்றனர்.

தேயிலை விவசாயம் என்றவுடன் நீலகிரி மாவட்டத் தேயிலை விவசாயிகளை எஸ்டேட் அதிபர்களைப் போல யாரும் கற்பனை செய்து கொள்ள வேண்டாம். நீலகிரி மாவட்டத் தேயிலை விவசாயிகள் அனைவரும் மூன்று அல்லது நான்கு ஏக்கர்களில் தேயிலைப் பயிரிட்டு வாழ்க்கை நடத்தி வரும் சிறு விவசாயிகள். சில வருடங்களுக்கு முன்பு வரை காய்கறி பயிரிட்டு வந்த இவர்களை, இந்தியத் தேயிலை வாரியம்தான் தேயிலை பயிரிடுமாறு கட்டாயப் படுத்தி மாற்றியது. இச்சிறு விவசாயிகள் தேயிலையைப் பயிரிட்டு விளைவித்த போதும், அதற்கு விலை நிர்ணயம் செய்வது, வெளிச் சந்தையில் விற்பது எல்லாம் இந்தியத் தேயிலை வாரியம் நியமித்துள்ள இடைத்தரகர்கள் மூலம் தான் நடைபெறுகிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு வரை, கிலோ ஒன்றுக்கு பதினைந்து ரூபாய்க்கு விற்கப்பட்ட பச்சைத் தேயிலையை, இன்று நான்கு ரூபாய்க்கு கூடச் சீந்துவார் கிடையாது. 3,000 மெட்ரிக் டன் தேயிலை விற்பனையாகாமல் தேங்கிக் கிடப்பதாக ஒரு புள்ளி விவரம் கூறுகிறது. "ஒரு கிலோ பச்சைத் தேயிலையை விளைவிப்பதற்கான செலவே நான்கு ரூபாய்க்கு மேலாகும் பொழுது, இந்த விலை எப்படி கட்டுப்படியாகும்?" என்கிறார்கள் தேயிலை விவசாயிகள். இந்த விலைச் சரிவு, தேயிலை விவசாயிகள், தேயிலைத் தோட்டங்களில் கூலிக்கு இலை பறிக்கும் தொழிலாளர்கள், பச்சைத் தேயிலையைத் தேயிலைத் தூளாக அரைத்துத் தரும் சிறு தேயிலை தொழிற்சாலைகள், பல சரக்கு வியாபாரம் உள்ளிட்ட அனைத்தையுமே பாதித்திருக்கிறது.

"கார், லாரி, வேன்கள், வீடுகள், கடைகள், வயல்வெளிகள், தோட்டங்கள் என்று எங்கெங்கும் இவ்விலை வீழ்ச்சியைக் கண்டித்துக் கறுப்புக் கொடிகள் பறப்பதாகவும், பேருந்தில் போகப் பணமில்லாமல் பல விவசாயிகள் தாங்கள் போக வேண்டிய இடங்களுக்கு பல கிலோ மீட்டர் நடந்தே போவதாகவும், நீலகிரியில் வாழும் படுகா இன மக்கள் விலை வீழ்ச்சியின் காரணமாக, தங்கள் குல தெய்வ கோயிலுக்கு நடத்தும் திருவிழாவைக் கூடப் புறக்கணித்து விட்டதாகவும், நீலகிரியின் அண்டை மாவட்டமான கோவையிலும் கூட வியாபாரம் பாதிப்படைந்திருப்பதாகவும்" செய்திகள் வெளிவந்துள்ளன.

நீலகிரி மாவட்டத் தேயிலை விவசாயிகள், "தேயிலை விலை வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டோர் போராட்டக் குழு" என்ற அனைத்துக் கட்சிக் கூட்டுக் குழுவின் கீழ் இணைந்து, ஊர்வலம், உண்ணாவிரதம் அதிகாரிகள் - அமைச்சர்களைப் பார்த்து மனு கொடுப்பது எனப் பல வழிகளில் கடந்த நான்கு மாதங்களாகவே போராடி வருகின்றனர். தொடக்கத்திலேயே இப்பிரச்சினையில் அக்கறை செலுத்தாமல், அலட்சியப்படுத்தி வந்த தமிழக அரசு, தேயிலை விவசாயிகள் மலர்க் கண்காட்சியை நடத்த விடமாட்டோம் என எச்சரித்த பிறகு, சாலை மறியலில் ஈடுபட்டு சுற்றுலாப் பயணிகளை ஊட்டிக்குள் வரவிடாமல் தடுத்த பிறகுதான், "நடவடிக்கை" எடுக்கத் தொடங்கியது.

பிரச்சினையைக் க்ண்டு கொள்ளாமல் விட்டு, விவசாயிகளின் வாழ்க்கையைப் பாழடிக்கலாம். ஆனால், பணக் கொழுப்பெடுத்து, குளுகுளு ஊட்டியில் ஓய்வெடுக்க வரும் மேட்டுக்குடிக் கும்பலின் உல்லாசம் கெட்டுவிட அனுமதிக்க முடியுமா? அதற்காகவே, தங்களின் வாழ்க்கைக்காகப் போராடிய விவசாயிகளைச் சிறைக்குள் தள்ளியது தி.மு.க. அரசு. மறுபுறம், பேச்சு வார்த்தைக்கு அழைத்தும், அற்பமான சலுகைகளைக் காட்டியும், போராட்டத்தைக் கைவிடச் செய்து ஊட்டியில் 'அமைதி'யை நிலை நாட்டினார்கள்.

தேயிலை விவசாயிகள், ஒரு கிலோ பச்சைத் தேயிலையின் விலை ரூ. 15/- என நிர்ணயிக்கக் கோருகிறார்கள். மைய அரசோ, ஏலத்தில் எடுக்கப்படும் தேயிலைத் தூளின் விலை ரூ.55/-க்கு குறைந்தால், ஒரு கிலோ தேயிலைத் தூளுக்கு ரூ. 5/- மானியமாகத் தரப்படும் என அறிவித்துள்ளது. நான்கு கிலோ பச்சைத் தேயிலையில் இருந்து ஒரு கிலோ தேயிலைத் தூள் பெற முடியும். மைய அரசு அறிவித்துள்ள சலுகையின்படி பார்த்தால், தேயிலை விவசாயிக்கு, ஒரு கிலோ பச்சைத் தேயிலைக்கு மானியத்தையும் (ரூ. 1.25) சேர்த்து, ரூ. 5.25 தான் விலையாகக் கிடைக்கும். இலங்கையில் இருந்து தேயிலை இறக்குமதி செய்யப்படுவதற்குத் தடை விதிக்க வேண்டும் என்பது

தேயிலை இறக்குமதியைத் தடை செய்யவும், தேயிலைக்கு விலை நிர்ணயிக்கவும் கோரிப் போராடிய நீலகிரி மாவட்டத் தேயிலை விவசாயிகள்.




படிப்பகம்

www.padippakam.com

விவசாயிகளின் இன்னுமொரு கோரிக்கை. ஆனால், மைய அரசோ, இறக்குமதிக்குத் தடை விதிக்காமல், இலங்கையில் இருந்து வரும் தேயிலைத் தூளின் மீது விதிக்கப் படும் சுங்க வரியை சிறிதளவு உயர்த்தியுள் ளது.

பிரச்சினையை ஆராய ஒரு அதிகார வர்க்க நிபுணர் குழுவை நியமித்துள்ள தமி ழக அரசு, தன் பங்குக்கு, தேயிலைத் தூளின் மீது விதிக்கப்படும் விற்பனை வரியை 8 சத வீதத்தில் இருந்து 4 சதவீதமாகக் குறைத்துள் ளது. இந்தச் சலுகைகள் எல்லாம், "யானைப் பசிக்கு சோளப் பொறி" என்கிறார் போராட்டக் குழுவின் தலைவர் பெள்ளன். இந்த அற்பச் சலுகைகளும் கூட அடுத்த ஆறு மாதம் வரைக்கும் தான் நடைமு றையில் இருக்கும்.

உலக வர்த்தகக் கழக ஒப்பந்தத்தின் படியும், தெற்காசிய (சார்க் அமைப்பு) நாடுகள் தங்களுக்குள் போட்டுக் கொண்ட ஒப்பந்தத்தின்படியும் கென்யாவில் இருந்தும், இலங்கையில் இருந்தும் மிக மலி வான விலையில் தேயிலை இறக்குமதி செய்யப்படுவதால்தான், நீலகிரி தேயி லையின் விலை வீழ்ந்துவிட்டதாக தேயிலை விவசாயிகள் கூறுகின்றனர். இந்தக் கார ணத்தை மைய - மாநில அரசுகள் மறுக்காத பொழுதே, "ரசியாவுக்கு ஏற்றுமதி செய்யப் பட வேண்டிய 10 கோடி கிலோ தேயிலைத் தூள் ஏற்றுமதியாகாமல் தேங்கிக் கிடப் பதும், தேயிலை சாகுபடி பரப்பு அதிகரித்து வருவதும்தான் இந்த விலை வீழ்ச்சிக்கு காரணம்" எனக் கூறுகின்றனர். அதாவது, தேயிலையின் மிதமிஞ்சிய உற்பத்தி, ஏற்று மதி வர்த்தக வீழ்ச்சி - இவைதான் விலை வீழ்ச்சிக்கு அரசு சொல்லும் காரணங்கள்.

உண்மையில் இந்தியத் தேயிலை உற்பத் தியும், வர்த்தகமும் பிரதானமாக உள்நாட்டுச் சந்தையைச் சார்ந்துதான் நடை பெறுகிறது. இந்தியத் தேநீர் வாரிய அதிகா ரிகள், "நமது நாட்டின் தேயிலை உற்பத்தி உள்நாட்டுத் தேவையைத்தான் ஈடு செய்வ தாக இருப்பதால், தேயிலை ஏற்றுமதி வர்த்த கத்தில் அதிகக் கவனம் செலுத்த முடிய வில்லை" என்று சமீபத்தில் கூறியுள்ளனர். இதை வைத்துப் பார்க்கும் பொழுது, அரசு, ரசியாவுக்கு ஏற்றுமதியாகாமல் தேங்கிக் கிடக்கும் தேயிலையை உள்நாட்டு சந்தையி லேயே விற்க நடவடிக்கை எடுத்து, இந்த விலை வீழ்ச்சியைத் தடுத்திருக்க முடியும். எனவே, நிலகிரி தேயிலையின் விலை வீழ்ச்சிக்கு மிதமிஞ்சிய உற்பத்தியோ, ஏற்று மதி வர்த்தக வீழ்ச்சியோ காரணமாக இருக்க முடியாது. தேவையற்ற இறக்குமதியும், உள்நாட்டுத் தேயிலைச் சந்தையைக் கையில் வைத்திருக்கும் தரகு முதலாளித்துவ நிறுவ னங்கள், இடைத் தரகர்களின் இலாபவெறி யும்தான் விலை வீழ்ச்சிக்குக் காரணம்.

தேயிலை விலை வீழ்ச்சிப் பிரச்சி னையில் கவனிக்க வேண்டிய அம்சம் என்ன வென்றால், தேயிலை விலை வீழ்ச்சியால் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த சிறு விவசா யிகள்தான் போண்டியாகிப் போனார்களே தவிர, தமிழகத்திலும், கேரளாவிலும், அஸ்ஸாமிலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் தேயிலை எஸ்டேட்டுகளை நடத்தி வரும் டாடா, லிப்டன், இந்துஸ்தான் லீவர் போன்ற பெரும் முதலாளிகள் யாரும் சிறிதளவு கூடப் பாதிப்படைந்ததாகத் தெரி யவில்லை. இந்தியத் தேயிலைத் தூளின் சந்தை இவர்களின் கையில் தான் உள்ளது. மலிவான விலையில் இந்தியாவுக்கு இறக்கு மதியாகும் தேயிலைத் தூளை இவர்களைத் தவிர வேறு யாரும் வாங்கப் போவதும் கிடையாது. பச்சைத் தேயிலையின் விலை வீழ்ந்துவிட்டது; தேயிலை மலிவான விலையில் இறக்குமதியும் செய்யப்படுகி றது. ஆனாலும், டாடாவும், லிப்டனும் தயா ரித்து விற்கும், இந்தியக் குடிமகன்கள் வாங்கிக் குடிக்கும் "கண்ணன் தேவன் டீ", "டாப் ஸ்டார்" "சக்ரா கோல்டு" தேயிலைத் தூளின் விலை குறையவில்லை.

"டாடா" நிறுவனத்திற்கு இலங்கை யிலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்ப ளவில் தேயிலை எஸ்டேட்டுகள் உள்ளன. "டாடா" போன்ற முதலாளிகள்தான் இலங் கையில் இருந்து இந்தியாவிற்கு தேயி லையை ஏற்றுமதி செய்து இலாபமடைகின் றனர். இந்தியாவிலும், "டாடா" போன்ற முத லாளிகள்தான், மலிவு விலையில் இறக்கும தியான தேயிலையை அதிக விலைக்கு விற்றுக் கொழுத்த இலாபமடைகின்றனர்.

டாடா, அசோக் லேலண்ட், மாருதி போன்ற நிறுவனங்கள்தான் இலங்கைக்கு வாகனங்களை ஏற்றுமதி செய்கின்றன. இந்தியா, இலங்கையில் இருந்து தேயிலை இறக்குமதி செய்வதை நிறுத்தி விட்டால், இலங்கை, இந்தியாவில் இருந்து வாகனங் களை இறக்குமதி செய்வதை நிறுத்தி விடும் என்பதால் பா.ஜ.க. அரசு தேயிலை இறக்கு மதிக்குத் தடை போட மறுத்துவிட்டதாம்.

25,000-க்கும் அதிகமான தேயிலை விவசாயிகள், தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் கூலித் தொழிலாளர்கள் இவர்களின் வாழ்க்கைப் பாழாவதைத் தடுப் பதைவிட, நான்கைந்து முதலாளிகளின் இலாபம் சரிந்துவிடக் கூடாது என்பதில் இவர்கள் காட்டும் அக்கறையை என்ன வென்பது? இந்த உண்மையை, தேயிலை விவசாயிகளுக்கு ஆதரவாக இருப்பதாகக் காட்டிக் கொள்ளும் த.மா.கா., அ.தி.மு.க., காங்கிரசு போன்ற எதிர்க்கட்சிகள் கூட உடைத்துச் சொல்லப் போவது கிடையாது.

உலக வர்த்தகக் கழக ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டதே காங்கிரசு கட்சிதான். அதற்கு ஆதரவு கொடுத்தது அ.தி.மு.க. மன்மோகன் சிங்கின் வாரிசான சிதம்பரத்தைத் தலைவனாகக் கொண்டிருப் பது, த.மா.கா. எனவே, தேயிலை விலை வீழ்ச்சியை இந்தக் கட்சிகள் கண்டிப்பதே மோசடித்தனமானது. தேயிலை விவசாயிக ளிடம் இவர்கள் காட்டும் அனுதாபமும், தி.மு.க., பா.ஜ.க. அரசுகளை எதிர்த்து இவர்கள் போடும் ஆவேசக் கூச்சலும், அற்பச் சலுகைகளை வாங்கிச் கொடுத்து ஓட்டுப் பொறுக்குவதற்குத் தானேயன்றி, அதற்கு மேல் வேறெதுவும் கிடையாது.

உலக வர்த்தகக் கழக ஒப்பந்தத்தால் நீல கிரி தேயிலை விவசாயிகள் மட்டுமா பாதிப் படைந்திருக்கின்றனர்? சில ஆண்டுகளுக்கு முன்பு இதை எதிர்த்து நீலகிரி காபி விவசா யிகள் போராடினார்கள்; இந்த ஒப்பந்தம் கேரள ரப்பர் விவசாயிகளைப் போண்டி யாக்கியது. அரிசி, கோதுமை, பாலைத் தாரா ளமாக இறக்குமதி செய்து கொள்ள அனும திக்கப்பட்டிருப்பதால், பாரம்பரியமிக்க நமது நாட்டு விவசாயமும், கிராமப்புற விவ சாயிகளும் பெரும் அபாயத்தை எதிர் நோக்கியுள்ளனர்.

உலக வர்த்தகக் கழக ஒப்பந்தம் நாட்டைக் கவ்வியுள்ள மிகப் பெரும் அபாயம். இந்நிலையில், தேயிலை விவசா யிகள் மட்டுமே தனித்துப் போராடி, தங்க ளது விவசாயத்தைப் பாதுகாத்துக் கொண்டு விட முடியாது. உலக வர்த்தகக் கழக ஒப்பந் தத்தால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்துப் பிரிவு மக்களுடன் இணைந்து, நாடு மறுகா லனியாக்கப்பட்டு வருவதை எதிர்த்துப் போராட முன் வரவேண்டும். அது ஒன்றுதான், தேயிலை விவசாயிகள் போண்டியாக்கப்படுவதை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்தும்.

● முத்து


**படியுங்கள்!**

★ **தொழிலாளி வர்க்கம் - கட்சி - இயல்பு பற்றி**

- தோழர்கள் ஸ்டாலின், சென்யுன் ஆகியோரது கட்டுரைகள் அடங்கிய நூல்.

விலை: ரூ. 15

★ **அதிகாரத்துவத்துக்கு எதிராகப் போராடுவோம்!**

- தோழர் சௌ என்-லாய் விலை: ரூ.3

நூலின் விலையுடன் ரூ.3-ஐச் சேர்த்து எமது முகவரிக்கு பணவிடை (M.O.) செய்து அஞ்சல் மூலம் நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை,
சென்னை - 600 002.
✆ 8412367.



படிப்பகம்

www.padippakam.com

# போராட்டங்களின் நோக்கம் என்ன?

## —'மார்க்சிஸ்ட்' கட்சியின் ஒப்புதல் வாக்குமூலம்

கடந்த ஏப்ரல் 3-ந் தேதியன்று 'மார்க்சிஸ்ட்' கட்சியின் தலைமையின் கீழுள்ள தொழிற்சங்கமான சி.ஐ.டி.யு, சென்னையில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற ஒரு பேரணியை நடத்தியது. மத்திய - மாநில அரசுகளின் மக்கள் விரோத - தொழிலாளர் விரோத கொள்கைகளை எதிர்த்தும், அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கண்டித்தும் இப்பேரணி நடைபெற்றது. இப்பேரணியால் போக்குவரத்து பாதிப்பும் பொது மக்களுக்கு இடையூறும் ஏற்பட்டதாக சாலையில் ஊர்ந்து செல்லும் வாகனங்களின் படத்துடன் மறுநாள் 'இந்து' நாளேடு செய்தி வெளியிட்டு வெறுப்பை உமிழ்ந்தது.

'இந்து' நாளேடு - ஆளும் வர்க்கங்களுக்கு நூறாண்டுகளுக்கும் மேலாக விசுவாசமாகச் சேவை செய்து வரும் ஆங்கிலச் செய்திப் பத்திரிகை. பார்ப்பனபெருமுதலாளித்துவ குடும்பத்தால் நடத்தப்படும் பத்திரிகை. தொழிலாளர்களின், உழைக்கும் மக்களின் போராட்டங்களை மட்டுமல்ல; மொழியுரிமை, இன உரிமை, ஜனநாயக உரிமைக்கான போராட்டங்களைக் கூட இருட்டடிப்பு செய்வதும், கொச்சைப்படுத்தி அவதூறு செய்வதும் அதன் பாரம்பரியக் கொள்கை. 'இந்து' பத்திரிகை சொன்னால் அது ஆளும் வர்க்கங்களின் - ஆட்சியாளர்களின் வேதவாக்கு என்பதாலேயே அந்த நாளேட்டை "மவுண்ட்ரோடு மகாவிஷ்ணு" என்று காங்கிரசு, பா.ஜ.க. அல்லாத பிற அரசியல் இயக்கத்தினர் கேலியாகக் குறிப்பிடுவதுண்டு.

இத்தகைய ஆளும் வர்க்க சார்பான 'இந்து' நாளேடு, சி.ஐ.டி.யு. நடத்திய தொழிலாளர்களின் பேரணியை இழிவுபடுத்துகிறது என்றால், அதன் மக்கள் விரோத - ஜனநாயக விரோதப் போக்கை அம்பலப்படுத்திச்சாடலாம்; அல்லது அதன் செய்தியை ஒரு பொருட்டாக மதிக்காமல், தொழிலாளர்கள் தமது அடுத்த கட்ட போராட்டத்தின் மூலம் அதன் முகத்தில் கரியைப் பூசலாம். ஆனால், சி.ஐ.டி.யு. சங்கத்திற்கு தலைமை தாங்கும் 'மார்க்சிஸ்டு' கட்சியோ, 'இந்து' பத்திரிகையிடம் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்ற பதைபதைப்புடன் இச்செய்திக்கு தனது "தீக்கதிர்" நாளேட்டில் விளக்கம் அளிக்கக் கிளம்பியது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது - 1940-களில் கம்யூனிஸ்டுகளுக்கு ரசியாவிலிருந்து இரகசியமாகப் பணம் வருகிறது. அவர்கள் தேசத்துரோகிகள், சீர்குலைவுவாதிகள் என்று காந்தியும் காங்கிரசும் அவதூறு பிரச்சாரம் செய்து வந்தனர். அன்று கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த பி.சி. ஜோஷி இத்துரோகக் கும்பலின் சதிச் செயல்களை அம்பலப்படுத்துவதற்குப் பதிலாக, காந்திக்கு தமது கட்சியின் வரவு - செலவு கணக்குகளை விவரித்து, அவரிடம் நல்ல பெயர் வாங்க தொடர்ந்து பல கடிதங்களை எழுதினார். பின்னர் அதுவே "காந்தி - ஜோஷி கடிதப் போக்குவரத்து" என்ற நூலாக வெளிவந்தது. ஜோஷியின் புரட்டல்வாத வழியில் வந்த 'மார்க்சிஸ்டு'களும் இப்போது 'இந்து' பத்திரிகையிடம் நல்ல பெயர் வாங்க முயற்சிக்கின்றனர்.

"மத்திய - மாநில அரசுகளின் மக்கள் விரோதக் கொள்கைகளைக் கண்டிக்க முன்வராததும், ஜனநாயக இயக்கங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் செய்திகள் வெளியிடாமல் இருட்டடிப்பு செய்வதும், இந்து நாளேடு தனது பாரம்பரியத்திலிருந்து தடம் புரளுவதாக அமைகிறது" என்று தமது "தீக்கதிர்" நாளேட்டில் (5.4.2000) 'மார்க்சிஸ்டு'கள் அங்கலாய்க்கிறார்கள்.

'இந்து' நாளேடு ஆட்சியாளர்களின் மக்கள் விரோதக் கொள்கைகளை என்றைக்காவது கண்டித்ததுண்டா? ஜனநாயக இயக்கங்களுக்கு எப்போதாவது ஆதரவு தெரிவித்ததுண்டா? ஒருபோதும் கிடையாது. அப்படியிருக்க, 'இந்து' நாளேடு ஏதோ முற்போக்கான பாரம்பரியத்துடன் இருந்தது போலவும், இப்போது அந்தப் பாரம்பரியத்

## தோழரா? துரோகியா?

"தொழிற்சங்க நடவடிக்கை என்ற பெயரில், தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்களிலோ, முரட்டுத்தனமான போராட்டங்களிலோ ஈடுபடுவதை அரசு ஒருபோதும் சகித்துக் கொண்டு இருக்க முடியாது" - இப்படி தொழிற்சங்கங்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இறுதி எச்சரிக்கை விடுத்திருப்பவர் அத்வானியோ, கருணாநிதியோ அல்ல. மே.வங்க போலி கம்யூனிஸ்டு முதல்வர் ஜோதிபாசு தான் இப்படி கண்டிப்பான எச்சரிக்கையை விடுத்துள்ளார்!



ஆலை மூடல், ஆட்குறைப்பு, வேலைநீக்கம், ஊதிய வெட்டு முதலான வற்றால் பாதிக்கப்பட்டுள்ள மே.வங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் உள்ளிட்டு பல்வேறு போராட்டங்களைத் தீவிரமாக்கத் தொடங்கியதும், முதல்வர் ஜோதிபாசு பீதியடைந்து போயுள்ளார். தொழிற்சங்கத் தலைவர்களையும் முன்னணியாளர்களையும் கைது செய்து, உற்பத்தியை முடக்கும் நாசவேலைகளில் ஈடுபட்டதாகப் பொய்க் குற்றம் சாட்டி, கிரிமினல் வழக்கு போட்டு சிறையிலடைத்து தனது ஆளும் வர்க்க விசுவாசத்தை நிரூபித்துக் காட்டி, இப்படி எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

"பொருளாதார சீர்திருத்தக் கொள்கையை கணக்கில் கொண்டு, தொழிற்சங்கங்கள் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். போட்டிகள் நிறைந்த உலகச் சந்தைக்கு ஈடு கொடுக்கும் வகையில், தரமான பொருளுக்கும் உற்பத்திப் பெருக்கத்துக்கும் முன்னுரிமை கொடுத்து தொழிலாளர்கள் கடுமையாக உழைக்க வேண்டும்" என்று பெருமுதலாளிகளின் குரலை அப்படியே எதிரொலிக்கிறார் பாசு.

தொழிலாளர் போராட்டங்களை ஒடுக்கி வரும் பா.ஜ.க. கூட்டணி அரசு தொழிலாளர்களுக்கு விடுக்கும் எச்சரிக்கைக்கும், போலி கம்யூனிஸ்டு முதல்வர் ஜோதிபாசு தொழிலாளர்களுக்கு விடுத்துள்ள எச்சரிக்கைக்கும் வித்தியாசம் ஏதாவது இருக்கிறதா? அதனால்தான் தரகுப் பெருமுதலாளிகள், "மே.வங்க மாநிலத்தின் தொழில் அமைதியைக் கட்டிக் காக்கும் முதல்வர்" என்று பாசுவைப் பாராட்டுகிறார்கள்.

'மார்க்சிஸ்டு' கட்சியினரும் சி.ஐ.டி.யு. தொழிற்சங்கத்தினரும் ஜோதிபாசுவை "தோழர்" என்கிறார்கள். வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்களோ அவரை "கம்யூனிசத் துரோகி" என்று சாடி வருகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

திலிருந்து தடம் புரளுவதாகவும் 'மார்க்சிஸ்டுகள்' தோழமையோடு வேதனைப்படுகிறார்கள்.

இது ஒருபுறமிருக்கட்டும். எதற்காக இத்தகைய பேரணிகள் நடத்துகிறார்கள் என்பதற்கு 'மார்க்சிஸ்டுகள்' ஒரு கொள்கை விளக்கத்தையும் அளித்துள்ளார்கள்.

''இத்தகைய பேரணிகள் போன்ற ஜனநாயக இயக்கங்கள் அடித்தள மக்களின் கொதிப்பிற்கு வடிகாலாக'' அமைகிறதாம்! ''இவை தடுக்கப்படுமானால், மக்களின் கோபம் விசுவரூபம் எடுத்து எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி'' விடுமாம்! அதற்காகத்தான் இத்தகைய பேரணிகளை நடத்தினார்களாம்!

மக்களின் கோபம் விசுவரூபம் எடுக்கட்டுமே! அது ஆட்சியாளர்களை வீழ்த்தட்டுமே, எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தட்டுமே! அதுதானே ஐயா புரட்சி! புரட்சியை தலைமை தாங்கி வழி நடத்துவதுதானே கம்யூனிஸ்டுகளின் கடமை! புரட்சியைக் கண்டு ஏன் அஞ்ச வேண்டும்? எதற்காக புரட்சியைத் தடுத்து நிறுத்தி, திசைதிருப்பி, வடிகால் வெட்ட வேண்டும்? இது துரோகத்தனம் இல்லையா?

இல்லை! அதுதான் எங்கள் கொள்கை என்கிறார்கள் இப்போலி கம்யூனிஸ்டுகள். ''கொதிப்படையும் மக்களுக்கு இத்தகைய பேரணிகளும் போராட்டங்களும் வடிகாலாக அமைகிறது; அதைத் தடுத்துவிட்டால் கொதிநிலை அதிகரித்து புரட்சி வெடித்து விடும்'' என்று 'இந்து' நாளேட்டுக்கும் ஆளும் வர்க்கங்களுக்கும் தோழமையோடும் விசுவாசத்தோடும் உபதேசிக்கிறார்கள்.

ஆளும் வர்க்கங்களுக்கும் பரட்சிகரமான மக்கள் பிரிவினருக்குமிடையே முடிந்தவரை அமைதியான பேரம் நடத்துவது, கொதிநிலை அதிகரித்து விடாமல் வடிகால் வெட்டுவது, போராட்டங்களை திசை திருப்பி விடுவது, எதிரிகளுடன் சமரசம் செய்து கொண்டு புரட்சியை சீர்குலைப்பது முதலானவை திருத்தல்வாத, சமரச - சந்தர்ப்பவாத இயக்கங்களின் பண்புகளாக ஏற்கனவே மார்க்சிய ஆசான்கள் வரையறுத்துள்ளனர். அதற்கு இலக்கணப் பொருத்தமாகத் திகழ்பவர்கள் நாங்கள்தான் என்று போலி கம்யூனிஸ்டுகள் மார்தட்டிக் கொண்டு நிற்கிறார்கள்.

'மார்க்சிஸ்டு' கட்சி தலைமை தாங்கும் சங்கங்களில் திரண்டுள்ள புரட்சிகரமான உழைக்கும் மக்களே,

நீங்கள் பேரணிகள் - போராட்டங்களில் கலந்து கொண்டு ''புரட்சி ஓங்குக!'' என்று முழக்கமிடுகிறீர்கள். ஆனால் உங்கள் கட்சித்தலைமையோ புரட்சியே வேண்டாம் என்கிறது. ''கொதிப்படைந்தவர்கள் 'புரட்சி ஓங்குக!' என்று முழக்கமிடுவது அவர்களது வர்க்க கோபத்தைத் தணிப்பதற்கான வடிகால்தான்; அதையும் தடுத்து விட்டால் இந்தக் கொதிப்பு விசுவரூபமாகி விடும்'' என்று ஆட்சியாளர்களை எச்சரித்து, அவர்களுக்கு மறைமுகமாகச் சேவை செய்து வரும் உங்களது கட்சித் தலைமை புரட்சியை வழிநடத்தும் என்று இன்னமும் நம்புகிறீர்களா?

ஆட்சியாளர்களின் மக்கள் விரோதக் கொள்கைகளை முறியடிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நீங்கள் இத்தகைய பேரணிகளை நடத்துவதாக நம்பிக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் கட்சித் தலைமையோ, உங்களது வர்க்கக் கோபம் விசுவரூபம் எடுக்காமல் தடுப்பதற்குத் தான் இத்தகைய பேரணிகள் - போராட்டங்களை நடத்துவதாக வெளிப்படையாக அறிவிக்கிறது.

''வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' என்று கடவுள் இயேசு அழைப்பதாக கிறித்தவ மத நிறுவனங்கள் பிரச்சாரம் செய்வதைப் போல,

''வர்க்கக் கோபம் கொண்ட உழைக்கும் மக்களே, எங்களிடம் வாருங்கள்; நாங்கள் உங்கள் கொதிப்பைச் சாந்தப்படுத்தி வடிகால் அமைத்துத் தருகிறோம்'' என்று அழைக்கிறார்கள், 'மார்க்சிஸ்டுகள்'.

அரசியல் - சமூக - பொருளாதார நிலைமைகளால் வெறுப்புற்று கொதிப்படைந்துள்ள மக்களுக்கு வடிகாலாக ஆபாச சினிமா, டி.வி., சாராய போதை, சூதாட்டம், பக்தி முதலானவற்றை ஆளும் வர்க்கங்கள் பயன்படுத்தித் திசை திருப்புவதைப் போலவே, நாங்களும் கொதிப்படைந்த மக்களின் கோபத்திற்கு வடிகாலாக பேரணி, போராட்டங்களை நடத்துகிறோம் என்கிறார்கள் 'மார்க்சிஸ்டுகள்'.

'மார்க்சிஸ்டு' கட்சியிலுள்ள புரட்சியை நேசிக்கும் அணிகளே, உழைக்கும் மக்களே,

இதுநாள் வரை உங்கள் கட்சி நடத்திய பேரணிகளும் போராட்டங்களும் புரட்சியை நோக்கி முன்னேறுவதாகக் கருதி நீங்கள் ஏமாந்தது போதும். உங்களது வர்க்கக் கோபத்தைத் தடுத்துச் சாந்தப்படுத்தி, திசை திருப்பி வடிகால் அமைக்கவும், கொதிநிலையைத் தணிக்கும் பொழுது போக்கு போலவும் பேரணி - போராட்டங்களை நடத்தும் உங்கள் கட்சித் தலைமை புரட்சியை வழிநடத்தும் என்று இன்னமும் நீங்கள் நம்புகிறீர்களா? அல்லது நீங்கள் விசுவரூபம் எடுத்து இத்துரோகத் தலைமையைத் தூக்கியெறிந்து விட்டு நக்சல்பாரி புரட்சியாளர்களின் தலைமையில் அணி திரளப் போகிறீர்களா?

● குமார்

**CITU rally disrupts traffic on arterial roads**

By Our Staff Reporter

CHENNAI, APRIL 3. Chennai's culture of paralysing a working day with a surprise procession struck again on Monday, and dealt another blow to the vaunted traffic policing schemes for arterial roads.

On the opening day of the work week, traffic piled up on arterial Anna Salai and on Kamarajar Salai at office-time, crippling the city traffic for about two hours.

The police handling of the procession came in for sharp criticism, as they did not have any diversions in place. No effort was made to inform motorists in advance. Even callers to the traffic control room were not given correct advice on alternative routes to be taken.

Ironically, a much smaller group of workers from the literacy mission who wanted to stage a dharna near the State Guest House around the same time were refused permission, and they had to shift to Valluvar Kottam for a token protest. "The question therefore is not one of democracy and freedom of expression, but of shows of strength by organised groups", an office-goer said.



Vehicles idle on Anna Salai bumper to bumper on Monday, during the CITU procession. This stretch is part of the "green corridor" announced by Traffic police, to enable smooth vehicular flow.

**போக்குவரத்து பாதிப்பும் பொதுமக்களுக்குத் தொல்லையும் ஏற்படுவதாகப் புலம்பும் இந்து நாளேட்டின் செய்தி.**

**இந்து நாளேட்டிடம் நல்ல பெயர் வாங்க, ''தீக்கதிர்'' நாளேடு வெளியிட்டிருந்த விளக்கம்.**

**உழைப்பாளர் பேரணியும் ''இந்து'' நாளேட்டின் புலம்பலும்**

மத்திய—மாநில அரசுகள் ஜனநாயக வழிகளில் செயல்பட்டு, பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டால் மட்டுமே இவ்வாறான இயக்கங்களைத் தவிர்க்கலாம். மக்கள் பிரச்சனைகளுக்காக நடத்தப்படும் இப்படிப்பட்ட பேரணிகளால் ஏற்படும் சிறு பாதிப்புகளை பெரிதுபடுத்தும் இந்த நாளேடு, மத்திய—மாநில அரசுகளின் மக்கள் விரோத, ஜனநாயக விரோத போக்குகளால் மக்களுக்கு ஏற்படும் பெரும் பாதிப்புகள் பற்றி கண்டு கொள்ளாதது ஏன்? அக்கொள்கைகளை கண்டிக்க முன்வராததும், ஜனநாயக இயக்கங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் செய்திகளை வெளி யிடாமல் இருட்டடிப்பு செய்வதும், இந்து நாளேடு தனது பாரம்பரியத்திலிருந்து தடம் புரளுவதாக அமைகிறது.

தற்போது பெரும் தாக்குதலுக்குள்ளாகும் மத்திய தர, அடித்தள மக்களின் கொதிப்பிற்கு பேரணிகள் போன்ற ஜனநாயக இயக்கங்கள் வடிகாலாக அமைகிறது என்ப தையும், இவ்வாறான இயக்கங்கள் தடுக்கப்படுமானால் மக்களின் கோபம் விஸ்வரூபமெடுத்து எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதிலும் ஐயமில்லை. ❑

— பி.ஆர்.



படிப்பகம்

www.padippakam.com

## வறட்சியின் பிடியில் வடமாநிலங்கள்

# உலக வங்கித் திட்டங்களின் கோர விளைவு

குஜராத் மாநிலத்திலுள்ள பாவ்நகர் எனும் ஊரைச் சேர்ந்த பொது மக்களுக்கும் போலீசாருக்கும் இடையே சமீபத்தில் மோதல் நடந்தது. அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்திக் கொண்டிருந்த பாவ்நகர் கிராம மக்களின் மீது போலீசார் தடியடி நடத்தியதால், ஆத்திரமடைந்த அவ்வூர் மக்கள் போலீசாரைத் திருப்பித் தாக்கி விரட்டியடித்தனர்.

அம்மாநிலத்திலுள்ள ஃபல்லா என்ற கிராமத்தில் நடந்த சம்பவமோ இதைவிடக் கொடூரமானது; பரிதாபகரமானது. ஃபல்லா கிராம விவசாயிகளின் மீது குஜராத் மாநில போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில், இரண்டு விவசாயிகள் அதே இடத்திலேயே மாண்டு போயினர்.

பாவ்நகர் கிராம மக்களின் மீது தடியடி நடத்தி, அவர்களின் மண்டையைப் பிளக்கும் அளவிற்கும், ஃபல்லா கிராம விவசாயிகளின் மீது கொலை வெறியோடு துப்பாக்கிச் சூடு நடத்துமளவிற்கும், அவர்களுள் யாரும் 'தீவிரவாத' கோரிக்கைகளை வைத்துக் கொண்டு போராடவில்லை.

உலகத் தரம் வாய்ந்த பொருட்களை, உணவை, பானங்களை வாங்கி அனுபவிப்பதில் இந்தியர்கள் பின்தங்கிப் போய்விடக் கூடாது என்ற இலட்சியத்தோடு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் ஆட்சியாளர்களுக்கு, அக்கிராம மக்களின் கோரிக்கை சாதாரணமானதுதான்; இன்னும் சொல்லப் போனால், அற்பமானதும் கூட!

பாவ்நகர் கிராம மக்கள், குடிக்க தண்ணீர் கேட்டுப் போராடினார்கள்; ஃபல்லா கிராம விவசாயிகள், விவசாயத்திற்கும், வீட்டுத் தேவைகளுக்கும் பயன்படுத்தி வந்த கிராம அணைக்கட்டில் தேங்கி நின்ற நீரை, அரசாங்கம் அடாவடித்தனமாக பக்கத்து நகருக்கு எடுத்துச் செல்ல முயன்றதைத் தடுக்க முயன்றார்கள்.

"அவன், தவிச்ச வாய்க்குக் கூட தண்ணி கொடுக்க மாட்டான்" - நெஞ்சில் ஈவிரக்கம் இல்லாதவனை, அடுத்தவருக்கு உதவ மனமில்லாதவனை, இப்படி நாம் குறிப்பிடுவது வழக்கம். தவிச்ச வாய்க்குத் தண்ணி கொடுக்காதவனை நாம் மனிதப் பிறவியாக மதிக்காத பொழுது, தண்ணீர் கேட்ட அப்பாவி மக்களின் மண்டையைப் பிளந்த, துப்பாக்கிச் சூடு நடத்தி உயிரைப் பறித்த குஜராத் மாநில ஆட்சியாளர்களை என்னவென்பது?

பாவ்நகரும், ஃபல்லா கிராமமும் மட்டுமல்ல, இந்தக் கோடையில் இந்தியாவின் 12 மாநிலங்கள் வறட்சிக்கும், பஞ்சத்திற்கும் இலக்காகியுள்ளன. சென்ற ஆண்டு புயல் - வெள்ளத்தினால் தத்தளித்த ஒரிசாவில், இப்பொழுது, இந்தக் கோடையில் குடிக்க தண்ணீர் கிடையாது. இப்பன்னிரெண்டு மாநிலங்களுள், குஜராத்தும், இராசஸ்தானும், ஆந்திராவும்தான் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இராசஸ்தான் தொடர்ச்சியாக, இரண்டாவது ஆண்டாக வறட்சி - பஞ்சத்திற்குள் சிக்கிக் கொண்டுள்ளது.

குஜராத் மாநிலத்தின் 25 மாவட்டங்களில் 17-இலும், இராசஸ்தானில் 32 மாவட்டங்களில் 27-இலும், ஆந்திராவில் 18 மாவட்டங்களிலும் பஞ்சமும் வறட்சியும் தலைவிரித்தாடுகிறது. இம்மூன்று மாநிலங்களிலும் வாழும் மக்களில் சரிபாதி பேருக்கு, கிட்டதட்ட 9 கோடி மக்களுக்கு இன்று ஒரு குவளை தண்ணீர் கிடைப்பது குதிரைக் கொம்பாகி விட்டது.

குடிக்கவே தண்ணீர் கிடைக்காதபோது, விவசாயத்தின் நிலையைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. நிலக்கடலையும், பருத்தியும், கரும்பும் விளைந்த பூமி இன்று பாளம் பாளமாக வெடித்து, பாலைவனம் போல் வறண்டு கிடக்கிறது. விவசாயத்தை அடுத்து கிராம மக்கள் வருமானத்திற்கு ஆதாரமாக விளங்கிய மாடு, ஆடு, ஒட்டகம் உள்ளிட்ட 5 கோடிக்கும் அதிகமான கால்நடைகளுள், எத்துணை இந்தப் பஞ்சத்தையும் வறட்சியையும் தாக்குப் பிடித்து உயிரோடு இருக்கும் என்று இப்போது சொல்ல முடியாது. கால்நடைகளை மட்டுமா, எத்துணை மனித உயிர்களை இந்தப் பஞ்சம் அநியாயமாகப் பறித்துச் செல்லப் போகிறது என்பதையும் இப்போது சொல்ல முடியாது!

குஜராத்தும், இராசஸ்தானும் சமூக ரீதியாக மிகவும் பின்தங்கிய மாநிலமாக இருப்பதால், இந்தப் பஞ்ச காலத்திலும் வீட்டிற்குத் தேவையான தண்ணீரைத் தேடி எடுத்து வரும் பொறுப்பு பெண்கள் தலையில்தான் சுமத்தப்பட்டுள்ளது. அதலபாதாளமான கிணற்றின் அடியில் தேங்கிக் கிடக்கும் தண்ணீரை, வாளியை விட்டுச் சேந்தி எடுக்க முடியாது; அதனால், வாளிக்குப் பதிலாக, குழந்தைகளின், பெண்களின் இடுப்பில் கயிற்றைக் கட்டி, கிணற்றுக்குள் இறக்கி விடுகிறார்கள். இப்படி, தண்ணீர் எடுக்க கிணற்றுக்குள் இறங்கிய மனுபென் பர்வாட் என்ற பெண், கயிறு அறுந்து கிணற்றுக்குள் விழுந்து இறந்து போனாள்.

விடிவதற்கு முன்பே எழுந்து, சுற்று வட்டாரத்தில் எங்கே தண்ணீர் கிடைக்கும்

சொட்டுத் தண்ணீர் கூட இன்றி பாளம் பாளமாக வெடித்துக் கிடக்கும் இராசஸ்தான் மாநில கிராமத்துக் கண்மாய்.





படிப்பகம்



குடிக்கத் தண்ணீர் இல்லையென்றால் உயிர் வாழ முடியாது; குடி தண்ணீர் வேண்டுமென்றால், உயிரைப் பணயம் வைக்க வேண்டிய அவலத்தில் வாழுகிறார்கள் குஜராத் மாநில கிராமத்துப் பெண்கள்.

என்று தேடி அலைவது எரிச்சலையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தக் கூடிய வேலையாக மட்டும் இல்லை; அது, பெண்களின் ஜீவ மரணப் போராட்டமாகவும் மாறி நிற்கிறது.

குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த சாய்பாபாய், திதாபாய் என்ற இரு ஆதிவாசிப் பழங்குடியினர் இப்பஞ்சம் காரணமாக இறந்து போயினர். அவர்கள் இறந்த செய்தி கேட்ட பிறகு பழங்குடியினரின் கிராமத்திற்குப் படையெடுத்து வந்த அதிகார வர்க்கம், "அவர்கள் சாப்பிட்ட உணவு நஞ்சாகிப் போனதால் இறந்து விட்டதாக" செய்தி வெளியிட்டனர். ஆனால், சாய்பாபாயின் தந்தை அர்ச்சனாபாய், "அவர்கள் ஏதாவது சாப்பிட்டிருந்தால் தானே, நஞ்சாக மாற முடியும்" என்று உண்மையை போட்டு உடைத்தார்.

ஆந்திராவில் மஹபூப் நகர் மாவட்டத்தைச் சேர்ந்த கங்காபுரம் என்ற கிராமத்தைச் சேர்ந்த ஐந்து விவசாயிகள், கடந்த இரு மாதங்களுக்குள் அடுத்தடுத்து பூச்சி மருந்தைக் குடித்துத் தற்கொலை செய்து கொண்டனர். கடந்த ஆறேழு மாதங்களுக்குள் அம்மாவட்டத்தில் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை 16.

இருபத்தாறு வயதான மண்டல சாயுல்லு, வங்கியில் இருந்து 30,000 ரூபாய் கடன் வாங்கி, அப்பணம் முழுவதையும் இரண்டு "போர்" கிணறுகள் தோண்டுவதற்குச் செலவழித்தார். கிணற்றில் தண்ணீர் வரவில்லை; பயிரும் கருகிப் போனது. இனி, கடனை எப்படி அடைப்பது? வாழ்க்கையை எப்படி ஓட்டுவது எனத் தடுமாறிக் கொண்டிருந்த சாயுல்லுவுக்கு, வங்கி கடன் தவணையைக் கட்டச் சொல்லி நோட்டீஸ் அனுப்பியது; சாயுல்லு தற்கொலை செய்து கொண்டார்.

ஐந்து ஏக்கரிலும் போட்ட பருத்திப் பயிர் தண்ணீர் இல்லாமல் கருகிப் போனதால், 60,000 ரூபாய் கடனை அடைக்க வழி தெரியாமல், ரங்கையாவின் மூத்த மகன் சென்ற ஆண்டு தற்கொலை செய்து கொண்டார். இப்பொழுது ரங்கையா தனது உயிரை மாய்த்துக் கொண்டதற்கும் இந்தக் கடன்தான் காரணம்.

26 வயதான யாதம்மாவின் கதையோ இன்னும் பரிதாபகரமானது. அவள், ஏற்கனவே கணவனை இழந்தவள். இப்பொழுது அவளும் பூச்சி மருந்தைக் குடித்து தற்கொலை செய்து கொண்டு விட்டதால், அவளின் மூன்று குழந்தைகளும் (அதிலொன்று செவிட்டு ஊமை) அநாதைகளாகி நடுத்தெருவில் நிற்கின்றன.

இன்னும் இரண்டொரு மாதங்களில் இந்தச் சுட்டெரிக்கும் கோடை முடிந்து விடும். இந்த இயற்கையின் ஓட்டத்தைப் போல, இந்தப் பஞ்சமும், வறட்சியும் விவசாயிகளின் வாழ்க்கையில் ஏற்படுத்திய கோரமான பாதிப்புகள் உடனடியாக மாறி விடக் கூடியதா?

தற்கொலை செய்து கொண்ட யாதம்மா, அடுத்த வேளைக்குச் சோற்றுக்கு வழியின்றி அனாதைகளாகிப் போன குழந்தைகளை அள்ளி அணைத்துக் கொள்ளத் திரும்பி வரவா போகிறாள்? எஞ்சியிருக்கும் தனது மாடுகளைக் காப்பாற்றிக் கொள்ள இராசஸ்தானில் இருந்து பஞ்சாபுக்கு ஓடிக் கொண்டிருக்கும் சத்தாராமின் பஞ்சத்துக்குப் பலியான மாடுகள் எழுந்து அவனைக் கிராமத்தில் தேடவா போகின்றன? பஞ்சத்தைத் தாக்குப் பிடிக்க, கந்து வட்டிக்காரனிடம் அடகு வைத்த நிலங்களை, விவசாயிகள் அடுத்த போகத்திலேயே மீட்டு விடவா முடியும்? அநாதரவாக நிற்கும் விவசாயியை, இயற்கை மீண்டும் போட்டுப் பார்க்காமல் விட்டாலே, அவன் அதிர்ஷ்டசாலிதான்!

இந்தக் கோடையில் கொடிய வறட்சி இந்திய மாநிலங்களைத் தாக்கப் போவது கடந்த செப்டம்பர் மாதமே மைய அரசுக்கும் தெரியும்; சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுக்கும் தெரியும். மைய அரசில் மட்டும் இந்திய மக்களின் குடிதண்ணீர் தேவைகளையும், விவசாயத்திற்குத் தேவைப்படும் பாசன வசதிகளைக் கவனிக்கவும் ஆறு துறைகள் இருக்கின்றன. இதைப் போலவே, ஒவ்வொரு மாநில அரசிலும் தனித்தனி துறைகளும், அமைச்சர்களும், அதிகாரிகளும் இருக்கிறார்கள். ஆனாலும், வறட்சியால் பாதிக்கப்பட்ட ஆந்திராவிலும், குஜராத்திலும், இராசஸ்தானிலும், ஒரிசாவிலும், ம.பி.யிலும், உ.பி.யிலும் கிராமத்து மக்களும் நகர்ப்புறத்துத் தொழிலாளர்களும் ஒரு குடம் தண்ணீருக்காக நாயாய் அலைகின்றனர்; கூலி விவசாயி தொடங்கி நடுத்தர வர்க்க விவசாயி வரை, பஞ்சத்தைத் தாக்குப்

ஆடு மாடுகளோடு கலங்கிய குட்டை நீரைக் குடிக்கும் இராசஸ்தான் மாநில மக்கள்.



பிடிக்க ஏதாவது வேலை தேடி, நகர்புறத்துக்கோ, அக்கம் பக்கத்து மாநிலங்களுக்கோ கிராமங்களில் இருந்து வெளியேறிச் செல்கின்றனர்.

இதை, அரசின் கையாலாகாத்தனம் என்று கூற முடியாது. மக்களை மயிராக மதிக்கும் ஆட்சியாளர்களின், அதிகார வர்க்கத்தின் அலட்சியமும், திமிரும்தான் மக்களின் இந்த அவல நிலைக்குக் காரணம். இப்படி மக்களைப் பலியாக்குவதில், ஏறி மிதிப்பதில் ஆளுங் கட்சி - எதிர்க்கட்சி, மேலதிகாரி, கீழதிகாரி என்ற வேறுபாடே கிடையாது.

இந்த வறட்சி குறித்து நாடாளுமன்றத்தில் 'விவாதம்' நடந்த பொழுது, நாடாளுமன்றத்தில் இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை வெறும் ஐம்பதுதான். வறட்சி பாதித்த மாநிலங்களுக்கு ரூ. 3.50 விலையுள்ள ரேசன் அரிசி கூடுதலாக வழங்கப்படும் என அறிவித்த வாஜ்பாயி அரசு, மறுநாளே அதைத் திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டது.

நியாயமாகப் பார்த்தால், வறட்சி பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஏழை மக்களுக்கு அரிசி, கோதுமை போன்ற உணவுப் பொருட்களை இலவசமாக வழங்க வேண்டியது அரசின் கடமை. இப்படிப்பட்ட சமயங்களில் மக்களுக்கு உதவுவோம் என்று கூறித்தான், அரசு உணவு தானியங்களை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்கிறது. ஆனால், அரசின் கையிருப்பில் நிரம்பி வழியும் உணவு தானியத்தை எலி தின்ன விடுவோமே யன்றி, பஞ்சத்தில் அடிபட்டுக் கிடக்கும் விவசாயிக்கு இலவசமாகவும் கொடுக்க மாட்டோம்; குறைந்த் விலைக்கும் கொடுக்க மாட்டோம் என்றால், பா.ஜ.க. அரசின் இரக்கமற்ற தன்மையை, இலாப வெறியை என்னவென்பது?

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதால் அவர்கள் நிலத்தடி நீரை உறிஞ்சி எடுத்து விடுகிறார்கள்; அதனால்தான் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படுகிறது; விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதை நிறுத்திவிட்டால், வறட்சி ஏற்படுவதையும் தடுத்து விடலாம் எனச் சில கனவான்கள் அரசுக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள்.

''இலவச மின்சாரம் வழங்குவதால் தான், மின்துறை நட்டத்தில் நடக்கிறது. இலவச மின்சாரம் வழங்குவதால் தான் வறட்சி ஏற்படுகிறது'' என அவதூறு செய்யும் இந்தக் கனவான்கள், ''இந்தியா வறிய நாடாக இருப்பதற்கே, இங்கே வறியவர்கள் இருப்பதுதான் காரணம்; இந்த வறியவர்களை ஒழித்துக் கட்டிவிட்டால், இந்தியா செல்வந்தர்களின் நாடாகிவிடும்'' என்று கூறவும் தயங்க மாட்டார்கள். வறுமையை ஒழிப்பதைவிட, வறியவர்களை ஒழித்துக் கட்டுவது அரசாங்கத்திற்கு எளிதானது. அதனால்தான் பா.ஜ.க. அரசு, பஞ்சம் பாதித்த மக்களுக்குக் குறைந்த விலையில் கூட அரிசி தர மறுக்கிறது. தண்ணீர் இன்றி, அதனால் விவசாய வேலையின்றி, அதனால் அரைகுறைப் பட்டினியில் வாடும் மக்களை, நிரந்தரப் பட்டினிக்குள் தள்ளி விட்டால், காரியம் சுலபமாக முடிந்து விடும் அல்லவா?

விவசாயிகள் மட்டுமா நிலத்தடி நீரை 'உறிஞ்சி' எடுக்கிறார்கள்? ஆலை முதலாளிகள் கடல் நீரைக் கூட விட்டு வைப்பது கிடையாது. குஜராத்திலுள்ள ஜாம்நகர் பகுதி, தண்ணீர்த் தட்டுப்பாடு - வறட்சிக்குள் சிக்கிக் கொண்டு தவிப்பதற்கு, அங்கு அமைந்துள்ள அம்பானியின் பெட்ரோலியத் தொழிற்சாலை நிலத்தடி நீரை ஒட்ட உறிஞ்சி விட்டதுதான் காரணம். நிலத்தடி நீரை உறிஞ்சும் விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை ரத்து செய்யச் சொல்லும் கனவான்கள், அம்பானிக்கு அரசு காட்டி வரும் சலுகைகள் ரத்து செய்யச் சொல்வார்களா?

நிலத்தடி நீரை உறிஞ்சி எடுத்து விவசாயிகள் பயிர் செய்த நிலக்கடலையையும், கரும்பையும் வாங்கிக் கொண்ட எண்ணெய் ஆலை அதிபர்களின், கரும்பாலை முதலாளிகளின் வீட்டுப் பெண்கள் யாரும் இந்தப் பஞ்சத்தால் தண்ணீருக்காக குடத்துடன் அலையக் காணோம்! குஜராத்தின் பணக்காரர்கள் தண்ணீருக்காக மாதமொன்றுக்கு ஒன்றரை லட்ச ரூபாய் செலவழிக்கிறார்களாம். ஆனால், வறட்சி - பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளோ, நெடுஞ்சாலைகளில் செல்லும் பணக்காரர்களின் காரை வழி மறித்து, தண்ணீர்ப் பிச்சை கேட்கிறார்கள். இப்பொழுது சொல்லுங்கள். நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டதால் ஆதாயமடைந்திருப்பது விவசாயிகளா? இல்லை, பணக்கார கும்பலா?

ஒரு பன்னாட்டு நிறுவனமோ, இந்தியத் தரகு முதலாளியோ தொழில் தொடங்கினால், அவர்களுக்கு இடவசதி அளித்து, தண்ணீர் தந்து, குறைந்த விலையில் மின்சாரம் வழங்கி, வரிச் சலுகைகள் அளித்துத் தொழில் வளர்ச்சிக்கு உதவும் ஆட்சியாளர்கள் இந்தியாவின் முதுகெலும்பான விவசாயத்தின், கிராமத்தின் வளர்ச்சிக்குக் குறைந்த பட்சம் தண்ணீர் தர வேண்டும் என்பதில் அக்கறை காட்டுவதில்லை. உலக வங்கியின் கட்டளைப் படி, குடிநீர் வழங்குவதையும், பாசன வசதி செய்து கொடுப்பதையும் தனியாரிடம் ஒப்படைத்து விடுவதில்தான் மும்முரம் காட்டுகிறார்கள்.



கடன் தொல்லையால் தற்கொலை செய்து கொண்ட பேதவதி ரத்தனை நினைத்துக் கதறியழும் குடும்பத்தினர்: நிவாரண உதவியும், நஷ்ட ஈடும் போன உயிரை மீட்டுத் தருமா?

கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்துப்போனதுதான் வறட்சிக்குக் காரணம் என்பதை விட உலக வங்கியின் குடிநீர்த் திட்டங் களும், பாசனத் திட்டங்களும் நிலத்தடி நீரை ஒட்ட உறிஞ்சி விட்டதாலும்; மழைநீரைத் தேக்கும் கண்மாய்களைப் பராமரிப்பது போன்ற பொதுப் பணிகளை மைய / மாநில அரசுகள் கை கழுவி விட்டதாலும்தான், இந்தியாவை அடிக்கடி வறட்சி தாக்குகிறது. உண்மை இப்படியிருக்க, மைய / மாநில அரசுகள் வறட்சி நிவாரணப் பணிகளை 'முடுக்கி' விட்டு, தங்களை சேம நல அரசுகளாக, மக்களின்மீது அக்கறை கொண்டவர்களாகக் காட்டிக் கொள்கிறார்கள்.

வறட்சி நிவாரணப் பணித்திட்டத்தின் கீழ் கூலி வேலைக்கு நாளொன்றுக்கு அறுபது ரூபாய் கொடுக்கப்படுவதாகக் கூறுகிறது அரசு. ஆனால், குஜராத்திலும், இராசஸ்தானிலும் பஞ்சம் பொழைக்கக் கூலி வேலைக்குச் செல்லும் விவசாயிகள், தங்களுக்குத் தர வேண்டிய கூலியில் அதிகாரிகளும், காண்டிராக்டுகாரர்களும் 45 ரூபாய் மூட்டம் போட்டு விடுவதாகக் கூறுகிறார்கள்.

அரைகுறைப் பட்டினியோடு, சுட்டெ

www.padippakam.com

ரிக்கும் வெயிலில், நாக்கு வறண்டு போனாலும் குடிக்கத் தண்ணீர் கூட கிடைக் காத நிலையில் உழைக்கும் விவசாயிகளின் கூலியில், முக்கால்வாசியைக் கொள்ளைய டிக்கும் அதிகாரிகளை மனிதப் பிறவிக ளாகக் கருத முடியாத பொழுது, மனிதாபி மானியாக எப்படி கருத முடியும்?

அரசு அதிகாரியாவது பரவாயில்லை. ஏதோ பெரிய மனது வைத்து, பதினைந்து ரூபாயை பஞ்சம் பொழைக்க வந்த விவசா யிக்குக் கொடுத்து விடுகிறான். இதைக் கூட அவனுக்குக் கொடுக்க வேண்டுமா என்று கேட்பவனை எந்தப் பிறவியில் சேர்ப்பது?

அப்படிக் கேட்பவர்கள் வேறு யாரு மல்ல. காந்தி கேட்டுக் கொண்டபடி, தங்களை தர்மகர்த்தாக்களாக, காருண்யமிக் கவர்களாக, வள்ளல்களாக காட்டிக் கொள்ளும் இந்தியத் தரகு முதலாளி கள்தான் அவர்கள். பா.ஜ.க.வுக்கு நெருக்க மான இந்தியத் தரகு முதலாளிகளின் சங்க மான சி.ஐ.ஐ.-இன் தலைவர் பரத் ராம், "வறட்சி பாதித்த பகுதிகளுக்கு நிவாரண உதவி அளிப்பதால் எங்களுக்கு என்ன இலாபம்?" என வெளிப்படையாகவே கேட்கிறார். நாற்பத்தைந்து ரூபாயைக் கொள்ளையடிக்கும் அதிகார வர்க்கத்தின், அரசியல்வாதிகளின் மக்கள் விரோதத் தன்மை அம்பலப்பட்டுப் போன அள விற்கு, "நிவாரண உதவியே செய்யத் தேவையில்லை" எனக் கூறும் இந்தியத் தரகு முதலாளிகளின் மக்கள் விரோதத் தன்மை அம்பலமாகவில்லை.

இந்திய அரசின் வர்த்தகக் கொள்கையும், தொழிற் கொள்கையும் இன்னபிற கொள்கைகளும், இந்தத் தரகு முத லாளிகளின் நலனுக்காகத்தான் தீர்மானிக்கப் படுகின்றன. அதனால்தான், முதல் நாள் குறைந்த விலையில் கூடுதலாக ரேஷன் அரிசி வழங்குவோம் என அறிவித்த வாஜ்பாயி அரசு, மறுநாளே அதைத் திரும்பப் பெற்றுக் கொண்டது. குறைந்த விலையில் கூடுதலாக ரேஷன் அரிசி வழங்க மறுத்த வாஜ்பாயி அரசின் மக்கள் விரோதத் தன்மையை அம்பலப்படுத்திய எதிர்க் கட்சி களும் கூட, "விவசாயிகளுக்கு எதற்கு நிவா ரண உதவி அளிக்க வேண்டும்?" எனக் கேட்ட இந்தியத் தரகு முதலாளிகளின் மக்கள் விரோதத் தன்மையை அம்பலப்ப டுத்தவில்லை. ஏனென்றால், மக்களின் சேவ கர்கள் எனக் கூறிக் கொள்ளும் ஓட்டுக் கட்சி களும், அதிகார வர்க்கமும் உண்மையில் தரகு முதலாளிகளின் சேவகர்கள். இப்படி பட்ட அரசும், அதை நடத்தும் அதிகார வர்க்கமும், அரசியல் கட்சிகளும் ஒருக் காலும் மக்கள் நல அரசாக, மக்களின் மீது அக்கறை கொண்டவர்களாக இருக்க முடி யாது. இதைப் புரிந்து கொள்ள இன்னு மொரு பஞ்சத்திற்கோ, வெள்ளத்திற்கோ இந்திய மக்கள் பலியாகத்தான் வேண்டுமா?

● செல்வம்

# கல்விக் கட்டண உயர்வு:
# உலக வங்கி உத்தரவுப்படி இன்னுமொரு தாக்குதல்



உயர் கல்வி கற்க கல்லூரிக்குச் செல்லும் ஆசைக் கனவுக ளுடன் காத்தி ருக்கும் பள்ளி இறுதித் தேர்வு முடித்துள்ள ஏழை மாணவர்கள்; கல்லூரி சென்று படிக்கத் துடிக்கும் தமது குழந்தைகளின் ஆசையை நிறைவேற்ற விரும்பினாலும், படிப்புக்கு ஆகும் செலவுகளை எண்ணிக் கலங்கி நிற்கும் கிராமப்புற விவசாயிகள்; ஏற்க னவே கல்லூரியில் படித்துக் கொண்டி ருக்கும் தமது குழந்தைகளின் படிப்பு இந்த ஆண்டிலும் தொடர, யாரிடம் கடன் வாங்கு வது என்று புரியாமல் தடுமாறி நிற்கும் நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினர் - இப்படி நாட்டின் இலட்சக்கணக்கான மாணவர் களும் பெற்றோர்களும் தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலையில், புதிய தாக்குதல் ஒன்றை பா.ஜ.க. கூட்டணி அரசு ஏவுவ தற்குக் காத்திருக்கிறது.

உலக வங்கி உத்தரவு - அரிசி விலை உயர்வு! உலக வங்கி உத்தரவு - பேருந்துக் கட்டண உயர்வு என்று அனைத்துத் துறைக ளையும் ஆட்டிப் படைத்து வரும் 'சூப்பர்' அரசாங்கமான உலக வங்கி, இப்போது கல்விக் கட்டணங்களையும் உயர்த்துமாறு உத்தரவிட்டுள்ளது. உலக வங்கி உத்தர வுக்குக் கோலெடுத்தால் குரங்காக் ஆடும் பா.ஜ.க. கூட்டணி ஆட்சியாளர்கள், வரும் கல்வியாண்டில் பட்டப்படிப்பு முதல் பட்ட மேற்படிப்பு, மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட அனைத்து உயர்கல்விக் கட்டணங்களையும் பல மடங்கு உயர்த்தத் தீர்மானித்துள்ளனர்.

பல்கலைக்கழக மானியக்குழு நிறுவிய அனந்த கிருஷ்ணன் கமிட்டி மற்றும் ரஹ்மான் கமிட்டி ஆகிய இரண்டும் மானிய ஒதுக்கீடு, கட்டணங்கள் பற்றி பரிசீலனை நடத்தி கட்டணங்களை உயர்த்துமாறு பரிந் துரை செய்துள்ளன. "பெரும்பாலான பல்கலைக் கழகங்களில் கடந்த 40 ஆண்டுக ளாக கல்விக் கட்டணங்கள் உயர்த்தப்படா ததால், நிதிப் பற்றாக்குறை ஏற்படுகிறது. தகவல் தொடர்பு, அறிவுத்துறை சாதனங் களின் பெருக்கம் காரணமாக பல்கலைக் கழ கங்களுக்கு கல்விச் செலவு அதிகரித்துக் கொண்டே போகிறது. இலாப நோக்கம் இல்லையென்றாலும் தொடர்ந்து ஏற்படும் நட்டத்தை ஈடு செய்யாமல் பல்கலைக் கழ கங்கள் இனி இயங்கவே முடியாது என்ற நிலைமைதான் உள்ளது. எனவே உயர் கல்விச் செலவுகளை அரசாங்கம் மட்டுமே சுமக்க முடியாது; சமூகமும் பொறுப்பேற்க வேண்டும்" என்று வாதிடும் இக்கமிட்டி யினர் கல்விக் கட்டணத்தை 10 மடங்கும் இதர கட்டணங்களை 40 மடங்கும் உயர்த்து மாறு பரிந்துரை செய்துள்ளனர்.

இதன்படி, தற்போது கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக் கட்டணம் ரூ. 10 முதல் ரூ. 20 ஆக உள்ளதை, ரூ. 100 முதல் ரூ. 200 ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இளங்கலை பட்டப் படிப்புக்கு தற்போது பயிற்சிக் கட்டணம் மாதம் ரூ. 15 ஆகவும், முதுகலை பட்டப் படிப்புக்கு ரூ. 18 ஆகவும் உள்ளது. இனி இவை மாதம் ரூ. 100 ஆகவும் ரூ. 200 ஆகவும் உயர்த்தப் படும். "ஒரு கோப்பை "ஐஸ்கிரீம்" கூட ரூ. 15-க்கு இன்றைய விலைவாசியில் வாங்க முடியாது; ஆனால், இந்தியாவில் பட்டப்ப டிப்பு பயிற்சிக் கட்டணம் அதைவிட மலி வாக இருக்கிறது" என்று கட்டண உயர்வுக்கு நியாய வாதங்களை அடுக்குகிறார் அனந்த கிருஷ்ணன். இவர் அண்ணா பல்கலைக்கழ கத்தின் முன்னாள் துணை வேந்தர் ஆவார். "தமது குழந்தைகளை ஆங்கில நர்சரிப் பள்ளிகளில் சேர்க்க பல ஆயிரங்களைச் செலவிடும் பெற்றோர்கள். கல்லூரி படிப் புக்கு அதைவிடச் சற்று கூடுதலாகச் செல விட முடியாதா?" என்று இக்கட்டண உயர்வை அவர் நியாயப்படுத்துகிறார்.

தற்போது மாணவர் விடுதி மற்றும் உண வகச் செலவுகளுக்கு பல்கலைக் கழக மானியக் நிதியிலிருந்து கணிசமான தொகை ஒதுக்கப்படுகிறது. இது தவிர மாணவர்க ளிடம் விடுதி, உணவக நிர்வாகக் கட்டண மாக ஆண்டுக்கு ரூ. 500 முதல் ரூ. 1000 வரை வசூலிக்கப்பட்டு செலவுகள் ஈடு செய்யப்படுகின்றன. இனி பல்கலைக் கழ கங்கள் மானிய உதவியை நிறுத்திவிடும். இச்செலவுகளை மாணவர்களிடமிருந்தே கல்லூரி நிர்வாகங்கள் வசூலித்துக் கொள்ள வேண்டும் என்று கட்டண பரிசீலனைக் கமிட்டி பரிந்துரைத்துள்ளது.

தற்போது விடுதிகளில் ஒரு மாணவர் மட்டும் தங்கும் அறைக்கான கட்டணம்


படிப்பகம்

www.padippakam.com



ஆண்டுக்கு ரூ. 400 ஆக உள்ளது. இனி மாதம் ரூ. 1000 வீதம் கட்டணம் வசூலிக்கப்படும். உணவக சாப்பாட்டு மேசை - நாற்காலிகள், சமையல் பாத்திரங்கள், மின் விசிறி, குளிர்ந்த குடிநீர் சாதனம் போன்றவற்றுக்கும், விளையாட்டு, பொழுதுபோக்கு, வானொலி - தொலைக்காட்சி, செய்திப் பத்திரிகைகள் முதலானவற்றுக்கும் மானியம் நிறுத்தப்படுவதால் இவற்றுக்காக மாதம் ரூ. 500 முதல் ரூ. 1000 வரை மாணவர்களிடம் வசூலிக்கப்படும். இதுதவிர ஒவ்வொரு மாணவனிடமிருந்தும் அன்றைய விலைவாசிக்கேற்ப மாதந் தோறும் உணவுக் கட்டணம் வசூலிக்கப்படும்.

கல்லூரி மேம்பாட்டுக் கட்டணம், நூலகம், ஆய்வுக்கூடம், விளையாட்டு, பேருந்து முதலான இதர கட்டணங்களை கல்லூரிகள் தமது விருப்பம்போல் உயர்த்திக் கொள்ளலாம் என்று கட்டண பரிசீலனைக் கமிட்டி பரிந்துரைத்துள்ளது. கட்டண உயர்வின் மூலம் பல்கலைக் கழகங்கள் தமது செலவுகளில் 15% முதல் 25% வரை உடனடியாக ஈடு செய்து கொள்ள வேண்டும் என்று இக்கமிட்டி வலியுறுத்தியுள்ளது. தற்போது உயர்த்தப்படும் இக்கட்டண அளவுகளும் நிரந்தரமானதல்ல. ஒவ்வொரு ஐந்தாண்டு திட்ட முடிவிலும் இவை பரிசீலனை செய்யப்பட்டு, விலைவாசி நிலவரம் - கல்விச் செலவு முதலானவற்றை ஒட்டி குறைந்தபட்சம் 20% முதல் 40% வரை கட்டணங்கள் உயர்த்தப்படும்.

குறிப்பிட்ட சில பாடப் பிரிவுகளுக்கு வரம்பு ஏதுமின்றி விருப்பப்படி தனியார் கல்லூரிகள் கட்டணம் வசூலித்துக் கொள்ளலாம் என்று அரசு ஏற்கனவே சலுகைகளை வழங்கியுள்ளது. இந்நிலையில், புதிய கட்டண உயர்வைக் காரணம் காட்டி இனி தனியார் கல்லூரிகளில் கேள்வி முறையின்றிப் பகற்கொள்ளை தொடரும். அரசு கல்லூரிகளில் ஒப்பீட்டளவில் குறைந்த கல்விக் கட்டணம் உள்ளபோதே பல ஏழை மாணவர்கள் படிப்பைத் தொடர முடியாமல் பாதியிலேயே விலகி விடுகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் கல்விக் கட்டணம் மேலும் பல மடங்கு அதிகரித்தால் ஏழை மாணவர்களின் கதி என்னவாகும் என்று சொல்லத் தேவையில்லை.

கல்லூரி படிப்பு என்பது இனி இலட்சக்கணக்கான ஏழை மாணவர்களுக்கு எட்டாக் கனியாகி விடும். வசதி படைத்த பெரும் பணக்காரர்கள், அரசு உயர் அதிகாரிகள், ஓட்டுக் கட்சித் தலைவர்களின் வாரிசுகள் மட்டுமே இனி கல்லூரிகளில் கால்டி வைக்க முடியும்.

இந்தியாவிலுள்ள 243 பல்கலைக் கழகங்களில் 46.11 லட்சம் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இவர்களில் 70% பேர் நடுத்தர அல்லது ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். அநியாயமான புதிய கல்விக் கட்டண உயர்வால் இவர்கள் தமது படிப்பைத் தொடர முடியாமல் போகும் அபாயம் உள்ளது. குறிப்பாக, பெரும்பாலான கல்லூரி மாணவர்கள் கிராமப்புற நடுத்தர - சிறு விவசாயிக் குடும்பங்களிலிருந்து வந்தவர்கள். ஏற்கனவே விவசாயம் பொய்த்துப் போய், விவசாயிகள் கடனாளிகளாகத் தத்தளிக்கும் நிலையில், புதிய கல்விக் கட்டண உயர்வுச் சுமையை அவர்களால் தாங்க முடியாது. தமது மகனையோ, மகளையோ கல்லூரிக்கு அனுப்பி படிக்க வைக்கவும் முடியாது. நகர்ப்புற பெரும் பணக்காரர்கள், தொழிலதிபர்கள், ஓட்டுக் கட்சி தலைவர்கள், அரசு உயர் அதிகாரிகளின் வீட்டுக் குலக் கொழுந்துகள் மட்டுமே கல்லூரியில் சேர்ந்து படிக்க முடியும் என்பதாக உயர் கல்வி வாய்ப்பு குறுக்கிச் சுருக்கப்பட்டுள்ளது.

ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் மிக அடிப்படையாக அமைவது கல்வி. கல்விக் கூடங்களும் கல்லூரிகளும் இல்லையேல் நாட்டில் இவ்வளவு மருத்துவர்களும், விஞ்ஞானிகளும், தொழில்நுட்பவாதிகளும், ஆசிரியர்களும் பயிற்சி பெற்ற தொழிலாளிகளும் உருவாகியிருக்க முடியாது; முன்னேற்றிய உற்பத்தியைக் கண்டிருக்க முடியாது; இவ்வளவு செல்வ வளமும் தொழில்நுட்ப ஆற்றலும் பெருகியிருக்கவும் முடியாது. ஆனால் மிகச் சாதாரண இந்த உண்மைகளை மறைத்துவிட்டு, கல்விக்குச் செலவிடுவதால் நட்டம் ஏற்படுவதாக கூசாமல் புளுகுகிறது அனந்த கிருஷ்ணன் கமிட்டி.

"கல்விக் கட்டணம் குறைவாக இருப்பதால்தான் மாணவர்கள் படிப்பில் அக்கறை காட்டுவதில்லை; கல்விக் கட்டணம் உயர்ந்தால் மாண்வர்கள் விட்டேத்தியாக அலையாமல், படிப்பில் அக்கறையும் கவனமும் செலுத்துவார்கள். ஒழுங்கும் கட்டுப்பாடும் வந்து விடும்" என்று கீழ்த்தரமான முறையில் வெட்கமின்றி கட்டண உயர்வை நியாயப்படுத்துகிறது அனந்த கிருஷ்ணன் கமிட்டி.

கட்டண உயர்வின் மூலம் கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது, அவர்கள் அரசியல் - சமூகப் பிரச்சினைகளுக்காகப் போராடும் ஒரு சக்தியாக உள்ள அடித்தளத்தைச் சிதைப்பது. மாணவர்களை சமூக உணர்வற்ற, துடிப்பும் ஆற்றலுமில்லாத ஆட்டு மந்தைகளாக்குவது என்கிற பாசிச உள்நோக்கத்துடன்தான் ஆட்சியாளர்கள் இப்புதிய கட்டண உயர்வைத் திணிக்க எத்தனிக்கின்றனர்.

கல்விக் கட்டண உயர்வு என்பது மாணவர்களின் துறை சார்ந்த பிரச்சினை மட்டுமல்ல; அது ஒட்டு மொத்த சமூகத்தின் பிரச்சினை. எனவே அனைத்து தரப்பு உழைக்கும் மக்களுடன் ஐக்கியப்பட்டுப் போராடாமல், மாணவர்கள் தனித்து நின்று இந்த அக்கிரமத்தை முறியடிக்கவும் முடியாது. ஓராண்டுக்கு முன் உலக வங்கி உத்தரவுப்படி திணிக்கப்பட்ட கல்விக் கட்டண உயர்வை எதிர்த்து, உழைக்கும் மக்களுடன் இணைந்து மெக்சிகோ நாட்டு மாணவர்கள் நடத்திய போராட்டம்; ஏழை நாடுகளின் மாணவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது. பாதை விரிந்து கிடக்கிறது; மாணவர்கள் தமது போராட்டப் பயணத்தைத் தொடர வேண்டியதுதான் இனி பாக்கியிருக்கிறது.

● மனோகரன்

**பொறியியல் கல்லூரிகளில் சேர்வதற்கான விண்ணப்பங்களைப் பெற அண்ணா பல்கலைக்கழகத்தில் திரண்ட மாணவர்கள்: கல்விக் கட்டண உயர்வினால் இவர்களது ஆசைக் கனவுகள் கைகூடுமா? கருகிப் போகுமா?**




படிப்பகம்

www.padippakam.com

# விலைவாசி உயர்வு: ஆளுங்கட்சியானால் நியாயப்படுத்து! எதிர்க்கட்சியானால் போராடு!

இருபத்தோராம் நூற்றாண்டின் முதல் பெரிய இந்திய அரசியல் தமாஷ் - வேடிக்கைக் கூத்து, எதிர்க்கட்சிகள் எல்லாம் கூடி நடத்திய விலைவாசி எதிர்ப்புப் போராட்டம்; அதற்கு ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பெரும்பாலான உறுப்புக் கட்சிகள் ஆதரவு தெரிவித்த துதான் என்று கூறலாம்.

வெயிலும் அடித்து, மழையும் பெய்து வானவில் தோன்றினால் போதும். "நரிக்கும் நரிக்கும் கல்யாணம்'' என்று சொல்லி சிறுவர் சிறுமியர் குதூகலித்து, கைகொட்டிச் சிரிப்பார்கள். அதுபோல, இந்திய அரசியல் வானில் ஓர் அதிசயத் தோற்றமாகத் தெரிந்தது இந்த விலைவாசி எதிர்ப்புப் போராட்டம்.

மத்தியில் ஆட்சி செலுத்தும் கட்சிகள், கூட்டணி எதுவானாலும் ஆண்டுக்கு ஆண்டு டீசல், பெட்ரோல் விலையேற்றுவது வழக்கமாக உள்ளது. இப்போது மத்தியில் ஆட்சியைப் பிடித்துள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு அடித்தட்டு மற்றும் நடுத்தர மக்களை வெகுவாகப் பாதிக்குமாறு மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு விலையைக் கடுமையாக உயர்த்தியது. அடுத்து அரசின் ரேசன் கடைகளையே நம்பி வாழும் ஏழை - எளிய மக்களின் வயிற்றில் அடிக்கும் அளவுக்கு ரேசன் அரிசி விலையை ஏற்றியது. கிராமப்புற ஏழை, நடுத்தர விவசாயிகளின் பொருளாதாரத்தை நாசமாக்குமாறு உரவிலையேற்றத்துக்கும் வழி செய்தது.

இதுவரை, இவையெல்லாம் கட்டுப்படுத்தப்பட்ட குறைந்த விலையில் விற்க வேண்டும் என்பதற்காகப் பல ஆயிரம் கோடி ரூபாய் அரசு மானியங்களாக வழங்கி வந்தது. இப்போது உரம், உணவு தானியம், மற்றும் பெட்ரோலியப் பொருட்களுக்கு இதுவரை வழங்கி வந்த மானியங்களை அரசு பெருமளவு குறைத்து விட்டது. இதை எதிர்த்துத்தான் எதிர்க்கட்சிகள் போராட்டங்களைத் தொடுத்தன.

வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் ஏழை - எளிய மக்களின் வாழ்வைப் பாதிக்கும் அடிப்படைப் பிரச்சினைகளைக் கையிலெடுத்துக் கொண்டு இந்தக் கட்சிகள் எல்லாம் போராடுவது எவ்வளவு நல்ல விடயம்! அதைப் போய் வரவேற்று ஆதரிப்பதற்கு பதிலாக, "தமாஷா", - வேடிக்கைக் கூத்து என்றும் அதிசயத் தோற்றம் என்றும் கேலி கிண்டல் செய்யலாமா?

இந்தப் போராட்டத்தை யார், யார் - எப்படி நடத்துகிறார்கள் என்பதைச் சற்றுக் கூர்ந்து கவனியுங்கள்!

இந்த விலையேற்றத்தைக் குறைக்கச் சொல்வதற்கான அருகதை இவர்களுக்குக் கொஞ்சமாவது உண்டா என்பதைச் சற்று எண்ணிப் பாருங்கள்!

இந்த விலையேற்றத்துக்கான காரணம் அடிப்படை நோக்கம் என்னவென்று கண்டுபிடித்து, அவற்றைக் களைவதற்காகத்தான் போராடுகிறார்களாவென்று கொஞ்சம் அலசிப் பாருங்கள்!

இந்தப் போராட்ட அணியின் சேர்க்கையைச் சிறிது நிறம் பிரித்துப் பாருங்கள்.

கடந்த ஐம்பதாண்டுகளில் சுமார் நாற்பது ஆண்டுகள் மத்தியில் அரசாண்டு வந்தது காங்கிரசு. விலைவாசி ஏற்றம் போன்ற ஏராளமான மக்கள் விரோத நடவடிக்கைகளை மேற்கொண்டு பதவி சுகத்தில் ஊறித் திளைத்துக் கொண்டிருந்தது. போராடும் மக்களை இரும்புக் கரங் கொண்டு ஒடுக்குவதைத் தவிர வேறெதுவும் செய்ததில்லை. எந்தவொரு மக்கள் பிரச்சினையானாலும் மக்கள் போராடவே கூடாது என்பதுதான் அதன் கொள்கை. காங்கிரசு எதிர்க்கட்சியாக இருந்த காலங்களில் அக்கட்சி மிகத் தீவிரமாக நடத்திய போராட்டங்களின் பிரச்சினையெல்லாம் இந்திரா, ராஜீவ் இலஞ்ச ஊழலில் சிக்கிக் கொண்ட வழக்குகள் சம்பந்தமானவைதாம். மற்றபடி, கண்டன அறிக்கைக்கு மேல் அரசியல் நடவடிக்கை எதையுமே கண்டிராத - செய்திராதவர்கள்தான் காங்கிரசு பெருச்சாளிகள்.

அடுத்து, உல்லாச ஊதாரி வாழ்க்கையே அரசியலுக்கான தகுதியாகக் கொண்டிருக்கும் பகற்கொள்ளை கிரிமினல்களான ஜெயா - சசி கும்பல். மக்கள் பிரச்சினைக்கான போராட்டங்களில் இவர்கள் பங்கேற்பதே அதன் நோக்கத்தைச் சீரழித்துக் கொச்சைப்படுத்துவதாகிவிடும்.

சில பண்ணையார்களும் முதலாளிகளும் சேர்ந்து தமது சொத்துக்களை வளர்த்துக் கொள்வதற்காக அதிகாரத்துக்கு ஏங்கி நின்று, பொழுது போக்கிற்காக சில போராட்டங்களை நடத்தும் கருப்பையா மூப்பனார் கட்சி. இவர்களின் பின்னே எலும்புத் துண்டுகளுக்காகவே காத்திருக்கும் சில குழுக்கள்.

இவர்களுக்கெல்லாம் முற்போக்கு சாயம் பூசி அணிசேர்க்கும் அரசியல் தரகர்கள்; கன்துடைப்புப் போராட்டங்களையே எப்போதும் நடத்திக் கொண்டிருக்கும் போலி கம்யூனிஸ்டுகள்.

மக்களைக் கடுமையாகப் பாதிக்கும் மானியங்கள் வெட்டு, விலைவாசி ஏற்றம் ஆகிய பிரச்சினையில் எப்படியாவது அரசை நிர்பந்தித்து ஏதாவது நிவாரணம் காண வேண்டும் என்ற உண்மையான அக்கறையோடுதான் இவர்கள் போராடினார்களா?

அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ்.இல் உறுப்பினராகலாம் என்று குஜராத் அரசு முடிவு செய்தபோது, குஜராத் சட்டமன்றத்தை மட்டுமல்ல, மத்தியிலும் நாடாளுமன்றத்தையே செயல்படவிடாமல் முடக்கி வைத்து, அம்முடிவை விலக்கிக் கொள்ளும்படி செய்தது, காங்கிரசு. பீரங்கி பேர ஊழல் குற்றப் பத்திரிகையில் இருந்து ராஜீவ் காந்தி பெயரை நீக்கும்படி சில நாட்கள் நாடாளுமன்றத்தைக் கலக்கியது. அவைபோல அர

மானியங்களைத் திரும்பவும் தரக்கோரி தில்லியில் காங்கிரசு நடத்திய ஊர்வலம்: சோனியாவின் தலைமை ஆட்டங் காணுவதைத் தடுப்பதற்கான முயற்சி.





படிப்பகம்

சுக்கு நிர்பந்தம் கொடுக்கும் "போராட்டங்கள்" ஏதாவது காங்கிரசோ, வேறுபிற எதிர்க்கட்சிகளோ செய்தனவா?

அரசை நிர்பந்திக்கும் - முடக்கும் வகையிலான போராட்டங்கள் எதுவுமின்றிச் சில கண்டன அறிக்கைகள், சில பொதுக் கூட்டங்கள், சில ஊர்வலங்கள், அந்தந்த மாநில ஆளுநர்களைச் சந்தித்து மனுக்கொடுத்தார்கள். தில்லியில் சோனியா தலைமையில் ஓர் ஊர்வலம் நடத்தி பிரதமரைச் சந்தித்து அரட்டையடித்து விட்டுத் திரும்பினார்.



விலைவாசி உயர்வைக் கண்டிக்கும் அ.தி.மு.க.வின் ஆர்ப்பாட்டத்தைத் தொடங்கி வைக்கும் ஜெயா: முதலைக் கண்ணீர்.

இதுபற்றி "ஃபிரண்ட்லைன்" ஏடு பின்வருமாறு எழுதுகிறது: "நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடர் கண்கொள்ளாக் காட்சியாக விளங்கியது. அரசின் பொருளாதாரக் கொள்கைகளை எந்தவித சோதனைக்கும் விமர்சனத்துக்கும் உட்படுத்துவதில் தோல்வியுற்ற காங்கிரசு தலைவி சோனியா, தன் கட்சி விசுவாசிகளோடு ஓர் ஊர்வலமாகப் போய் பிரதமரைச் சந்தித்தார். அரசு வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள மானியங்களின் வெட்டைத் தடுத்து நிறுத்தும்படிக் கோரினார். இது செய்தி ஊடகங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நிகழ்ச்சிதான். அதன் இறுதி நோக்கம் சோனியா காந்தியின் தலைமை மீது கட்சிக்குள் அதிகரித்து வரும் அதிருப்தியைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்தோடு நடத்தப்பட்டதுதான்."

இந்த அணியின் ஊதுகுழலான "ஃபிரண்ட்லைன்" பத்திரிக்கையே இப்படித்தான் சித்தரிக்கிறது. காங்கிரசு தலைமைதான் இப்படிச் செய்தது என்றில்லை. இதே நாளன்று போலி மார்க்சிஸ்டு கட்சிக் குழு ஒன்று மேற்கு வங்க முதல்வர் ஜோதி பாசு தலைமையில் போய் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்து சோனியாவைப் போலவே மனுக் கொடுத்தது.

சோனியா, ஜோதிபாசு இருவருக்குமே, "மானியங்கள் குறைப்பு, விலைவாசியேற்றம் என்பது சாத்தியமே இல்லை" என்று கைவிரித்தார் பிரதமர். சில ஆண்டுகளுக்கு முந்தைய காங்கிரசின் தேர்தல் அறிக்கையில் இருந்தும், காங்கிரசின் நிதி அமைச்சராக இருந்த மன்மோகன் சிங்கின் பட்ஜெட் உரையில் இருந்தும் "சில கடுமையான முடிவுகள் எடுக்கவேண்டியது தவிர்க்க முடியாது" என்கிற வரிகளைப் படித்துக் காட்டி, "காங்கிரசு செய்ததைத்தான் இந்த அரசும் செய்கிறது" என்று வாஜ்பாய் கிண்டலடித்தார். அதை இரசித்துவிட்டுத் திரும்பினார்கள் எதிர்க்கட்சியினர். "ரேசன் விலையைக் கூட்டினாலும் மேற்கு வங்க அரசைப் பின்பற்றி ரேசன் அளவைக் கூட்டியிருக்கிறோம்" என்று ஜோதிபாசுவிடம் வாஜ்பாயி கூறியபோது முகம் வெளிறி வெளியேறினார் வங்கத்தின் சிங்கம்.

காங்கிரசு, போலி கம்யூனிஸ்டுகள், அதிமுக, தமாகா ஆகிய கட்சிகள் தனித்தனியே மனுப் போட்டு, ஊர்வலம் நடத்தி, ஆர்ப்பாட்டம் செய்து விட்டு, மே 11-ந் தேதி பொது வேலை நிறுத்தம் அறிவித்தனர். "மக்கள் திரள் அமைப்புகளின் தேசிய அரங்கம்" என்கிற பெயரில் ஆளும் கூட்டணிக் கட்சிகளின் தொழிற்சங்கங்கள் தவிர, மற்றவை ஒன்று சேர்ந்து இந்தப் பொது வேலைநிறுத்தத்துக்கு அறைகூவல் விட்டன. என்றாலும், போலி கம்யூனிஸ்டுகளின் தொழிற்சங்கங்கள் மட்டுமே வழக்கமான அடையாளப் போராட்டம் அளவுக்கு கண்டு கொண்டன. பிற கூட்டணி சங்கங்கள் ஆதரவு அறிவிப்போடு ஒதுங்கிக் கொண்டன. எனவே, மேற்கு வங்கம், திரிபுரா, கேரளாவில் மட்டுமே அரசு ஆதரவுடன் வேலை நிறுத்தங்கள் நடந்தன. இதோடு இணைந்து ஆந்திராவில் வறட்சி நிவாரணப் பணிகளின் போதாமையை எதிர்த்துப் பொதுக் கடையடைப்பும் நடந்தது. இவற்றோடு அசாம், பீகாரிலும் (பந்த்) பொதுக் கடையடைப்பு அளவுக்குப் போராட்டம் வெற்றி பெற்றதாக போலி கம்யூனிஸ்டுகள் அறிவித்தனர்.

வெளியே பொது வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருக்கையில், நாடாளுமன்றத்துக்குள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து, விலை உயர்வைக் கண்டித்துப் பேசி, ஆர்ப்பாட்டம் செய்து சபைகளை ஒத்தி வைக்கச் செய்தன எதிர்க் கட்சிகள். நாடாளுமன்றத்துக்கு வெளியே நூற்றுக்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் "தர்ணா" போராட்டம் நடத்தினார்கள்.

இதேபோலத்தான் தமிழ்நாடு வரவு - செலவுக் கூட்டத் தொடரின் போது, வெளியே விவசாயி சங்கங்களின் போராட்டம் நடந்து கொண்டிருக்கையில், சட்டமன்றத்துக்குள் பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சிகள் வெளியே கோட்டை முன்பு சாலை மறியல் நடத்தினர்.

இந்தப் போராட்டங்களின்போது நாடாளுமன்றத்தில் வாஜ்பாயும், சட்டமன்றத்தில் கருணாநிதியும் எழுப்பிய கேள்விகள், அளித்த விளக்கங்கள் எதற்குமே பதில் கூற முடியாமல் எதிர்த்தரப்பினர் திணறிப் போனார்கள் என்பதுதான் உண்மை.

காங்கிரசின் நரசிம்மராவ் - மன்மோகன் சிங் அறிமுகப்படுத்தி, அவர்களும் ஐக்கிய முன்னணி அரசின் சிதம்பரமும் அமல்படுத்திய புதிய பொருளாதாரக் கொள்கையைத்தான்

விவசாயிகளின் கடனை ரத்து செய்யக் கோரி எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்கள் நடத்திய திடீர் ஆர்ப்பாட்டம்.



www.padippakam.com

மத்தியில் தேசிய ஜனநாயகக் கூட்டணி மற்றும் மாநிலத்தில் திமுக அரசுகள் கடைபிடிக்கின்றன என்பதுதான் வாஜ்பாய், கருணாநிதியின் வாதம். இதற்கு எதிர்த்தரப்பினர் என்ன பதில் சொல்ல முடியும்?

தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்பதை அடிப்படையாகக் கொண்ட புதிய பொருளாதாரக் கட்டுமான மறுசீரமைப்புச் சீர்திருத்தம் என்கிற கொள்கையை ஓட்டுக் கட்சிகள் அனைத்துமே ஏற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, காங்கிரசு மற்றும் பாரதீய ஜனதா ஆகிய நாட்டின் இரண்டு பெரிய ஆளும் வர்க்கக் கட்சிகளிடையே புதிய பொருளாதாரக் கொள்கையில் எவ்வித வேறுபாடும் கிடையாது. இதன் அடிப்படையிலான நாடாளுமன்ற நடவடிக்கைகள், முடிவுகள் அனைத்திலும் ஒன்றுபட்டு நிற்கின்றன.

காங்கிரசு கட்சி, பொருளாதாரச் சீர்திருத்தத்துக்கு எதிரானதல்ல, அரசு மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையையும் ஆதரிக்கும் என்று திரும்பத் திரும்ப உறுதியளித்து வந்திருக்கிறது. மானிய வெட்டு, விலையேற்றத்துக்கு எதிரான போராட்டங்களை காங்கிரசு நடத்திக் கொண்டிருக்கும்போதே முன்னாள் நிதி அமைச்சரும், காங்கிரசின் மக்களவைத் தலைவருமான மன்மோகன்சிங், "மானிய வெட்டு நடவடிக்கை சரியானது, அவசியமானதுதான்" என்று பேசியுள்ளார். அது அவரது சொந்துக் கருத்துத்தான் என்றும், அவசியமான மானிய வெட்டை ஆதரிப்பதாகவும் சந்தர்ப்பவாத விளக்கம் கொடுத்தது, காங்கிரசு.

போலி கம்யூனிஸ்டுகள் கூட '90-களின் ஆரம்பத்தில் புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்த்து மூன்று "பாரத் பந்த்"கள் அறிவித்தனர். 1992 ஆக-15 இரண்டாவது சுதந்திரப் போர் பிரகடனத்தை அறிவித்தது. ஆனால், அந்த ஆக-15 அன்று இரண்டு கட்சிகளுமே தலைமறைவாகி - ஓடி ஒளிந்து கொண்டன. அதன் பிறகு ஆறாண்டுகளாக எந்த விதப் போராட்டமும் இல்லை. நரசிம்ம ராவ், தேவே கவுடா, குஜரால் அமைச்சரவை முடிவுகளை மறைமுகமாகவும் நேரடியாகவும் ஆதரித்தன. இப்போதும் புதிய பொருளாதாரக் கொள்கையைத்தான் ஆளும் கேரளா, மே.வங்கம், திரிபுராவில் அமலாக்கிக் கொண்டு, பா.ஜ.க. அரசுக்கு எதிராக வெறும் சவடால் என்கிற முறையில் மட்டுமே போராடுகின்றனர். சிதம்பரம், யெஸ்வந்த் சின்கா பட்ஜெட்டுகள் எல்லாம் இதுவரை எவ்வித எதிர்ப்புமின்றி அனைத்துக் கட்சி ஆதரவுடன்தான் நிறைவேறின. இவையும் புதிய பொருளாதாரக் கொள்கை அடிப்படையிலானவைதாம்.




விலைவாசி உயர்வைக் கண்டித்து 'மார்க்சிஸ்டு' கட்சியின் இளைஞர் அமைப்பு நடத்திய ரயில் மறியல்: கண்துடைப்பு போராட்டம்!

அப்படி இருக்கும்போது, புதிய பொருளாதாரக் கொள்கையின் ஓர் அங்கமாகிய மானியங்கள் வெட்டு, விலையேற்றத்தை மட்டும் எதிர்ப்பதாகவும், கைவிடக்கோருவதாகவும் போராடுவது ஏழை எளிய மக்கள் மீதான உண்மையான கரிசனை காரணமாகவா? அல்லது ஓட்டுக் கட்சி அரசியலில் தவிர்க்க முடியாத நாடகமா? ஆளும் கட்சிகளாக இருக்கும் போது தாங்களே மானியக் குறைப்பு, விலையேற்றத்துக்குக் காரணமாக இருந்து விட்டு, எதிர்க்கட்சிகளாகப் பதவியிழந்தவுடன், "ஏழை மக்கள் வயிற்றிலடிக்காதே" என்று கூச்சல் போடுவது யாரை ஏமாற்றுவதற்காக?

மானியக் குறைப்பு, விலையேற்றத்துக்கான காரணம், அடிப்படை நோக்கம் ஏழை - எளிய மக்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால், ஓட்டுக் கட்சிகள் அனைத்திற்கும் தெரியும். உலகவங்கி, சர்வதேச நிதி நிறுவனம், உலக வர்த்தக நிறுவனம் ஆகிய ஏகாதிபத்திய அமைப்புகள் வகுத்துக் கொடுத்து, அவற்றின் மேற்பார்வையில் அமலாக்கப்பட்டுவருவதுதான் புதிய பொருளாதாரக் கொள்கை. அதன் கீழ் பொதுத்துறைத் தொழில்களுக்கு அரசு புதிய முதலீடுகள் போட்டு ஆதரவு தரக்கூடாது. அதன் பங்குகளைத் தனியாருக்கும் அந்நியருக்கும் பிரித்து விற்றுத் தனியார்மயமாக்கிவிட வேண்டும். பெருமளவு ஆட்குறைப்பு செய்ய வேண்டும். இந்தியத் தொழில்களில் அந்நியக் கம்பெனிகள் முதலீடு செய்வதற்கான தடைகள் எல்லாம் நீக்கப்பட வேண்டும். மின்சாரம், சாலை அமைப்பு, சுகாதாரம், கல்வி, நகர நிர்வாகம் போன்ற அனைத்தும் தனியார்மயமாக்கப்பட்டு, அவற்றுக்கெல்லாம் அரசு செலவுகள் நிறுத்தப்பட வேண்டும். மின்சாரம், உரம், கல்வி, ரேசன் பொருட்கள் போன்றவற்றுக்கான அரசு மானியங்கள் நிறுத்தப்படவேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால் அரசுமுட்டுக் கொடுத்து நிறுத்தப்பட்டிருக்கும் பொருளாதாரக் கட்டுமானத்தைக் கலைத்துவிட்டு, சுதந்திரச் சந்தைப் பொருளாதாரத்துக்குத் திறந்துவிடவேண்டும். அதாவது மின்சாரமோ, சுகாதாரமோ, கல்வியோ, உணவுப் பொருட்களோ தொழில் முனைவர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் இடையிலான பொருளாதாரப் பிரச்சினையாக விடப்பட வேண்டும். இடையில் நுகர்வோர்களுக்கு சார்பாக அரசு புகுந்து மானிய உதவி எதுவும் செய்யக் கூடாது. அதற்காகச் செலவிடும் பணத்தை தொழில் முனைவோருக்குக் கொடுத்து தொழில்களைப் பெருக்கினால், வேலைவாய்ப்புப் பெருகும். மக்களது வாங்கும் சக்தி பெருகும். அதன் மூலம் உருவாகும் சந்தைதான் விலைவாசியைத் தீர்மானிக்க வேண்டும் என்பதுதான் புதிய பொருளாதாரக் கொள்கை.

இதைப் புரிந்து கொண்டு, ஏற்றுக் கொண்டுள்ள ஓட்டுக் கட்சிகள், ஓட்டுப் பொறுக்கும் நோக்கத்தோடு ஏழை - எளிய மக்கள் நலனில் அக்கறையுள்ளவர்களைப் போல மானிய வெட்டு, விலையேற்றத்தை மட்டும் எதிர்ப்பதாக இரட்டை வேடம் போட்டுப் போராடுகின்றனர். கம்யூனிசக் கொள்கைக்குத் துரோகம் செய்யும் போலி கம்யூனிஸ்டுகள் கூட சோசலிச சந்தைப் பொருளாதாரத்தையே தமது கொள்கையாக ஏற்றுக் கொண்டு விட்டனர். இவர்கள் அனைவருமே கட்டுப்படுத்தப்பட்ட, மையரீதியில் திட்டமிடும் பொருளாதாரமே செயற்கையானது, எல்லாக் கேடுகளுக்கும் காரணம் என்றும், அதற்கு மாறாக, சந்தைப் பொருளாதாரமே சிறந்தது, இயற்கையானது என்ற கொள்கையை ஆதரிப்பவர்கள். அந்த அடிப்படையிலான பொருளாதாரக் கொள்கையைத்தான் மத்திய - மாநில அரசுகள் எதுவானாலும் கடந்த பத்தாண்டுகளாகக் கடைப்பிடிக்கின்றன. இது எல்லாமே மக்கள் விரோதக் கொள்கைதான். ஆனால், ஓட்டுப் பொறுக்குவதற்குத் தடையாகிவிடும் என்பதற்காக மானியவெட்டு, விலையேற்றம் ஆகிய நடவடிக்கைகள் மட்டும் மக்கள் விரோதமானவை என்று கூறி கைவிடக் கோரலாமா? தேரை வடக்கே ஓட்டிக் கொண்டிருக்கும் போதே தெற்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்று சாதிக்க முனைவது வேடிக்கைக் கூத்து தவிர வேறென்ன?

● பச்சையப்பன்


படிப்பகம்

www.padippakam.com

## திருச்சி - பொன்மலை போலீசு நிலையத்தில் இளைஞர் எரித்துக் கொலை

# கொலைகார போலீசுக்கு எதிராக பு.மா.இ.மு.வின் போராட்டம்!

போலீசு என்பது சட்டபூர்வ கிரிமினல் கும்பல்; சீருடை தரித்த பயங்கரவாதிகள்; மனிதக் கறி தின்னும் கொடிய மிருகங்கள் - இந்த உண்மைகளை திருச்சி மாநகரப் போலீசு தனது கொலை வெறியாட்டத்தின் மூலம் மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளது. திருச்சி பொன்மலை போலீசு நிலையத்தில் கடந்த ஏப்ரல் 15-ந் தேதியன்று காலை நித்தியானந்தன் என்ற இளைஞர், போலீசு வெறியர்களால் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டுள்ளார். இதை மூடிமறைத்து, அவர் அவமானம் தாங்காமல் தீக்குளித்து மாண்டதாகப் போலீசுக் கொலைகாரர்கள் கதைகட்டி வருகின்றனர்.

திருச்சி சங்கிலியாண்டபுரத்தைச் சேர்ந்தவர், சுரேஷ் பாபு என்ற இளைஞர். இவர் மீது சில ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட ஒரு கொலை வழக்கு நிலுவையில் உள்ளது. இவர் திருச்சியின் பிரபல ரவுடியான கொக்கு ஜேம்சின் கூட்டாளிகளுடைய முன்னாள் நண்பராவார். ஆனால், இவர் எந்த ரவுடித்தனங்களிலும் ஈடுபடாமல், ஒரு பட்டறையில் வேலை பார்த்து வந்தார்.

திருச்சி மாநகரில் ரவுடிகளை ஒழிப்பேன் என்று அண்மைக் காலமாக கமிசனர் திரிபாதி சவடால் அடித்து பரபரப்பூட்டி வருகிறார். இதையொட்டி முன்னாள் ரவுடிகள் மற்றும் அவர்களது கூட்டாளிகளைப் பிடிப்பது, தேடுதல் வேட்டை நடத்துவது என்று போலீசார் சினிமா பாணியில் தமது சூரத்தனங்களைக் காட்டி வருகின்றனர். திருச்சியில் ஒரு பழ வியாபாரி கொலையை ஒட்டி பிச்சைமுத்து, கொக்கு ஜேம்ஸ் ஆகிய ரவுடிகளைப் பிடிக்கக் கிளம்பிய போலீசார், ஜேம்சின் கூட்டாளிகளுடைய நண்பர் என்று காரணம் காட்டி சுரேஷ் பாபுவை இழுத்துச் சென்று கொட்டடியில் அடைத்தனர். தனது தம்பி சுரேஷ் பாபுவை விடுவிக்குமாறு அன்றிரவே நித்தியானந்தன் போலீசு நிலையம் வந்து கெஞ்சியுள்ளார்.

மறுநாள் போலீசு நிலையத்துக்கு வந்து கெஞ்சிய நித்யானந்தன், தனது தம்பிக்கு சாப்பாடு எதுவும் போலீசார் கொடுக்கவில்லை என்பதை அறிந்து, தனது தம்பியோடு போலீசாருக்கும் சேர்த்துச் சாப்பாடு வாங்கிக் கொடுத்துள்ளார். பின்னர் ஆய்வாளர் காதர் பாட்சா, துணை ஆய்வாளர் தேவராஜன் மற்றும் கியூ பிரிவு போலீசு வீரசிங்கம் ஆகியோரிடம் தனது தம்பி எந்த வம்பு தும்புக்கும் போகவில்லை என்று கூறி விடுவிக்குமாறு வேண்டியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அவர்கள் நித்தியானந்தனை அடித்து வெளியே தள்ளிவிட்டனர்.

சிறிது நேரத்தில், தனது அண்ணன் வாங்கி வந்த உணவை சுரேஷ் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, "டேய்! அதே பாருடா, உன் அண்ணன் எரியுறாண்டா!" என்று போலீசார் கூறவே, பதறியபடி காப்பாற்ற ஓடிய சுரேஷைப் பிடித்து அடித்து போலீசார் கொட்டடியில் வைத்துப் பூட்டினர். உயிருடன் எரித்துக் கொல்லப்பட்ட தனது அண்ணனின் உடலருகே சென்று பார்க்கவும் அவர் அனுமதிக்கப்படவில்லை. நித்தியானந்தனின் வீட்டுக்கும் தகவல் கொடுக்கவில்லை. எரிந்த உடலை பெற்றோருக்குக் கூட காட்டாமல், பிரேதப் பரிசோதனை செய்துள்ளனர். உறவினர்களுக்குக் கூடத் தகவல் சொல்ல விடாமல், நித்தியானந்தன் குடும்பத்தாரை மிரட்டி தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு, போலீசாரே முன்னின்று சுடுகாட்டில் பிணத்தை எரித்துள்ளனர். அதன் பிறகே விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்ட சுரேஷ் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சுரேஷை விடுவிக்குமாறு கெஞ்சிய நித்தியானந்தம் மீது ஆத்திரமடைந்த போலீசு வெறியர்களான காதர் பாட்சா, தேவராஜன், வீரசிங்கம் ஆகியோர் அவரை மிருகத்தனமாகத் தாக்கியதில் அவர் மரணமடைந்துள்ளார். அவர் மீது மண்ணெண்ணெய் ஊற்றி போலீசு வளாகத்திலேயே இக்கொலைகாரர்கள் எரித்துள்ளனர்.

இதை மூடிமறைத்து, "தனது தம்பியைப் பார்க்க வரும்போதே மண்ணெண்ணெய் கேனுடன் வந்தார்; அவமானம் தாங்காமல், திடீரென உடலெங்கும் எண்ணெயை ஊற்றிக் கொண்டு தீக்குளித்து மாண்டார்" என்று இக்கொலைகாரர்கள் கதை கட்டுகின்றனர். தற்கொலை செய்து கொள்ளுமளவுக்கு நித்தியானந்தம் மனக்குழப்பத்தில் இல்லை; கோழைத்தனமானவரும் இல்லை. அவமானத்தால் புலம்பவுமில்லை. 'தீக்குளித்த' அவர் தீயின் வெம்மை தாளாமல் ஐயோ என்று அலறவுமில்லை. படுத்த நிலையிலேயே சலனமின்றி அமைதியாக எரிந்துள்ளார் என்றால் போலீசாரின் அறிக்கையை எந்த முட்டாளும் நம்ப மாட்டான். மேலும், 'தீக்குளித்த' அவரைக் காப்பாற்ற போலீசார் முயற்சிக்காதது, காப்பாற்ற ஓடிய அவரது தம்பியைத் தடுத்துக் கொட்டடியில் அடைத்தது, அவசரமாகப் பிரேதப் பரிசோதனை நடத்தி, குடும்பத்தாரை மிரட்டி பிணத்தைப் புதைக்காமல் போலீசாரே முன்னின்று சுடுகாட்டில் எரித்தது, இச்சம்பவம் பற்றி வாய்திறந்து பேசவே அஞ்சுமளவுக்கு நித்தியானந்தத்தின் பெற்றோரும் உற்றாரும் மிரட்டப்பட்டு வருவது - ஆகிய அனைத்தும் இது போலீசு வெறியர்கள் நடத்திய படுகொலைதான் என்று நிரூபித்துக் காட்டுகின்றன.

**நித்தியானந்தத்தை உயிரோடு எரித்துக் கொன்ற போலீசாரைத் தண்டிக்கக் கோரி, திருச்சியில் பு.மா.இ.மு. நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம்.**




படிப்பகம்

www.padippakam.com

சங்கிலியாண்டபுரம் குடியிருப்புப் பகுதியில் சுற்றுச் சூழல் பாதிப்பை ஏற்படுத்திய கழிவுப் பொருளை அகற்றக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்திய புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி தோழர்களை பேச்சு வார்த்தைக்கு அழைத்துச் சென்று, போலீசு நிலையக் கதவுகளை அடைத்துவிட்டு தோழர்களின் கை, கால், மண்டையை உடைத்து, அன்று வெறியாட்டம் போட்டவர்கள் இதே போலீசு மும்மூர்த்திகள்தான்! இப்போலீசு வெறியர்களைக் கண்டித்து பு.மா.இ.மு. நடத்திய பொதுக் கூட்டத்திலேயே, இவர்கள் மீது நடவடிக்கை எடுத்துத் தண்டிக்காவிடில், நாளை இவர்கள் மனிதக் கறி தின்னும் மிருகங்களாக மாறிக் கொலை வெறியாட்டம் போடுவார்கள் என்று எச்சரிக்கப்பட்டது. ஆனால், அன்று போலீசுத் துறையும் தமிழக அரசும் இவர்கள் மீது நடவடிக்கை ஏதுமின்றிப் பாதுகாத்து, இவர்களது வெறியாட்டத்தை ஊக்குவித்தது. அதன் விளைவு, இன்று இவர்கள் ஒரு அப்பாவி இளைஞனைக் கொன்று போலீசு நிலையத்திலேயே எரிக்கவும் துணிந்து விட்டனர்.

“இக்கொலைகாரர்களைப் பகிரங்கமாக விசாரித்துத் தூக்கில் போடு!'' என்று சம்பவத்தன்றே பு.மா.இ.மு.வினர் திருச்சி நகரெங்கும் சுவரொட்டிகளை ஒட்டினர். பீதியடைந்த பொன்மலை போலீசார் அடுத்த சில மணி நேரத்திலேயே அவற்றைக் கிழித்தெறிந்தனர். இதைத் தொடர்ந்து ஏப்ரல் 19-ந் தேதியன்று இப்போலீசு படுகொலையைக் கண்டித்து பு.மா.இ.மு. பேரணியும் ஆர்ப்பாட்டமும் நடத்தியது.

காக்கிச் சீருடை அணிந்து காதர் பாட்சா, தேவராஜன் என்ற பெயருடன் இருவரும், இவர்களுக்கு ஆணையிடுபவராக வீரசிங்கம் என்ற பெயருடன் ஒருவரும் வேமிட்டுக் கொண்டு, பெரிய எலும்புத் துண்டைக் கடித்தபடியே ஊர்வலத்தில் வந்தனர். இது மனிதக் கறி தின்னும் போலீசு வெறியர்களை மக்களுக்கு அடையாளம் காட்டுவதாக அமைந்தது. இம்மூன்று கொலைகாரர்களையும் தூக்கிலிடுமாறும், கொலைகார போலீசிடமிருந்து மக்களைப் பாதுகாக்குமாறும், மகனைப் பறி கொடுத்த நித்தியானந்தத்தின் பெற்றோருக்கு நட்ட ஈடு வழங்குமாறும் விண்ணதிர முழக்கங்களுடன் நடந்த இப்பேரணியும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக நடந்த ஆர்ப்பாட்டமும் மக்களிடம் பெருத்த ஆதரவைப் பெற்றதோடு, புதிய நம்பிக்கையையும் அவர்களிடம் ஏற்படுத்தியது.

இப்போராட்டத்தைக் கண்டு பீதியடைந்த போலீசுத் துறையும் அதிகார வர்க்கமும் கொலைகார போலீசாரை தண்டனையின்றித் தப்புவிக்க விசாரணை நாடகமாடி வருகின்றனர். இம்மோசடிகளை அம்பலப்படுத்தி பு.மா.இ.மு. மக்களிடம் பிரச்சாரத்தைத் தொடர்ந்து வருகிறது.

தகவலும் படங்களும்:
புரட்சிகர மாணவர் -
இளைஞர் முன்னணி, திருச்சி.




# வாசகர் கடிதம்

• புதிய ஜனநாயகம் மே இதழ் படித்தேன். செய்திகள், கட்டுரைகள் அனைத்தும் உண்மையானது மட்டுமல்ல, மக்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமான தகவல்கள் ஆகும். நாட்டின், உலகின் சுரண்டல் மேலாதிக்கவாதிகளின் சுயநல ஏமாற்று சதிச் செயல்களையும், ஏழைகள் - உழைக்கும் மக்களின் துன்ப துயரங்களையும் நீங்கள் சிறப்பாக வெளியிட்டு வருவதை உணர்வுபூர்வமாகவும், உளப்பூர்வமாகவும் பாராட்டுகிறேன். புதிய ஜனநாயகம் போன்ற ஒரு சில இதழ்கள் இல்லாவிட்டால், வெகுமக்களின் இருண்ட வாழ்க்கைப் பகுதியை அறிய முடியாமலும் சுரண்டல் கும்பலின் ஆடம்பர சொகுசு வாழ்க்கை பற்றிய செய்திகளை மட்டுமே அறிந்திருக்கவும் முடியும். புதிய ஜனநாயகத்தின் சமுதாயப் பணிக்கு எனது நன்றி! அம்பேத்கரை வைத்துப் பிழைப்பு நடத்தும் தலித் தலைவர்களை அட்டைப்படத்தில் தோலுரித்துக் காட்டியது அருமை. இந்திய இராணுவத்தின் தேசபக்தப் படுகொலைகள் என்ற கட்டுரைமூலம் இந்திய அரசின் முகத்திரையைத் துணிவோடு கிழித்தெறிந்தமைக்குப் பாராட்டுக்கள்!

– செம்மலர் மா. நடராசன், அறந்தாங்கி.

• புதிய ஜனநாயகம் இதழின் கட்டுரைகள் அனைத்தும் மிக அருமை. எங்கள் மாநிலமான பாண்டிச்சேரியில் கண்ணன், ஜானகிராமன், வைத்தியலிங்கம், ரெங்கசாமி - என ஊழல் கிரிமினல் அரசியல் தலைவர்கள் பலர் உள்ளனர். காவல்துறை இவர்களின் அடியாள் படையாகச் செயல்படுகிறது. இந்த மக்கள் எதிரிகளை அடையாளம் காட்டும் வகையில் புதிய ஜனநாயகம் வெளிவர விரும்புகிறேன்.

– ஆறுமுகம், பாண்டிச்சேரி.

• பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களை அசிங்கம் செய்ய வேண்டும் என்பதற்காகவே தாங்கள் முன் அட்டையில் அம்பேத்கர் படத்தில் இரட்டை விரல் காட்டுவது போலவும், உதயசூரியனைக் குறிக்கும் வகையில் விரல்களைக் காட்டுவது போலவும் அசிங்கப்படுத்தி உள்ளீர்கள். திருமாவளவனும் கிருஷ்ணசாமியும் ஓட்டுப் பொறுக்கிகள் என்பதற்காகத் தூய்மையான ஒரு தேசியத் தலைவரை அசிங்கப்படுத்தியதற்காக வருத்தப்படுகிறேன்.

– முருகையன், ஒலைப்பாடி
(பெரம்பலூர்)

*(திருமாவளவனும், கிருஷ்ணசாமியும் தமது ஓட்டுப் பொறுக்கி அரசியலுக்கு அம்பேத்கரை எப்படிக் கேடாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதை விளக்கும் வகையில்தான் அட்டைப் படத்தை வெளியிட்டுள்ளோமே தவிர, அசிங்கப் படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அல்ல.*

– ஆசிரியர் குழு.)

• பொதுவாக வழக்கம்போலவே எல்லாக் கட்டுரைகளுமே சிறப்பு என்றாலும், மெக்சிகோ மாணவர் போராட்டச் செய்தி மூலம் மாணவர் - இளைஞர் பகுதிக்கு தனிக் கவனம் காட்டியது சிறப்பானது. கருப்புப் பணம் - தீராத நோய் என்ற கட்டுரை புதிதாய்ப் படிப்பவர்கள் எளிதாய்ப் புரிந்து கொள்ளும் வகையில் கருப்புப் பணம் பற்றி விளக்கத்தோடு அமைந்துள்ளது. தலையங்கமானது அம்பேத்கர் பெயரைச் சொல்லி அரசியல் நடத்தும் சுயநலவாதிகளை அம்பலப்படுத்தியுள்ளது. விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தைச் சேர்ந்த பல மாணவர்கள் இப்பொழுது தங்கள் தலைமையின் பித்தலாட்ட முகத்தை உணரத் தொடங்கியுள்ளனர். இந்நிலையில், “திருமாவளவன் வாழப்பாடியுடன் கூட்டணி முயற்சி'' என்ற செய்தி அவர்களை மேலும் கலங்கடித்துள்ளது. மனம் வெதும்பி மாற்று வழியைப் பற்றி அவர்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்.

– மகேஷ், திருச்சி.

• “அம்பலமாகும் அதிரடிப் படையின் அட்டூழியங்கள்'' என்ற கட்டுரையைப் படித்தேன். நக்கீரன், நந்தன் ஆகிய பத்திரிகைகள் இதே செய்தியை வெளியிட்டுள்ளதற்கும், நீங்கள் வெளியிட்டுள்ளதற்கும் பெருத்த வித்தியாசம் உள்ளது. அப்பத்திரிகைகள் வெறும் செய்தியாகவே வெளியிட்டன. ஆனால், நீங்கள் மக்களுக்கு விழிப்புணர்ச்சியும் போலீசுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையிலும் எளிய நடையில் வெளியிட்டுள்ளீர்கள். தங்களது சமூகப் பணிக்கு எனது நன்றி!

– செ. பாலமுருகன், தையூர் (செஞ்சி)

Published and Owned by R. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, IInd Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

PUTHIYA JANANAYAGAM
(TAMIL FORTNIGHTLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER
FOR INDIA UNDER NO. 42646/85
Regd. No. TN/Chief.PMG- 544 / 2000
www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா

"மிஸ். இந்தியா" தொடங்கி "மிஸ். பிள்ளையார் கோயில் தெரு" என அழகிப் போட்டி இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் பரவி வருகிறது. இதோ, இந்தப் படத்தில் லக்னோ நகரில் நடந்த சிறுமிகளுக்கான அழகிப் போட்டிக்காக, சிறுமிகள் சிங்காரிக்கப்படுவதைத்தான் நாம் பார்க்கிறோம். நீச்சல் உடை போட்டி தவிர, பிற எல்லா போட்டிகளும் நடத்தப் பெற்று, "மிஸ். லக்னோ" தேர்ந்தெடுக்கப்பட்டராம்!



உலக அழகிப் போட்டி தொடங்கி உள்ளூர் அழகிப் போட்டி வரை நடத்தும் அனைவரும், "அறிவுத் திறனைச் சோதித்து தான் அழகிகளைத் தேர்ந்தெடுக்கிறோம்" என்று கூறி, அழகிப் போட்டிக்கு எதிராகக் கிளம்பும் எதிர்ப்புகளைச் சமாளிக்கப் பார்க்கிறார்கள். சமீபத்தில் "மிஸ். யூனிவர்ஸ்" பட்டம் பெற்ற லாரா தத்தா, "அழகிப் போட்டி, பெண்கள் அதிகாரத்தை அடைவதற்கான வழி" என்று கூறித்தான் பட்டத்தைத் தட்டிச் சென்றாராம்.

உலக அழகிப் போட்டியில் வெல்லும் பெண்கள், ஒரு வருட காலத்திற்கு அழகிப் போட்டியினை நடத்தும் பன்னாட்டு நிறுவனத்தின் நவீன அடிமைகளாக மாற்றப்படுகிறார்கள். உள்ளூர் அழகிகளுக்கு இந்த நிபந்தனை / நிர்பந்தம் இல்லையென்றாலும், இவர்கள் உலக அழகிகளைத்தான் நவீன, முற்போக்கான பெண்ணின் அடையாளமாகக் காணுகிறார்கள். "என்ன உடை உடுத்துவது, என்ன உணவைத் தின்பது?" என்ற சாதாரண உரிமைகளைக் கூடப் பறிகொடுத்து விட்டு நிற்கும் உலக அழகிகளை, நவீன முற்போக்கான பெண்ணாகப் பார்ப்பதைவிட முட்டாள்தனம் வேறெதுவும் இருக்க முடியாது.



அழகிப் போட்டிகள், ஏகாதிபத்தியம் பரப்பும் கலாச்சார சீரழிவு என்றால், இந்தப் படம் ஆணாதிக்க இந்திய சமூகத்தின் கோர முகம். பேராசை பிடித்த கணவனால் வரதட்சணைக்காக உயிரோடு எரிக்கப்பட்டு, பெங்களூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார், இந்தப் பெண். உலக அழகி லாரா தத்தாவை தந்த பெங்களூர் நகரில் கடந்த மூன்று ஆண்டுகளில் நடந்த வரதட்சணைக் கொலைகள் 577. 1998-ஆம் ஆண்டில் இந்திய அளவில் வரதட்சணைக்காகக் கொல்லப்பட்ட பெண்களின் எண்ணிக்கை 6917.

பெண்களைத் தெய்வமாக, சக்தியாக, தாயாக மதிக்க வேண்டும் எனப் போதிக்கப்படும் நாட்டில் தான், அரைகுறை உடையுடன் அழகிப் போட்டிகள் நடைபெறுவதை அரசு அனுமதித்து வருகிறது. வரதட்சணைக் கொலைக் குற்றவாளிகள் பெரும்பாலும் அரசினால் தண்டிக்கப்படுவதில்லை. அழகிப் போட்டி, வரதட்சணைக் கொலை இரண்டுக்கும் இடையே இருக்கும் பொதுவான இழை ஆணாதிக்கம்.

ஏகாதிபத்தியவாதிகள், அழகிப் போட்டியைப் பெண் விடுதலையாகக் காட்டி, நடுத்தர வர்க்கப் பெண்களை தங்களின் இலாபத்திற்காக வீழ்த்தி வருகிறார்கள். மதவாத பிற்போக்குக் கும்பலோ அழகிப் போட்டியிலுள்ள ஆபாசத்தை மட்டும் அம்பலப்படுத்தி, "நமது இந்தியப் பண்பாடு" என்ற போர்வையில், ஆணாதிக்க ஒடுக்கு முறையில் இந்தியப் பெண்களை அமுக்கிவிட முயலுகின்றன.

அழகிப் போட்டிகளின் கவர்ச்சி ஒருபுறம்; "கல்லானாலும் கணவன்" என்ற போதனையின் கோர முகம் மறுபுறம். இந்தியப் பெண்களே, நீங்கள், கவர்ச்சியில் மயங்கும் விட்டில் பூச்சிகளா? பத்தாம்பசலித்தனமான கொள்கையின் பலிகடாக்களா? இல்லை, இவை இரண்டையும் எதிர்த்து பெண் விடுதலை, சம உரிமைக்காகப் போராட முன்வரும் போராளிகளா?

படிப்பகம்